



## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# திரு. எடப்பாடி K. பழனிசாமி

## அவர்களின்

# எழுச்சிமிகு உரைகள்

**16.02.2017 - 19.05.2017**



# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின்

# எழுச்சிமிகு உரைகள்

(16.02.2017 – 19.05.2017)

சிறப்பு வெளியீடு எண். 11

# தமிழரசு

இலவச வெளியீடு

மே 2017

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி,
சென்னை – 600 113.

# பொருளடக்கம்


| வ. எண். | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | சென்னை, கடலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் ரூ.1,486.12 கோடி மதிப்பீட்டில் நிறைவுபெற்ற பணிகள், புதிய திட்டப்பணிகள்! (04.03.2017) | 1 |
| 2. | மீனவர்களை பாதுகாப்பதில் தமிழக அரசு எப்போதும் விழிப்புடனும், விவேகத்துடனும் செயல்படும்! (06.03.2017) | 9 |
| 3. | சேலம் மண்டலத்திற்கு உட்பட்ட சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ரூ.330.84 கோடி மதிப்பீட்டில் 3,971 திட்டப்பணிகள்! (07.03.2017) | 18 |
| 4. | திருச்சி மண்டலத்திற்கு உட்பட்ட 8 மாவட்டங்களில் ரூ.623.56 கோடி மதிப்பீட்டில் 2,603 நிறைவு செய்யப்பட்ட திட்டப் பணிகள்! (07.03.2017) | 27 |
| 5. | திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ரூ.235.61 கோடி மதிப்பீட்டில் 1,098 நிறைவு செய்யப்பட்ட திட்டப்பணிகள்! (08.03.2017) | 40 |
| 6. | மதுரை மண்டலத்திற்கு உட்பட்ட 6 மாவட்டங்களில் ரூ.1,004.13 கோடி மதிப்பீட்டில் 6,874 திட்டப்பணிகள்! (08.03.2017) | 54 |
| 7. | வெளிமாநிலத்தில் உயர்கல்வி படிக்கச் செல்லும் மாணவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க அரசு ஏற்பாடு செய்யும்! (22.03.2017) | 68 |

| வ. எண். | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|
| 8. | ரூ.9.86 கோடி செலவில் திண்டுக்கல் மாவட்டத்தில் நல்லதங்காள் ஓடையின் குறுக்கே ஏரி அமைக்கும் பணியை விரைந்து முடிக்க நடவடிக்கை! (24.03.2017) | 72 |
| 9. | உச்சநீதிமன்றத்தில், காவேரி மேலாண்மை குறித்து நமக்கு சாதகமான தீர்ப்பு கிடைக்கும்! (24.03.2017) | 74 |
| 10. | 2011–2016 வரை விதி 110இன் கீழ் அறிவிக்கப்பட்ட 879 அறிவிப்புகளில் 527 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது! (24.03.2017) | 77 |
| 11. | தமிழ்நாடு காவல்துறையின் திறனை மேலும் உயர்த்த நீங்கள் அனைவரும் பாடுபடவேண்டும்! (31.03.2017) | 80 |
| 12. | ரூ.330 கோடி செலவில், 1.89 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கும் திட்டம் துவக்கம்! (01.04.2017) | 94 |
| 13. | நாட்டிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்க ஒவ்வொரு அரசுப் பணியாளரும், ஆசிரியரும் என்னோடு இணைந்து செயலாற்ற வேண்டும்! (01.04.2017) | 104 |
| 14. | சென்னை மாநிலக்கல்லூரி பல நூற்றாண்டுகள் கல்விப்பணியாற்றி சாதனையாளர்களை உருவாக்கி தமிழ்நாட்டிற்கு தொடர்ந்து பெருமை சேர்க்கவேண்டும்! (18.04.2017) | 115 |
| 15. | தமிழக விவசாயப் பிரதிநிதிகளின் கோரிக்கைகள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் வலியுறுத்தப்படும்! (23.04.2017) | 128 |

| வ. எண். | உரை விவரம் | பக்கம் எண் |
| --- | --- | --- |
| 16. | நாட்டின் வளர்ச்சி, மாநிலங்களின் நிதி தன்னாட்சியில் மாநிலங்களுக்கு அதிக பங்களிப்பு இருக்க வேண்டும்! (23.04.2017) | 131 |
| 17. | மதுரை மண்டலத்திற்குட்பட்ட ஆறு மாவட்டங்களில் ரூ.1,004.13 கோடி மதிப்பீட்டில் 6,874 திட்டப்பணிகள் நிறைவு! (05.05.2017) | 157 |
| 18. | சென்னை மாநகரம், உலகத்தரம் வாய்ந்த பன்னாட்டு சுற்றுலா பயணிகளை கவர்ந்து ஈர்க்கும் வகையில் ஒரு நவீன நகரமாகத் திகழும்! (14.05.2017) | 167 |
| 19. | சுற்றுலாவுக்கு உகந்த, அமைதியான, பாதுகாப்பான இடமாக உதகை திகழ்கிறது! (19.05.2017) | 176 |

❖ ❖ ❖

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
04.03.2017 அன்று அரசு திட்டங்களை துவக்கி வைத்து
ஆற்றிய உரை:

## சென்னை, கடலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் ரூ.1,486.12 கோடி மதிப்பீட்டில் நிறைவுபெற்ற பணிகள், புதிய திட்டப்பணிகள்!




**மா**ண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி

இந்த இனிய விழாவிற்கு வருகைப் புரிந்துள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

வரவேற்புரை நிகழ்த்திய தலைமைச் செயலாளர் அவர்களே!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

தமிழ்நாடு அரசு உயர் அலுவலர்களே!

காவல்துறை அதிகாரிகளே!

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

வணக்கத்துக்குரிய பொதுமக்களே!

உங்கள் அத்தனை பேருக்கும் பணிவான வணக்கத்தை சமர்ப்பிக்கிறேன்.

மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக உலகமே போற்றும் அளவுக்கு உன்னத ஆட்சியை வழங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியின் தொடர் சாதனைகளாக, இன்று பல்வேறு அரசு திட்டங்களை தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பொதுமக்கள் பலன்அடையும் வகையில் நாட்டுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்வில் கலந்துகொள்வதில் பெருமிதம் கொள்கிறேன். இந்த அரிய வாய்ப்பை எனக்கு வழங்கிய, மறைந்தும் மறையாமல் எல்லோர் உள்ளங்களிலும் நிறைந்திருக்கிற மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வாழும் திசை நோக்கி மீண்டும் வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண எண்ணிலடங்கா திட்டங்களை உடனுக்குடன் நடைமுறைப்படுத்தி கடைகோடி மக்களும் பலனடையும் வகையில் செயலாற்றி முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விளங்கினார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எண்ணங்களை நிறைவேற்றும் வகையில், இத்திட்டங்களை இப்போது நான் தொடங்கி வைக்க அம்மா அவர்களால் பணிக்கப்பட்டிருப்பதாகவே உணர்கிறேன். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியின் தொடர்ச்சியாகவே, இத்திட்டங்களை மக்களுக்கு நாங்கள் அர்ப்பணிக்கிறோம்.



மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவியேற்று, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் முனைப்போடு, 2016ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலுக்கான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் தேர்தல் அறிக்கையில் மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவும், தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், பதவியேற்ற முதல் நாளிலேயே 5 சிறப்பு திட்டங்களுக்கான கோப்புகளில் நான் கையெழுத்திட்டேன். அதற்கான அரசாணைகளும் வெளியிடப்பட்டுள்ளது.

❖ பணியிடங்களுக்கும், பிற வேலைகளுக்கும் எளிதில் செல்லும் வகையில் ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் உழைக்கும் மகளிர் பயன்பெறும் வகையில் சுமார் ரூபாய் 200 கோடி செலவில் “அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தை”, அறிமுகப்படுத்தினோம்.

❖ ஆண்டொன்றுக்கு சுமார் ஆறு இலட்சம் தாய்மார்கள் பயனடையும்வகையில்,ஏழைக்கர்ப்பிணித்தாய்மார்களுக்கு வழங்கப்பட்டு வந்த டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி 12 ஆயிரம் ரூபாயிலிருந்து 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது,

❖ தமிழ்நாட்டில் மீனவர்களுக்கான தனி வீட்டுவசதி திட்டத்தைச் செயல்படுத்தும் விதமாக, ஒரு வீட்டிற்கு ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பில் 5 ஆயிரம் வீடுகள் கட்ட உத்தரவிடப்பட்டுள்ளது.

- வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர உதவித்தொகையை இருமடங்காக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 55 ஆயிரத்து 228 இளைஞர்கள் உயர்த்தப்பட்ட உதவித்தொகையினைப் பெறுவர்.

- மதுவிலக்கு படிப்படியாக அமல்படுத்தப்பட்டு, பூரண மதுவிலக்கு என்ற நிலை எய்தப்படும் என்ற அடிப்படையில் ஏற்கெனவே மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு, 500 மதுபானக் கடைகள் மூடப்பட்டன. அதனைத்தொடர்ந்து, இப்பொழுது மேலும் 500 மதுபானக் கடைகள் மூடப்பட்டுள்ளன.

- மாண்புமிகு அம்மாவின் ஆசியோடு பதவியேற்ற அரசு குறுகிய நாட்களிலேயே மேலும் பல திட்டங்கள் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் நடப்பாண்டு பருவ மழை பொய்த்த காரணத்தினால் கடும் வறட்சி ஏற்பட்டு, விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களது இன்னல்களைப் போக்கும் வண்ணம், விவசாயிகளுக்கு ரூபாய் 2,247 கோடி பயிர் இழப்பு வறட்சி நிவாரண உதவித்தொகை வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

- மாநிலத்திலுள்ள நீர் ஆதாரங்களை திறம்பட மேலாண்மை செய்து, தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தி வறட்சியினை எதிர்கொள்ளவும் மழை நீரை சேமித்தும் புதிய நீர் ஆதாரங்களை உருவாக்கியும், பயனீட்டாளர்களின் பங்களிப்புடன் நீர் நிலைகளைப் புனரமைக்க பண்டைய “குடிமராமத்து” திட்டத்திற்கு புத்துயிர் அளித்து நடப்பு நிதியாண்டில் ரூபாய் 100 கோடி மதிப்பில் செயல்படுத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

- 28.01.2017 அன்று சென்னை எண்ணூர் பகுதியில் ஏற்பட்ட எண்ணெய் கசிவு காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 30 ஆயிரம் மீனவக் குடும்பங்களுக்கு தலா ரூ.5,000 வீதம்

இடைக்கால நிவாரணம், ரூ.15 கோடி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

❖ மத்திய அரசின் ஏழாவது ஊதியக் குழு பரிந்துரைத்துள்ள திருத்திய ஊதிய விகிதங்களை, தமிழக அரசுப் பணியாளர்களுக்கும் மாற்றியமைப்பதற்கு தேவையான பரிந்துரைகளை அளித்திட அலுவலர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய வளர்ச்சிப் பாதையில் செயல்படும் அம்மா அரசு, தொடர்ந்து அப்பாதையில் சென்று சீரிய திட்டங்களை செயல்படுத்தும். கேட்டு செய்கின்ற அரசு அல்ல இது. மக்களின் எண்ணங்களை அறிந்து கேட்காமலேயே செய்கின்ற அரசு அம்மா அரசு. சொன்ன திட்டங்களை மட்டுமல்ல, சொல்லாத திட்டங்களையும் நிறைவேற்றும் அம்மா அரசு.

“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு.”

என்ற திருக்குறளுக்கு ஏற்றாற்போல் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் ஆட்சி உலகமே போற்றும் அளவிற்கு சிறப்பாக அமைந்திருந்தது. அதனை உறுதிப்படுத்தும் வகையில்தான் பல்வேறு அரசு திட்டங்களின் தொடக்க விழாவாகவும், நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் திறப்பு விழாவாகவும் இப்போது இந்த விழா நடைபெற்று கொண்டிருக்கிறது.

சென்னை, கடலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், விழுப்புரம், வேலூர் ஆகிய 7 மாவட்டங்களில், ரூ.1,375 கோடியே 95 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவு செய்யப்பட்ட 7,506 திட்டப்பணிகளை தொடங்கி வைப்பதிலும், ரூ.111 கோடியே 3 இலட்சம் மதிப்பீட்டில் 2 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுவதிலும் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

❖ சென்னை மாவட்டத்தில் அயோத்தியா குப்பத்தில் ரூ.81 கோடியே 48 இலட்சம் செலவில் 1,128 குடிசை மாற்று

வாரிய குடியிருப்புகள் உட்பட மொத்தம் ரூ.577 கோடியே 34 இலட்சம் மதிப்பீட்டில், 1,583 பணிகள் மக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

❖ கடலூர் மாவட்டத்தில், ரூ.6 கோடியே 50 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மீன் இறங்கு தளங்கள், ரூ.7 கோடியே 16 இலட்சம் மதிப்பிலும் 110 KV துணை மின்நிலையம் உட்பட மொத்தம் ரூ.53 கோடியே 4 இலட்சம் மதிப்பீட்டில் 208 பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

❖ காஞ்சிபுரம் மாவட்டத்தில், இருங்காட்டுக்கோட்டை மற்றும் வல்லம், வடகல் பகுதியில் சரக்கு வாகன முனையம், ரூ.21 கோடியே 93 இலட்சம் மதிப்பீட்டிலும், ரூ. 57 கோடியே 14 இலட்சம் செலவில் நெடுஞ்சாலைத்துறை மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ள வண்டலூர் கூடுவாஞ்சேரிக்கிடையில் இரயில்வே மேம்பாலம் உட்பட மூன்று பாலங்கள், ஆக மொத்தம் ரூ.205 கோடியே 42 இலட்சம் செலவில் 96 பணிகள் மக்களின் பயன்பாட்டிற்காக தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

❖ திருவண்ணாமலை மாவட்டத்தில் ரூ.45 கோடியே 53 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள துணை மின்நிலையங்கள் இதர கட்டடங்கள் என மொத்தம் ரூ.192 கோடியே 17 இலட்சம் மதிப்பீட்டில் 3,112 பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.





- திருவள்ளூர் மாவட்டத்தில், ரூ. 71 கோடியே 44 இலட்சம் செலவில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மூலமாக கூடப்பாக்கம் கிராமத்தில் 1,024 குடியிருப்புகள் உட்பட மொத்தம் ரூ.285 கோடியே 4 இலட்சம் மதிப்பீட்டில் 1,731 பணிகள் மக்கள் பயன்படுத்த தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

- வேலூர் மாவட்டத்தில், இச்சிபுதூர் கிராமத்தில் ரூ.12 கோடியே 75 இலட்சம் செலவில் துணை மின்நிலையம் ஒன்றும், காவல் துறை வீட்டுவசதி வாரியம் மூலமாக ரூ.23 கோடியே 81 இலட்சம் செலவில் 164 குடியிருப்புகள் மற்றும் 4 காவல் நிலையங்கள் உட்பட ரூ.92 கோடியே 6 இலட்சம் மதிப்பீட்டில் 307 பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

- விழுப்புரம் மாவட்டத்தில், காவல் துறை வீட்டுவசதி வாரியம் மூலமாக ரூ.29 கோடியே 77 இலட்சம் செலவில் 92 குடியிருப்புகள் மற்றும் 4 காவல் நிலையங்கள் உட்பட ரூ.81 கோடியே 46 இலட்சம் மதிப்பீட்டில் 471 பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

ஆக, ரூ.1,486 கோடியே 12 இலட்சம் செலவில் நிறைவுப் பெற்ற பணிகளையும், புதிய திட்ட பணிகளையும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு தொடங்கி வைப்பதில் நான் பெருமை கொள்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 110 விதியின்படி அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எதுவும் செயல்படுத்தப் படுவதில்லை என்று எதிர்கட்சிகளின் குற்றச் சாட்டுகளில் உண்மையில்லை. இங்கே நான் தொடங்கி வைக்கின்ற திட்டங்களில் பெரும்பாலானவை 110 விதியின்கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்களாகும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 110 விதியின்கீழ் அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களும் தமிழ்நாட்டு மக்களின் தலைவிதியையே மாற்றியது என்பதை யாராலும் மறுக்கமுடியாது.

பதவியேற்ற இருவாரங்களிலேயே இத்தனை பணிகளையும் எங்களால் செய்ய முடிகின்றது என்றால் அதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவிஅம்மா அவர்கள் எங்களுக்கு அளித்த பயிற்சியும், வழிகாட்டுதலும் தான் காரணம்.

“மக்களால் நான் மக்களுக்காகவே நான்” என்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தாரக மந்திரத்தை பின்பற்றி, ஏழை எளியோரின் தேவையறிந்து, அவர்களை மகிழ்விக்கின்ற அளவிற்கு இத்திட்டங்கள் வகுக்கப் பெற்றுள்ளன. இதயதெய்வம் அம்மா அவர்களால் விரைவாக நிறைவேற்றப்பட்ட திட்டங்களை அனைத்து தரப்பு மக்களும் பாராட்டியிருக்கின்றன. அந்தப் பாராட்டுகள் அனைத்தும் அம்மா ஆசியுடன் அம்மா வழியில் நடக்கும் இந்த அம்மா அரசுக்கும் கிடைக்கும் என்பது நிச்சயம். அதற்காக மாண்புமிகு அமைச்சர் பெருமக்களோடு நானும் அரசு அலுவலர்களும் மக்களோடு இணைந்து ஒருமித்து உழைத்து புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எண்ணங்களை ஈடேற்றுவோம் என்று இந்த நேரத்தில் நாம் அனைவரும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

தமிழர்களின் கோரிக்கைகளை வென்றெடுக்க, தமிழக மக்களின் உரிமைகளை நிலைநாட்ட, “அமைதி, வளம், வளர்ச்சி” என்ற பாதையில் தமிழகத்தை அழைத்துச் சென்ற மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வழங்கிய ஒத்துழைப்பைப் போலவே, அம்மா வழியில் நடக்கும் அம்மா அரசுக்கும் தொடர்ந்து ஆதரவு நல்க வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விழா சீரோடும் சிறப்போடும் நடைபெற ஒத்துழைத்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

◈◈◈

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 06.03.2017 அன்று டாக்டர் இராதாகிருஷ்ணன் நகரில் நடைபெற்ற விழாவில் கச்சா எண்ணெய் கசிவால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்கி ஆற்றிய விழா பேருரை

## மீனவர்களை பாதுகாப்பதில் தமிழக அரசு எப்போதும் விழிப்புடனும், விவேகத்துடனும் செயல்படும்!




**மா**ண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி,

இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு ஒரு சிறப்பான உரையாற்றிய மீனவக் குடும்பத்திலே பிறந்து, மீனவ மக்களுடைய நலனுக்காக, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அமைச்சரவையிலும், இப்போது அம்மா அவர்களுடைய அரசிலும் தொடர்ந்து அமைச்சராக இருந்து,

இந்தப் பகுதியிலுள்ள மீனவ மக்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை அரசின் மூலமாக பெற்றுத் தந்து சிறப்புரையாற்றிய நிதி மற்றும் மீன்வளத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. ஜெயகுமார் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கருப்பணன் அவர்களே, இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

தலைமைச்செயலாளர் அவர்களே, அரசு உயர் அதிகாரிகளே, காவல்துறை அதிகாரிகளே, பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே, மாண்புமிகு அம்மாவின் பாசத்திற்குரிய மீனவ பெருமக்களே மற்றும் கூடியுள்ள பொதுமக்களே உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

புரட்சித்தலைவர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள்

“தரை மேல் பிறக்க வைத்தான்

எங்களை தண்ணீரில்

பிழைக்க வைத்தான்”

என்று படகோட்டி படத்தின் வாயிலாக, மீனவர்களின் வாழ்க்கையை தெளிவாக படம் பிடித்து காட்டினார்கள்.

மீனவர்களின் நலத்திலும், வளத்திலும் புரட்சித்தலைவர் அவர்கள் கொண்ட ஈடுபாடும் அக்கறையும் போலவே, மாண்புமிகு அம்மா அவர்களும், மீனவர்களின் பாதுகாப்பிற்கும் வாழ்வாதாரத்திற்கும் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி, மீனவர்களுக்கு உற்ற தோழராகவும், பாதுகாவலராகவும் விளங்கினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு நடைபெறும் நல்லாட்சியில், மீனவரின் வாழ்க்கையை மேலும் மேம்படுத்தும்

வகையில் பல்வேறு நலத் திட்டங்கள் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது.

❖ மாண்புமிகு அம்மா அவர்களின் விருப்பப்படி, மீனவர்களுக்கான தனி வீட்டுவசதி திட்டத்தை செயல்படுத்த, ரூபாய் 85 கோடி மதிப்பீட்டில் 5,000 வீடுகள் கட்டுவதற்கு முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தலைமைச்செயலகம் வந்த அன்றே ஆணை வெளியிடப்பட்டது. இது ஒன்றே மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசு மீனவர்களின் நலப் பணிகள் தொடர்ந்து செயல்படுத்தும் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

❖ மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மீனவர்களின் நலன் மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் மீன் வள மேம்பாட்டிற்கும் அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

❖ அம்மா அவர்கள் சொன்னதையெல்லாம் செய்ததோடு, சொல்லாத பலவற்றையும் செய்து காட்டி சாதனை படைத்ததை நீங்களெல்லாம் அறிந்ததே.

❖ முந்தைய தி.மு.க. அரசால் 2010–2011ஆம் ஆண்டில் மீன் வளத்துறைக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 193 கோடியே 33 இலட்சம்.

❖ மக்களால் நான், மக்களுக்காகவே நான் என்று தவ வாழ்வு வாழ்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள் 2016–2017ஆம் ஆண்டில் 744 கோடி ரூபாயாக பன்மடங்கு உயர்த்தி மீனவர்கள் வாழ்வுக்கு வளமூட்டினார்கள்.

❖ மாநிலத்தின் மீன்வள உட்கட்டமைப்பு வசதிகளை முனைப்புடன் மேம்படுத்தும் விதமாக, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கடந்த 5 ஆண்டுகளில் எப்பொழுதும் இல்லாத வகையில் அதிகபட்சமாக ரூபாய் 1,105 கோடி மதிப்பீட்டில் பணிகளை முடித்துள்ளது.




இந்தியாவிலேயே தமிழ்நாட்டினை முதன்மை மாநிலமாக்கிட அயராது பாடுபட்ட மாண்புமிகு அம்மா அவர்கள் மீனவர் மேம்பாட்டிற்காக பல்வேறு முன்னோடி திட்டங்களை தொடர்ந்து அறிவித்து செயல்படுத்தினார்கள்.

- ❖ மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தியாவிலேயே முதன் முறையாக, மீன்பிடிப்பு குறைந்த காலங்களில் ஒவ்வொரு மீனவ குடும்பத்திற்கும் அரசு நிவாரணமாக ரூபாய் 4,000/– வழங்கி வந்ததை 5,000 ரூபாயாக உயர்த்தினார்கள்.

- ❖ மீன்பிடி தடை காலங்களில் நிவாரணமாக ரூபாய் 2,000/– வழங்கியதை 5,000/–ரூபாயாகவும் உயர்த்தி வழங்கி மீனவர் வாழ்க்கையில் ஒளி ஏற்றினார்கள்.

- ❖ மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்க புதிய தூண்டில் முறை சூரை மீன்பிடி படகுகள் கட்டுவதற்கு ரூபாய் 30 இலட்சம் வரை அதிகபட்ச மானிய உதவி வழங்கும் திட்டத்தையும் மாண்புமிகு அம்மா அவர்கள் தான் தந்தார்கள்.

- ❖ இதே ஆர்.கே.நகர் தொகுதியில் மட்டும் மீனவர்களுக்காக பல்வேறு திட்டப்பணிகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து செய்து வருகிறது. குறிப்பாக ஒருசிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

- புதிய சூரை தூண்டில் மற்றும் செவுள் வலை மீன்பிடி விசைப் படகுகளைக் கட்டிட 50 சதவீத மானியமாக அதிக பட்சமாக ரூபாய் 30 இலட்சம் வழங்கும் திட்டத்தின் கீழ் 11 பயனாளி குழுக்களுக்கு ரூபாய் 3 கோடியே 30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு படகு கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- மீன்பிடிப்பு குறைவு கால சிறப்பு நிவாரணமாக 2016–2017 ஆண்டில் 4,524 மீனவ குடும்பங்களுக்கு ரூபாய் 22 கோடியே 62 இலட்சம் வழங்கப்பட்டது.
- தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ், 2016–2017இல் 7,129 மீனவர்களுக்கு ரூபாய் 64 இலட்சம் மாநில அரசு நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ், 2016–2017இல் 8,206 மீனவ மகளிருக்கு ரூபாய் 1 கோடியே 47 இலட்சம் தமிழ்நாடு அரசால் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.
- தமிழக மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கும்போது, அவர்களது பாதுகாப்பினை உறுதி செய்ய, கம்பியில்லா தொலைதொடர்பு வசதிகளை உருவாக்கி ஒவ்வொரு மீன்பிடி படகிற்கும் VHF சாதனம் வழங்கும் திட்டம் தந்தார்கள்.
- இந்தியாவிலேயே முதலாவதாக மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், 2012ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகம் துவக்கப்பட்டது.
- மீனவர்களுக்கு தொழில்நுட்ப உதவிகள் வழங்குவதிலும் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

பாக். வளைகுடாப் பகுதியில் தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையினை நிலைநாட்டுவதிலும், தி.மு.க. ஆட்சியில் தாரைவார்க்கப்பட்ட கச்சத்தீவினை மீட்டெடுப்பதிலும் மாண்புமிகு அம்மா அவர்களின் உறுதியான நிலைப்பாட்டினை, தற்போதுள்ள அம்மாவின் அரசு தொடர்ந்து

வலியுறுத்தும் விதமாக, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை 27.02.2017 அன்று புதுடெல்லியில் நேரில் சந்தித்து மீண்டும் ஒரு கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையினரின் தொடர் தாக்குதல் நிகழ்வுகள், துன்புறுத்துதல், சிறை பிடித்தல், ஆகிய சம்பவங்கள் நடப்பதை தடுத்திடவும், தீர்க்கமான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்கவேண்டி வலியுறுத்தியும் இதுவரை மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு மாண்புமிகு அம்மாவின் அரசால் 115 கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன. இதன் காரணமாக 2011 முதல் இலங்கை அரசால் சிறை பிடிக்கப்பட்ட 2,541 தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். 357 மீன்பிடி படகுகள் விடுவிக்கப்பட்டு தமிழகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

தற்போது இலங்கை சிறைகளில் உள்ள 85 மீனவர்களை 128 படகுகளுடன் விரைவில் மீட்டு தமிழகம் அழைத்து வருவதற்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆர்.கே. நகர் தொகுதியில்,

- சென்னை மீன்பிடித் துறைமுகப் பணிகள் ரூபாய் 92 கோடியே 63 இலட்சம் செலவிலும்,
- கத்திவாக்கம் நெடுஞ்சாலை மற்றும் காக்ரேன் பேசின் சாலை இரயில்வே சந்திப்பு மேம்பாலம் ரூபாய் 16 கோடியே 66 இலட்சம் செலவிலும் கட்டப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களால் ஏற்கெனவே திறக்கப்பட்டது.
- ஆர்.கே.நகர் தொகுதியிலுள்ள பவர்குப்பம் பகுதியில் பழைய குடிசை மாற்று வாரிய வீடுகளுக்கு மாற்றாக ரூபாய் 23.27 கோடி செலவில் கட்டப்பட்ட 556 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளும்,
- அரங்கநாதபுரம் திட்டப்பகுதியில் பழுதடைந்த 360 குடிசை மாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு மாற்றாக



480 புதிய குடியிருப்புகள் ரூபாய் 40.71 கோடி செலவில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் வழங்கப்பட்டுள்ளது.

❖ தண்டையார்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ரூபாய் 2 கோடியே 2 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டதுடன் தண்டையார்பேட்டை புதிய வருவாய் கோட்டத்தையும் உருவாக்கினார்கள்.

❖ ஆர்.கே.நகர் பகுதியிலுள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில் அரசு தொழில் பயிற்சி நிலையத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட ஒரு சில திட்டங்களையும், முடிக்கப்பட்ட பணிகளை மட்டுமே இங்கே நான் குறிப்பிட்டுள்ளேன்.

சமீபத்தில் சென்னையை தாக்கி கோரதாண்டவம் ஆடிய ‘வர்தா’ புயலால் கடலில் படகு மூழ்கிய விபத்தில் உயிரிழந்த மற்றும் காணாமல் போன மீனவர்களின் குடும்பங்களுக்கும் மற்றும் பிற மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் தனித்தனி சம்பவங்களில் மீன் பிடித்தபோது உயிர் இழந்ததனால் அவர்களின் குடும்பங்களுக்கும் தலா ரூ.1 இலட்சம் வீதம் நிவாரணம் வழங்கப்படுகிறது.

**28.01.2017** அன்று எண்ணூர் காமராஜர் துறைமுகத்திற்கு அருகில் இரண்டு தனியார் கப்பல்கள் எதிர்பாராத விதமாக நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் MD டான் காஞ்சிபுரம்

என்ற கப்பலிலிருந்து கச்சா எண்ணெய் கசிவு ஏற்பட்டு கடலில் பரவியதால் திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு மிகுந்த சிரமத்திற்கு உள்ளானார்கள்.

இந்த எண்ணெய் கசிவால் திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் 28 கிலோ மீட்டரும், சென்னை மாவட்டத்தில் 19 கிலோ மீட்டரும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 57 கிலோ மீட்டர் நீளத்திற்கும் ஆக மொத்தம் 104 கி.மீ. நீளம் கொண்ட கடற்கரை மற்றும் அதனைச் சார்ந்த கடல் பகுதிகளில் பாதிப்பு ஏற்பட்டது.

பாதிக்கப்பட்ட மூன்று மாவட்டங்களில், மீனவர்கள் கடலுக்கு சென்று மீன்பிடித்து வந்த மீன்களுக்கு போதிய விலை கிடைக்காமல் மீனவர்களும், மீன்பிடிப்பு சார்ந்த தொழில் புரிவோரும் பாதிப்படைந்தனர்.

“மாசுபடுத்தியவரே மாசு நிவர்த்திக்கான செலவினத்தை மேற்கொள்ள வேண்டும்” என்ற கொள்கை அடிப்படையில் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதார இழப்பீடாக மாநில அரசால் மதிப்பீடு செய்யப்பட்ட 135 கோடியே 35 இலட்ச ரூபாயினை இந்த இழப்பீட்டை உரிய காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பெறும் பொருட்டு அதற்கான கடிதத்தை இந்திய அரசின் கப்பல் போக்குவரத்து இயக்குநர் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கிடையில் எண்ணை கசிவால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் துயரினை விரைந்து நீக்கும் வகையில் இடைக்கால நிவாரணமாக ரூ.75 கோடி வழங்கிட கேட்டு மாண்புமிகு மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. நிதின் கட்காரி அவர்களை புதுடில்லியில் 28.02.2017 அன்று நேரில் சந்தித்து கோரியுள்ளேன்.

மீனவர்களின் துயரினை களையும் பொருட்டு மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடக்கும் தமிழக அரசு, சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மீனவ குடும்பத்திற்கும் ரூ.5,000/– வீதம்

30,000 குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.15 கோடி இடைக்கால நிவாரணமாக வழங்க ஆணை வெளியிடப்பட்டு, அதனை செயல்படுத்தும் விதமாக நேரில் நிவாரணம் வழங்க வந்துள்ளேன்.

டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய ஆட்சி காலத்திலும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலும் பல்வேறு நலத்திட்டங்களால் மீனவர்களின் வாழ்வாதாரமும், பொருளாதாரமும் பன்மடங்கு முன்னேறியது.

மீனவர்களுக்கு இயற்கை இடற்பாடுகளால், துயரம் ஏற்படும் போதெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைந்து உதவிக்கரம் நீட்டி அரவணைத்து வந்திருக்கிறது.

“கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு”

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்கள், நல்ல அரசும் சிறந்த அமைச்சர்களும் எப்படி இருக்க வேண்டும் என்று இலக்கணம் வகுத்து எங்களுக்கு பயிற்சி அளித்த வண்ணம் இந்த அரசு இப்போது மக்களின் எண்ணமறிந்து ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணப்படி மீனவர்களை பாதுகாப்பதில் இந்த அரசு எப்போதும் விழிப்புடனும், விவேகத்துடனும் செயல்படும் என்று இந்த இனிய விழாவிலே நான் உறுதி கூறுகிறேன்.

இந்த விழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்

◈◈◈

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
07.03.2017 அன்று சேலம் மண்டலத்திற்கான
அரசு திட்டங்களைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை

## சேலம் மண்டலத்திற்கு உட்பட்ட சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ரூ.330.84 கோடி மதிப்பீட்டில் 3,971 திட்டப்பணிகள்!




**மா**ண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

இவ்விழாவில் கலந்து கொண்ட மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு.பி. தங்கமணி அவர்களே, மாண்புமிகு உயர்கல்விதுறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்களே, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் டாக்டர் வி. சரோஜா அவர்களே, மாண்புமிகு கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் திரு.பி. பாலகிருஷ்ண ரெட்டி அவர்களே,

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

அரசு உயர் அதிகாரிகளே!

காவல்துறை அதிகாரிகளே!

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

அனைவருக்கும் எனது முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வாழும் திசை நோக்கி பணிந்து வணங்குகிறேன்.

அடுக்கடுக்கான திட்டங்கள் மிகக்குறுகிய காலத்திலேயே நிறைவு செய்யப்பட்டு அதற்கான தொடக்க விழாக்களை அடுத்தடுத்து தொடர்ச்சியாக நடத்தும் அரிய வாய்ப்பினை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியால் இந்த அரசு பெற்றிருக்கிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசும் போது:

"தமிழக மக்களிடம் நாங்கள் காட்டும் விசுவாசத்திற்கு கிடைத்த வெகுமதிதான், தமிழக மக்கள் எங்கள் மீது வைத்த நம்பிக்கை – எங்களுக்கு அளித்த மகத்தான ஆதரவு – எங்களுக்கு அளிக்கப்பட்ட ஆட்சிப் பொறுப்பு" என்றார்கள்.

மற்றொரு கூட்டத்தில் பேசும் போது:

"என்னை நம்பி வாக்களித்தவர்களுக்கு, நான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே என்னுடைய புனிதக் கடமையாகக் கருதுகிறேன். ஏழை, எளிய மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற நான் ஒரு போதும் தவறியதில்லை."

என்று மாண்புமிகு அம்மா அவர்கள் கூறினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வாக்குப்படியே இந்த ஆட்சிப் பொறுப்பை நாங்கள் புனிதப் பணியாக ஏற்று செயல்படுகிறோம்; செயல்படுவோம்.

மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110இன் கீழ் அறிவித்த பல்வேறு திட்டங்கள் விரைவாக செய்து முடிப்பது மட்டுமின்றி அதனை பொது மக்களின் பயன்பாட்டிற்கு உடனடியாக கொண்டு வர வேண்டும் என்று முனைப்பாக இருந்தார்கள்.

அந்த வேத வாக்கினை நாங்கள் சிரமேற்கொண்டு தமிழ்நாட்டை ஐந்து மண்டலங்களாகப் பிரித்து அந்தந்த மண்டலத்தில் முடிக்கப்பட்ட திட்டப்பணிகளை தொடங்கி வைத்தும், தொடங்கப்போகும் பணிகளை அடிக்கல் நாட்டியும் வருகிறோம்.

“தமிழக அரசு, மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அதற்குண்டான திட்டங்களைத் தீட்டி மக்கள் வாழ்வு வளம் பெறவும், அவர்கள் நலன் பேணிப் பாதுகாக்கவும் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. அதன் காரணமாகத்தான் நான் முதலமைச்சராகப் பதவியேற்று கொண்ட அன்றே மக்கள் பயன் பெறத்தக்க திட்டங்களில் கையெழுத்திட்டேன்”.

மாண்புமிகு அம்மா அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்த பேச்சையே நான் கட்டளையாக ஏற்று தலைமைச் செயலகத்தில் அரசு பதவி ஏற்ற முதல் நாளே ஐந்து சிறந்த திட்டங்களுக்கு கையெழுத்திட்டேன். முதல் நாள் நான் கையெழுத்திட்ட அனைத்து திட்டங்களையும் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள்.

அம்மா அரசு பதவியேற்ற குறுகிய நாட்களிலேயே அடுக்கடுக்கான பல மக்கள் பணிகளை செய்து வருவதைப் பற்றி நீங்கள் அறிவீர்கள்.

கடந்த **04.03.2017** அன்று சென்னை மண்டலத்திற்கு உட்பட்ட ஏழு மாவட்டங்களில் ரூ.**1,486** கோடியே **12** இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு துறைகளைச் சார்ந்த புதிய திட்டப் பணிகளின் தொடக்க விழாவும், அடிக்கல் நாட்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து, சேலம், திருச்சிராப்பள்ளி மண்டலத்திற்கு உட்பட்ட அரியலூர், கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருவாரூர் மாவட்டங்களில் பல்வேறு திட்டப் பணிகள் தொடங்கி வைக்கப்படுகிறது.



இத்திட்டங்களில் பெரும்பாலானவை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த விதி 110இன் கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்களாகும்.

சேலம் மாவட்டத்திற்கு பல சிறப்புகள் உண்டு. குறிப்பாக சேலத்தையே மையமாகக் கொண்டு தான் திராவிட இயக்கத்தின் தொடக்கமும் வளர்ச்சியும் இருந்திருக்கிறது.

தமிழ்நாட்டுக்கு சேலம் ஒரு கதம்ப மாலையைப் போன்றது. இந்த மாவட்டத்தில் விவசாயம், சிறு குறு தொழில்கள், இரும்பு மற்றும் டெக்ஸ்டைல்ஸ் தொழிற்சாலைகள் என்ற பலவகையான தொழில்களும் இங்கே சிறப்பாக நடந்து வருகிறது. கனரக வாகனங்கள் அதிகமாக இருக்கும் மாவட்டமாக நாமக்கல் திகழ்ந்து கொண்டிருக்கிறது. பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வுடன் கூடிய அனைத்து தர மக்களும் இங்கே வசிக்கிறார்கள்.

இதே மாவட்டத்தைச் சேர்ந்த நான் இந்த திட்டங்களை துவக்கி வைக்கும் அரிய வாய்ப்பை மாண்புமிகு அம்மா அவர்கள் எனக்கு வழங்கி இருக்கிறார்கள். இந்தப் பகுதியிலிருந்து சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்த உங்களுக்கு இந்த இனிய விழாவின் மூலம் என் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.



சேலம் மாவட்டத்தில் நகராட்சி நிருவாகத் துறை சார்பில் ரூபாய் 12 கோடியே 21 இலட்சம் மதிப்பீட்டில் 13 திட்டப் பணிகள் உள்ளிட்ட பல துறை திட்டப் பணிகளையும் சேர்த்து ரூபாய் 115 கோடியே 71 இலட்சம் மதிப்பீட்டில் 462 திட்டப்பணிகள் தொடங்கி வைக்கப்பட்டும், அடிக்கல் நாட்டியும் மக்களுக்கு அர்ப்பணிக்கப்படுகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, ஊரக வளர்ச்சித் துறை சார்பில் ஊராட்சி மன்ற அலுவலகங்கள், அங்கன்வாடி கட்டடங்கள், பசுமை வீடுகள், ஊராட்சி சேவை மையங்கள் என 1,432 பணிகளை உள்ளடக்கிய மொத்தம் 1,479 திட்டப் பணிகள் ரூபாய் 61 கோடியே 25 இலட்சம் செலவில் முடிக்கப்பெற்று அவை தொடங்கி வைக்கப்படுகிறது.

தருமபுரி மாவட்டம், அரூரில் உயர்கல்வி துறையின் சார்பில் பெரியார் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியும், கரிமங்கலத்தில் அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரியும் ரூபாய் 14 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும், பள்ளிக்கல்வி துறை சார்பில் பென்னகரத்தில் 2 மாதிரி பள்ளிகளும், அரூரில் 3 புதிய பள்ளிகளும், பாப்பிரெட்டிபட்டியில் அனைவருக்கும் கல்வி திட்டத்திற்கான கட்டடங்களும், இதர கட்டடங்களும் ரூபாய் 19 கோடியே 19 இலட்சம் மதிப்பீட்டிலும் நிறைவு செய்யப்பட்டு திறந்து வைக்கப்படுகிறது. ஆக பல துறைகளின் சார்பாக தருமபுரி மாவட்டத்தில் ரூபாய் 60 கோடியே 33 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 113 திட்டப் பணிகள் திறந்து வைக்கப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேளாண்மைத்துறை, கால்நடை, பால்வளம் மற்றும் மீன் வளத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, வணிக வரி மற்றும் பதிவுத்துறை, மின்சாரத்துறை, தொழில் துறை, உயர் கல்வித்துறை, நகராட்சி நிருவாகத்துறை, பள்ளிக்கல்வித் துறை, வருவாய்த்துறை, நெடுஞ்சாலைத்துறை, ஊரக வளர்ச்சித் துறை சார்பில் ரூபாய் 93 கோடியே 55 இலட்சம் மதிப்பீட்டில் 1,917 திட்டப் பணிகள் துவக்கி வைக்கப்படுகிறது.

ஆக மொத்தம், இப்போது சேலம் மண்டலத்திற்கு உட்பட்ட சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ரூபாய் 330 கோடியே 84 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட 3,971 திட்டப்பணிகள் இங்கே தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மானாவாரி சாகுபடியினை விவசாயிகள் வெற்றிகரமாக மேற்கொள்ளவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில், இந்தியாவிலேயே முதன் முறையாக, நடப்பாண்டு முதல் நான்கு ஆண்டுகளுக்கு செயல்படுத்திடும் விதமாக மானாவாரி வேளாண்மை இயக்கம் என்னும் மிகப்பெரும் திட்டத்தினை ரூபாய் 803 கோடி மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியினை மையமாகக் கொண்டு, தொகுப்புக்கு 1,000 எக்டர் என்ற அளவில் 1,000 தொகுப்புகள் மூலம் எதிர்வரும் நான்காண்டுகளில் 10 இலட்சம் எக்டரில் மானாவாரி நில மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்த ஆண்டு பருவமழை பொய்த்த காரணத்தினால் அனைத்து மாவட்டங்களிலும் வறட்சி நிலவுகிறது. விவசாய பெருமக்கள் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். அவர்களின் இன்னல்களை எல்லாம் போக்கும் விதமாக மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த இந்த அரசு உடனடி திட்டங்கள் தீட்டி வறட்சியிலிருந்து மக்களை பாதுகாக்க நிவாரணங்களை விரைந்து வழங்கி வருகிறது.

விவசாய பெருமக்களின் இன்னல்களைப் போக்கும் வண்ணம் விவசாயிகளுக்கு ரூபாய் **2,247** கோடி பயிர் இழப்பு வறட்சி நிவாரணத் தொகை வழங்கிட மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த அரசு உடனடியாக உத்தரவிட்டது. இந்த நிவாரணத்தொகை வழங்கும் பணி **06.03.2017** அன்று சென்னையில் துவக்கி வைக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒவ்வொரு விவசாயி வரவழைக்கப்பட்டு அவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்க உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாண்புமிகு அமைச்சர்கள் மூலம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகைக்கான உத்தரவுகளை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளேன். மேலும், விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நிவாரணத் தொகை உடனடியாக செலுத்தப்படும். இதனால், வறட்சியால் பாதிக்கப்பட்ட **32** இலட்சத்து **30** ஆயிரத்து **191** விவசாயிகள் பயனடைவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

வறட்சி காரணமாக வேலை வாய்ப்பின்றி பாதிக்கப்பட்டுள்ள விவசாய தொழிலாளர்களுக்கு, போதிய வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், **100** நாட்கள் பணி வரம்பு என்பது **150** நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

வறட்சி காரணமாக கிராமப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் ரூபாய் **350** கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணையிடப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

வறட்சி காரணமாக நகர்ப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் நீர் ஆதாரங்கள்

மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் ரூபாய் 160 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணையிடப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

பொதுப்பணித் துறை மூலமாக நிலத்தடி நீர்த்தேக்கும் அமைப்பு, நிலத்தடி நீர் செரிவூட்டும் அமைப்பு போன்ற நீராதாரங்களை மேம்படுத்த ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இப்படிப்பட்ட திட்டங்கள் அனைத்தும் ஏழை, எளிய மக்களை மையமாக வைத்து இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

“அரசு நலத்திட்ட உதவியினைப் பெறுகின்ற பயனாளிகள் அனைவரும் அவற்றை வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான அடிப்படையாகக் கருதி மேன்மேலும் உழைத்து, வாழ்க்கையில் முன்னேறி, எல்லா நலன்களையும் பெற வேண்டும்”

என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுறுத்தலின்படி மக்கள் அனைவரும் இந்த திட்டங்களால் கிடைக்கும் பலனை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா நல்லாட்சியில் சேலம் மாநகராட்சிக்குட்பட்ட திருவாக்கவுண்டனூர், ஏ.வி.ஆர். ரவுண்டானா, ஐந்து ரோடு, குரங்குசாவடி, மணல்மேடு ஆகிய இடங்களில் உயர்மட்ட பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக நகர பகுதிகளில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசல் குறைக்கப்படுகிறது. சூரமங்கலம் பகுதியில் கீழ் மட்ட பாலம் கட்டும் பணி நடைபெற்றுள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல் திருச்செங்கோடு ஆகிய இடங்களில் புறவழிச்சாலை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. மேலும் நாமக்கல் திருச்செங்கோடு சாலை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தவும், பரமத்திவேலூர் திருச்செங்கோடு சாலை அகப்படுத்தும் பணியும் நடைபெறவுள்ளது. போக்குவரத்து

நெரிசல் மிகுந்த நாமக்கல், கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள சாலைகள் அகலப்படுத்தப்படவுள்ளது. சேலம் மாவட்டத்தில் புதிய உயர்மட்ட பாலங்கள் விரைவில் வரவுள்ளது. இதன் மூலம் போக்குவரத்து நெரிசல் இல்லாத மாவட்டமாக மாற்றும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நூற்றுக்கணக்கான கோடியை தந்துள்ளார்கள்.

அண்மையில் மத்திய அமைச்சர் நிதின்கட்காரி அவர்களை டெல்லியில் சந்தித்த போது சேலம் மாநகராட்சிக்கு சுற்றுச்சாலை வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது. இந்த கோரிக்கையை கனிவுடன் பரிசீலிப்பதாக உறுதியளித்துள்ளார்கள். இது போன்ற எண்ணற்ற சாலைப்பணிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

“நமது இலட்சியம் உயர்வானது, நமது பார்வை தெளிவானது, நமது வெற்றி முடிவானது” என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் தாரக மந்திரத்தோடு தான் இந்தத் திட்டங்களையெல்லாம் இந்த அரசு தொடங்கி வைத்திருக்கிறது.

இத்திட்டங்களால் பயனடையப் போகும் பயனாளிகளுக்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

இத்திட்டங்கள் செயல்வடிவம் பெறுவதற்கு உழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

இந்த இனிய விழாவிலே கலந்து கொண்டு நாங்கள் மேலும் பல திட்டங்களை செயல்படுத்த ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும் உங்களுக்கு நன்றி.

இந்த விழாவை இத்தனை சிறப்பாக நடத்துவதற்குக் காரணமாக இருந்த அத்தனை இதயங்களுக்கும் வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

◈◈◈

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**திரு. எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள்
07.03.2017 அன்று திருச்சி மண்டலத்திற்கான
அரசு திட்டங்களைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை.

## திருச்சி மண்டலத்திற்கு உட்பட்ட 8 மாவட்டங்களில் ரூ.623.56 கோடி மதிப்பீட்டில் 2,603 நிறைவு செய்யப்பட்ட திட்டப் பணிகள்!



இந்த இனிய விழாவிற்கு வருகை புரிந்துள்ள மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.ஆர். காமராஜ் அவர்களே,

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ். மணியன் அவர்களே,

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களே,

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி ந. நடராஜன் அவர்களே,

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எம்.ஆர். விஜயபாஸ்கர் அவர்களே,

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி எஸ். வளர்மதி அவர்களே,

மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் திரு. ஆர். துரைகண்ணு அவர்களே,

ஆகிய அமைச்சர் பெருமக்களே,

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

அரசு உயர் அதிகாரிகளே,

காவல்துறை அதிகாரிகளே,

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே,

அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வாழும் திசை நோக்கி பணிந்து வணங்குகிறேன்.

அடுக்கடுக்கான திட்டங்கள் மிகக்குறுகிய காலத்திலேயே நிறைவு செய்யப்பட்டு அதற்கான தொடக்க விழாக்களை அடுத்தடுத்து தொடர்ச்சியாக நடத்தும் அரிய வாய்ப்பினை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியால் அம்மா அரசு பெற்றிருக்கிறது.

இத்திட்டங்களில் பெரும்பாலானவை மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110இன் கீழ் அறிவித்த திட்டங்களாகும். இத்திட்டங்கள் பல நிறைவு செய்யப்பட்டுவிட்டன. மீதம் விரைவாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மக்களின் முதல்வராக விளங்கினார்கள். உலக தலைவர்களுக்கெல்லாம் ஒரு முன் மாதிரி தலைவராக விளங்கினார்கள்.

மாண்புமிகு அம்மாவின் அயராத உழைப்பால் தான் தமிழகம் தொடர்ந்து இந்தியாவிலேயே இன்னும் முதன்மை மாநிலமாக விளங்கி வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியின் தொடர்ச்சி தான் இந்த ஆட்சி.

எனவே, அம்மாவின் எண்ணங்களையும், விருப்பங்களையும் ஈடேற்றும் அரசாகவே இந்த அரசு செயல்படும்.

கடந்த 04.03.2017 அன்று சென்னை மண்டலத்திற்கு உட்பட்ட 7 மாவட்டங்களில் ரூ.1,375 கோடியே 95 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவு செய்யப்பட்ட 7,506 திட்டப் பணிகளை தொடங்கி வைத்தேன். ரூ.111 கோடியே 3 இலட்சம் மதிப்பீட்டில் 2 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினேன்.

சென்னை மண்டலத்தைத் தொடர்ந்து, இன்று காலை சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் ரூ.330 கோடியே 84 இலட்சம் மதிப்பில் 3,971 திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தேன்.

அதனைத் தொடர்ந்து தற்போது திருச்சி மண்டலத்தில் நடைபெறும் திட்டப்பணிகளுக்கான தொடக்க விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் திருச்சிக்கு வரும்போதெல்லாம் மகிழ்ச்சி பொங்க வருவார்கள்.

ஒருமுறை திருச்சியில் நடந்த பொதுக்கூட்டத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் பேசுகிறபோது, “நான் சென்னை ஜார்ஜ் கோட்டையில் ஆட்சி புரிந்தாலும் என் மனம் என்னவோ திருச்சி மலைக்கோட்டையையே சுற்றிசுற்றி வருகிறது” என்று மனம் மகிழ்ந்து மனம் திறந்து பேசினார்கள்.

இப்போது திருச்சிராப்பள்ளி மண்டலத்திற்கு உட்பட்ட அரியலூர், கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை,




தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருவாரூர் மாவட்டங்களில் ரூ.623 கோடியே 55 இலட்சம் மதிப்பீட்டில் 2,603 திட்டப் பணிகள் தொடங்கி வைக்கும் இந்த நிகழ்வு தெய்வமாக திகழும் அம்மாவின் புகழை ஓங்கி ஒலிக்கச் செய்யும்.

திருச்சியில் தொடங்கி வைக்கப்படும் திட்டப்பணிகளால் ஏழை, எளிய மக்கள் மிகவும் பயனடைவார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசை மனதார மக்கள் போற்றுவார்கள் என்பது நிச்சயம்.

தமிழக வரலாற்றில் திருச்சி மாவட்டத்திற்கு தனி இடம் உண்டு. மொழிப்போரில் உயிர் தியாகம் செய்த சின்னசாமியை எதிர்கால சந்ததியினருக்கு நினைவூட்டும் வகையில் அவருடைய சிலையை மாண்புமிகு அம்மா அவர்கள் தான் இங்கு திறந்து வைத்தார் என்று சொல்வதில் பெருமைப்படுகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக சேவையாற்றிய ஸ்ரீரங்கம் தொகுதியில் தேசிய சட்டப்பள்ளியை நிறுவி அதன் மூலம் தமிழ்நாட்டுக்கே பெருமை சேர்த்தார்கள்.

- மேலும், ஸ்ரீரங்கம் பொறியியல் கல்லூரி,
- ஸ்ரீரங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

- இந்தியாவிலேயே முதன்முதலாக மகளிருக்கென்று தனியாக தோட்டக்கலைக் கல்லூரி,

- ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயிலுக்கு வெளியூரிலிருந்து வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக யாத்திரி நிவாஸ் என்ற பயணியர் விடுதி,

- அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயிலில் நாள் முழுவதும் அன்னதானம்,

- மொண்டிப்பட்டியில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகிதத் தொழிற்சாலை

என்று இன்னும் ஏராளமான திட்டங்களால் திருச்சி மாவட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்கள்.

மாண்புமிகு அம்மாவின் ஆசியால் பொறுப்பேற்ற இந்த அரசு குறுகிய நாட்களிலேயே பல திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

குறிப்பாக இந்த அரசு காவிரி படுகையிலுள்ள மாவட்டங்களை மேம்படுத்தும் வகையில் வேளாண்மை திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் தருகிறது.

- மாண்புமிகு அம்மா அவர்கள் விவசாயத்திற்கு தண்ணீர் தேவையை சமாளிக்கும் விதமாக நுண்ணீர் பாசன அமைப்பை ஏற்படுத்த சிறு குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம் வழங்க உத்தரவிட்டார்கள். 2011–2012 ஆண்டிலிருந்து இன்று வரை 1,83,251 விவசாயிகளுக்கு 1,000 கோடி ரூபாய்க்கு மேல் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

- வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்குவதற்கு மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில் ரூ.347 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

- கடந்த சட்டமன்ற தேர்தலின் போது மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளின்படி சிறு குறு விவசாயிகளின் பயிர்க்கடன், பண்ணை சார்ந்த நீண்ட கால கடன் என ரூ.5,318 கோடியே 73 இலட்சம் அளவிலான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இதனால், 12 இலட்சத்து 2 ஆயிரத்து 75 விவசாயிகள் கடனிலிருந்து விடுதலை பெற்று மாண்புமிகு அம்மாவை மனதார வாழ்த்திக்கொண்டு இருக்கிறார்கள்.

காவிரி நீர் பங்கீட்டு பிரச்சினையில் மாண்புமிகு அம்மா அவர்களின் தொடர் முயற்சியால் 19.02.2013 அன்று மத்திய அரசிதழில் காவிரி நடுவர் மன்ற இறுதி ஆணை வெளியிடப்பட்டது. நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை பரிந்துரையின்படி காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவை உடனடியாக அமைக்கும்படி மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள். மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த இந்த அரசு மாண்புமிகு அம்மாவின் குரலாகவே தொடர்ந்து ஒலித்து விரைவில் வெற்றி பெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டில் கருநாடக மாநிலத்திலிருந்து உரிய நீர் கிடைக்கப் பெறாததால் மேட்டூர் அணை வழக்கமான தேதியில் திறக்க இயலவில்லை. டெல்டா மாவட்ட விவசாயிகள் குறுவை சாகுபடியினை எவ்வித குறையுமின்றி மேற்கொள்வதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.54 கோடியே 65 இலட்சம் மதிப்பீட்டில் குறுவை சாகுபடி தொகுப்பு திட்டத்தை அறிவித்தார்கள். அதன் காரணமாக மேட்டூர் அணை காலதாமதமாக திறந்த காலங்களில் இதுவரை இல்லாத அளவாக 3.16 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை நெல் சாகுபடியை டெல்டா மாவட்ட விவசாயிகள் மேற்கொண்டு, வெற்றிகரமாக அறுவடை மேற்கொண்டு 7.53 இலட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கருநாடக மாநிலத்திலிருந்து நமக்கு வரவேண்டிய பாசன நீர் கிடைக்கப் பெறாததால் சம்பா சாகுபடி பருவத்தில் நேரடி நெல் விதைப்பினை பெருமளவில் பிரபலப்படுத்தி, டெல்டா மாவட்ட விவசாயிகள் சம்பா நெல் சாகுபடி மேற்கொள்ள வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.64 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டில் சம்பா சிறப்பு தொகுப்பு திட்டத்தினையும் அறிவித்து செயல்படுத்தினார்கள். இதன் காரணமாக, சென்ற ஆண்டு கடினமான நீர்ப்பற்றாக்குறை இருந்த போதிலும், கிடைக்கும் பருவ மழையினை திறம்பட பயன்படுத்தி நேரடி நெல் விதைப்பு விவசாயிகளிடையே பிரபலப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக, சம்பா, தாளடி பருவத்தில் டெல்டா மாவட்டங்களில் 11.92 இலட்சம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டது.

வடகிழக்கு பருவமழை இயல்பைவிட மிகக்குறைவாக பெறப்பட்டதால் விவசாயிகள் பயிர் இழப்பினால் பாதிப்படையக்கூடுமென முன்கூட்டியே எதிர்நோக்கி, புதிய பயிர்காப்பீட்டு திட்டத்தினை விவசாயிகளிடையே, குறிப்பாக டெல்டா மாவட்ட நெல் விவசாயிகளிடையே, பிரபலப்படுத்த அரசு அதிக முயற்சியை மேற்கொண்டது. இதற்காக, ரூ.410 கோடி காப்பீட்டு கட்டண மானியமாக விவசாயிகளின் நலனுக்காக காப்பீட்டு நிறுவனங்களுக்கு தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டது. டெல்டா மாவட்டங்களில் நெல் சாகுபடி செய்த பரப்பில் 90 சதவிகிதத்திற்கும் அதிகமான பரப்பில் 4.99 இலட்சம் விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டனர். தற்போது, இத்திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்கு பயிர் இழப்பீட்டுத் தொகையினை விரைவாக வழங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் மானாவாரி சாகுபடியினை விவசாயிகள் வெற்றிகரமாக மேற்கொள்ளவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில், இந்தியாவிலேயே முதன் முறையாக, நடப்பாண்டு முதல் நான்கு

ஆண்டுகளுக்கு செயல்படுத்திடும் விதமாக மானாவாரி வேளாண்மை இயக்கம் என்னும் மிகப்பெரும் திட்டத்தினை ரூ.803 கோடி மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியினை மையமாகக் கொண்டு, தொகுப்புக்கு 1,000 எக்டர் என்ற அளவில் 1,000 தொகுப்புகள் மூலம் எதிர்வரும் நான்காண்டுகளில் 10 இலட்சம் எக்டரில் மானாவாரி நில மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

வறட்சி காரணமாக வேலை வாய்ப்பின்றி பாதிக்கப்பட்டுள்ள விவசாய தொழிலாளர்களுக்கு, போதிய வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், 100 நாட்கள் பணி வரம்பு என்பது 150 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

வறட்சி காரணமாக கிராமப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் ரூ.350 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணையிடப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

வறட்சி காரணமாக நகர்ப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் ரூ.160 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணையிடப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

பொதுப்பணித் துறை மூலமாக நிலத்தடி நீர்த்தேக்கும் அமைப்பு, நிலத்தடி நீர் செறிவூட்டும் அமைப்பு போன்ற நீராதாரங்களை மேம்படுத்த ரூ.25 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள ஆணையிடப்பட்டு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.3,028 கோடி பயிர்க் கடனாக கடந்த ஆண்டு மட்டும் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நடப்பாண்டு பருவமழை பொய்த்த காரணத்தினால் கடும் வறட்சி ஏற்பட்டு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களின் இன்னல்களைப் போக்கும் வண்ணம் விவசாயிகளுக்கு ரூ. 2,247 கோடி பயிர் இழப்பு வறட்சி நிவாரணத் தொகை வழங்கிட மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த அரசு உடனடியாக உத்தரவிட்டது. இந்த நிவாரணத்தொகை வழங்கும் பணி 06.03.2017 அன்று சென்னையில் துவக்கி வைக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாண்புமிகு அமைச்சர்கள் மூலம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகைக்கான உத்தரவுகளை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளேன். மேலும், விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நிவாரணத் தொகை 09.03.2017 அன்று செலுத்தப்படும். இதனால், வறட்சியால் பாதிக்கப்பட்ட 32 இலட்சத்து 30 ஆயிரத்து 191 விவசாயிகள் பயனடைவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

டெல்டா மாவட்டங்கள் உட்பட தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் வட்டார அளவில் உலர் தீவனக் கிடங்குகள் திறக்கப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமல்ல, மாநிலத்திலுள்ள நீர் ஆதாரங்களை திறம்பட மேலாண்மை செய்து வறட்சியினை எதிர்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நீர் நிலைகளைப் புனரமைக்க பண்டைய குடி மராமத்து திட்டத்திற்கு புத்துயிர் அளித்து இந்த நிதியாண்டில் மட்டும் ரூ.100 கோடி மதிப்பில் திட்டப்பணிகள் செயல்படுத்தப்படும். வரும் ஆண்டில் ரூ.300 கோடி மதிப்பில் மக்கள் இயக்கமாக திட்டப் பணிகள் செயல்படுத்தப்படும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நகராட்சி நிர்வாகத்துறை சார்பில் ரூ.51 கோடியே 38 இலட்சம் மதிப்பீட்டில் 3 குடிநீர் திட்டப் பணிகள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை சார்பில் ரூ.26 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் 1,100 பசுமை வீடுகள், 10 கிராம பஞ்சாயத்து சேவை மையங்கள், 2 பாலங்கள் உள்ளிட்ட 1,112 பணிகளை உள்ளடக்கி இம்மாவட்டத்தில் மட்டும் 1,328 திட்டப்பணிகள் ரூ.147 கோடியே 99 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டு அவை துவக்கி வைக்கப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மின்சாரத்துறை சார்பில் ரூ.42 கோடியே 19 இலட்சம் மதிப்பீட்டில் 110 kv துணை மின் நிலையம்இரண்டும், ஊரக வளர்ச்சித்துறை சார்பில் ரூ.17 கோடியே 44 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பாலம், அங்கன்வாடி கட்டடங்கள், பசுமை வீடுகள், கிராம பஞ்சாயத்து சேவை மையங்கள் மற்றும் இதர கட்டடங்கள் உள்ளிட்ட 473 நிறைவடைந்த திட்டங்களை உள்ளடக்கி மொத்தம் 534 திட்டப் பணிகள் ரூ.132 கோடியே 74 இலட்சம் மதிப்பீட்டில் துவக்கி வைக்கப்படுகிறது.

அரியலூர் மாவட்டத்தில், ஊரக வளர்ச்சித் துறை சார்பில் ரூ.1 கோடியே 6 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட அங்கன்வாடி கட்டடங்கள், பள்ளி கட்டடங்கள் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் ரூ.1 கோடியே 7 இலட்சம் மதிப்பீட்டில் மாணவர் விடுதி உள்பட ரூ.7 கோடியே 32 இலட்சம் மதிப்பீட்டில் 34 திட்டங்கள் துவக்கி வைக்கப்படுகிறது.

கரூர் மாவட்டத்தில் நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரூ.13 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டில் அமராவதி நதிக்கு குறுக்கே கட்டப்பட்ட மேல்நிலை பாலம்,

ஊரக வளர்ச்சித் துறை சார்பில் ரூ.7 கோடியே 98 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய கட்டடங்கள், அங்கன்வாடி கட்டடங்கள், கிராம பஞ்சாயத்து சேவை மையங்கள் உள்ளிட்ட 45 திட்டப்பணிகள் உட்பட ரூ. 46 கோடியே 79 இலட்சம் மதிப்பில் 97 திட்டப்பணிகள் துவக்கி வைக்கப்படுகின்றன.

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யத்தில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் ரூ.12 கோடியே 12 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பள்ளிகள், இதர பள்ளிக் கட்டடங்கள்,

நெடுஞ்சாலைத் துறை சார்பில் வெள்ளப்பள்ளம் உப்பனாருக்கு குறுக்கே ரூ.10 கோடியே 98 இலட்சம் மதிப்பீட்டிலான பணி உள்ளிட்ட 178 திட்டப்பணிகள் ரூ.61 கோடியே 12 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு அவை துவக்கி வைக்கப்படுகிறது.

பெரம்பலூரில் பால் வளத்துறை சார்பில் ரூ.36 கோடியே 28 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பால் பண்ணையும்,

பள்ளிக்கல்வித்துறை சார்பில், பல்வேறு பகுதிகளில் ரூ.11 கோடியே 97 இலட்சம் மதிப்பீட்டில் 5 புதிய பள்ளிகள் உட்பட ரூ.85 கோடியே 69 இலட்சம் மதிப்பில் 212 திட்டங்கள் துவக்கி வைக்கப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சார்பில் ரூ.27 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு கட்டடங்கள்,

பள்ளிக்கல்வித் துறை சார்பில் ஒரத்தநாடு மற்றும் கும்பகோணத்தில் 2 புதிய பள்ளிகள் மற்றும் இதர பள்ளி கட்டடங்கள் என ரூ.19 கோடியே 56 இலட்சம் மதிப்பில் 18 திட்டப்பணிகள் உள்ளிட்ட ரூ.110 கோடியே 4 இலட்சம் மதிப்பீட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் மொத்தம் 171 திட்டப்பணிகள் துவக்கி வைக்கப்படுகிறது.

திருவாரூர் மாவட்டத்தில் உயர்கல்வித்துறை சார்பில் நன்னிலத்தில் ரூ.7 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டில் பாரதிதாசன் பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், பொதுப்பணித்துறை சார்பில் ரூ.4 கோடியே 36 இலட்சம் செலவில் நீர் மேலாண்மை பணிகள் உள்ளிட்ட மொத்தம் 49 திட்டப்பணிகள் ரூ.31 கோடியே 87 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டு அவை திறந்து வைக்கப்படுகிறது.

ஆக மொத்தம், திருச்சி மண்டலத்திற்கு உட்பட்ட அரியலூர், கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், திருச்சிராப்பள்ளி ஆகிய எட்டு மாவட்டங்களில் ரூ.623 கோடியே 56 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவு செய்யப்பட்ட 2,603 திட்டப்பணிகள் தொடங்கி வைக்கப்படுகிறது.

விவசாயிகளுக்கு எப்போதெல்லாம் இயற்கை இடர்பாடுகள் ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு நலத்திட்டங்களையும், நிவாரணங்களையும் வழங்கி விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் பாதுகாத்தார்கள்.

இது மாண்புமிகு அம்மாவின் அரசு என்பதனால் நாங்கள் விவசாயிகளை கனிவோடு பாதுகாப்பதில் அதிக அக்கறை எடுத்துக்கொள்கிறோம்.

புதுக்கோட்டை நெடுவாசலில் நடைபெறும் ஹைட்ரோ கார்பன் திட்டத்திற்கு நெடுவாசல் கிராமத்தில் வணிக ரீதியாக உற்பத்தி செய்வதற்கு பெட்ரோலியம் சுரங்க குத்தகை உரிமம் மாநில அரசு வழங்கவில்லை எனவும், விவசாயிகள் இத் திட்டத்தால் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என தெரிவித்துள்ளதால் நெடுவாசல் கிராமத்தில் இத்திட்டத்திற்கு மாநில அரசு அனுமதி வழங்காது என்றும், எனவே, நெடுவாசல் மக்களும், விவசாயிகளும் எந்த அச்சமும் கொள்ள தேவையில்லை எனவும் தெரிவித்தேன். தமிழகத்தில் விவசாயிகள் பாதிப்படையக் கூடிய எந்தத் திட்டமானாலும், அதனை, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தாது எனவும் மாநில அரசின் இந்த உறுதியை ஏற்று, நெடுவாசலில் நடைபெற்று வரும் போராட்டத்தை கைவிட வேண்டுமென்றும் நெடுவாசல் கிராமப் பிரதிநிதிகளை கேட்டுக் கொண்டேன்.

இது மக்கள் அரசு. மக்களுக்காக பல்வேறு கோரிக்கைகளுக்கு செவி சாய்ந்து விரைந்து செயல்படுத்தும் அரசு என்பதால் மீண்டும் நான் உறுதி கூறுகிறேன். விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கும் எந்த திட்டத்தையும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகளில் ஒரு சிலவற்றை மட்டுமே இங்கே என்னால் குறிப்பிட முடிந்தது. மாண்புமிகு அம்மாவின் ஆட்சியே தொடர்வதால், இன்னும் ஏராளமான திட்டப் பணிகளும் தொடரும் என்பதை இங்கே நான் உறுதியுடன் கூறுகிறேன்.

அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களும், அரசு அலுவலர்களும் உள்ளன்போடும், உறுதியோடும் உங்களுக்காக உழைப்பார்கள் என்று உறுதி கூறுகிறேன்.

இந்த விழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் என்னுடைய மனதார வாழ்த்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 08.03.2017 அன்று
திருநெல்வேலி மண்டலத்திற்கான அரசு திட்டங்களைத்
துவக்கி வைத்து ஆற்றிய உரை.

# திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ரூ.235.61 கோடி மதிப்பீட்டில் 1,098 நிறைவு செய்யப்பட்ட திட்டப்பணிகள்!



**மா**ண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி,

இந்த இனிய விழாவினை தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கிற மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே,

இந்த இனிய விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எம்.ஆர். விஜயபாஸ்கர் அவர்களே,

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி வி.எம். ராஜலட்சுமி அவர்களே,

மற்றும் நிகழ்ச்சியில் பங்கு பெற்றுள்ள
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

அரசு செயலாளர்களே, அரசு உயர் அதிகாரிகளே,

காவல்துறை அதிகாரிகளே!

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களே,

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களே,

கூட்டுறவு சங்க நிருவாகிகளே,

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

பெரியோர்களே, கழக உடன்பிறப்புகளே அனைவருக்கும் எனது பணிவான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் சக்தியை உந்து சக்தியாகக் கொண்டு, மகா சக்தியாக தமிழகத்தை ஆண்ட,

மக்கள் சேவையே மகேசன் சேவை என்று உன்னத குறிக்கோளுடன், பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் காட்டிய பாதையில், தமிழகத்தில் நல்லாட்சி நடத்திய இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்!

தலை நிமிர்ந்த தமிழ் இனத்தின்
உரிமைக் குரலாய் ஒலித்த
ஒப்பில்லா தெய்வம்!

தடுக்கப்பட்ட நீதிகளை தமிழருக்கு பெற்றுத் தந்த காவல் தெய்வம்!

பெண் இனத்திற்கு பெருமை சேர்த்த அற்புதத்தின் மறு பிறப்பு!

திரையரங்கம் முதல் திருவரங்கம் வரை, வெற்றி ஒன்றையே தனதாக்கிக் கொண்ட,

ஈடு இணையற்ற தலைவர்! மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள்!

இன்று சர்வதேச மகளிர் தினம். இந்த நன்நாளில் பெண்களுக்கு எல்லாம் காவல் தெய்வமாக விளங்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வாழும் திசை நோக்கி பணிந்து வணங்குகிறேன்.

பல நூறாண்டுகள் பேசும் சாதனைகளை அடுக்கடுக்கான திட்டங்கள் மூலம் மிகக் குறுகிய காலத்திலேயே நிறைவு செய்து அதற்கான தொடக்க விழாக்களை அடுத்தடுத்து தொடர்ச்சியாக நடத்தும் அரிய வாய்ப்பினை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியால் அம்மா அரசு பெற்றிருக்கிறது.

இத்திட்டங்களில் பெரும்பாலானவை மாண்புமிகு அம்மா அவர்கள் நித்தம் நித்தம் யோசித்து விதி 110இன் கீழ் அறிவித்த புத்தம் புதிய திட்டங்களாகும்.

மாண்புமிகு அம்மா அவர்களால் 110 விதியின் கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்களில் பல நிறைவு செய்யப்பட்டு உள்ளன.

மீதம் விரைவாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சிலர், அரசியல் ஆதாயத்திற்காக வாக்குறுதிகளை அள்ளி வீசிவிட்டு அதனை செயல்படுத்த முடியாமல் திணறியதையெல்லாம் நீங்கள் நன்கு அறிவீர்கள்.

ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள், ஒரு திட்டத்தை அறிவிப்பதற்கு முன்னால் அதனை அலசி ஆராய்ந்து, இந்த திட்டத்தினால் எத்தனை மக்கள் பயனடைவார்கள்,

எத்தகைய மக்கள் பயனடைவார்கள்,

எத்தனை விரைவாகப் பயனடைவார்கள்



என்பதை முதலில் ஆழ்ந்து சிந்தித்த பிறகு தான் திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை எடுப்பார்கள்.

அதனால் தான் அம்மா அவர்கள் தீட்டிய திட்டங்கள் அனைத்தும் வரலாற்றில் இடம் பிடித்தன.

மக்களால் நான் – மக்களுக்காகவே நான் என முழங்கிய மாண்புமிகு அம்மா அவர்கள் – மக்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தார்கள்.

இதன் காரணமாகவே அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் தலையெழுத்தையே மாற்றி தமிழகத்தை வளம் மிக்க மாநிலமாகவும், வசதி மிக்க மாநிலமாகவும், மக்கள் மகிழ்ச்சியோடு வாழத்தக்க மாநிலமாகவும் முன்னேற்றி, மக்கள் மனதில் நீக்கமற நிறைந்திருக்கிறார்கள். இந்த பூமி உள்ள வரை, மனிதர் உள்ள வரை, மாண்புமிகு அம்மாவின் புகழ் நிலைத்து நிற்கும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியும் தொடர்ந்து நிலைத்து நிற்கும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணங்களை நிறைவேற்றும் வகையில், தமிழ்நாட்டை பல மண்டலங்களாகப் பிரித்து முடிவுற்ற திட்டப் பணிகளையும், தொடங்கப்போகும்

பணிகளையும் தொடங்கி வைக்க மாண்புமிகு அம்மா அவர்களால் இந்த அரசு பணிக்கப்பட்டிருப்பதாகவே உணர்கிறேன்.

கடந்த சட்டப்பேரவை தேர்தலுக்கான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் தேர்தல் அறிக்கையில் மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவும், தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், முதலமைச்சராக பதவியேற்ற முதல் நாளிலேயே 5 சிறப்பு திட்டங்களுக்கான கோப்புகளில் நான் கையெழுத்திட்டேன்.

- பணியிடங்களுக்கும், பிற வேலைகளுக்கும் எளிதில் செல்லும் வகையில் ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் உழைக்கும் மகளிர் பயன்பெறும் வகையில் சுமார் ரூ.200 கோடி செலவில் "அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தை" அறிமுகப்படுத்தினோம்.
- ஆண்டொன்றுக்கு சுமார் ஆறு இலட்சம் தாய்மார்கள் பயனடையும் வகையில், ஏழைக் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்பட்டு வந்த டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி 12 ஆயிரம் ரூபாயிலிருந்து 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் மீனவர்களுக்கான தனி வீட்டுவசதி திட்டத்தைச் செயல்படுத்தும் விதமாக, ரூ.85 கோடி செலவில் 5 ஆயிரம் வீடுகள் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது.
- 55 ஆயிரத்து 228 இளைஞர்கள் பயன்பெறும் வகையில், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர உதவித்தொகையை இரு மடங்காக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.
- மதுவிலக்கு படிப்படியாக அமல்படுத்தப்பட்டு, பூரண மதுவிலக்கு என்ற நிலை எய்தப்படும் என்ற அடிப்படையில் ஏற்கெனவே மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா

அவர்களால் ஆணையிடப்பட்டு, 500 மதுபானக் கடைகள் மூடப்பட்டன. அதனைத் தொடர்ந்து, இப்பொழுது மேலும் 500 மதுபானக் கடைகளை மூடியுள்ளோம்.

மாண்புமிகு அம்மாவின் ஆசியோடு பதவியேற்ற மாண்புமிகு அம்மாவின் அரசு, குறுகிய நாட்களிலேயே மேலும் பல நல்ல திட்டங்களை செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் நடப்பாண்டு பருவ மழை பொய்த்த காரணத்தினால் கடும் வறட்சி ஏற்பட்டு, விவசாயிகள் பாதிக்கப்பட்டதால், அவர்களது இன்னல்களைப் போக்கும் வண்ணம், விவசாயிகளுக்கு ரூ.2,247 கோடி பயிர் இழப்பு வறட்சி நிவாரண உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.
- மாநிலத்திலுள்ள நீர் ஆதாரங்களை திறம்பட மேலாண்மை செய்து, தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தி வறட்சியினை எதிர்கொள்ளவும், மழை நீரை சேமித்தும் புதிய நீர் ஆதாரங்களை உருவாக்கியும், பயனீட்டாளர்களின் பங்களிப்புடன் நீர் நிலைகளைப் புனரமைக்க பண்டைய "குடிமராமத்து" திட்டத்திற்கு புத்துயிர் அளித்து நடப்பு நிதியாண்டில் மட்டும் ரூ.100 கோடி மதிப்பில் செயல்படுத்திட ஆணையிடப்பட்டுள்ளது.
- 28.01.2017 அன்று சென்னை எண்ணூர் பகுதியில் ஏற்பட்ட எண்ணெய்க் கசிவு காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 30 ஆயிரம் மீனவக் குடும்பங்களுக்கு தலா ரூ.5,000 வீதம் இடைக்கால நிவாரணம், ரூ.15 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- மத்திய அரசின் ஏழாவது ஊதியக் குழு பரிந்துரைத்துள்ள திருத்திய ஊதிய விகிதங்களை, தமிழக அரசுப் பணியாளர்களுக்கும் மாற்றியமைப்பதற்கு தேவையான பரிந்துரைகளை அளித்திட அலுவலர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.




இந்த அரசு பதவியேற்ற குறுகிய நாட்களிலேயே அடுக்கடுக்கான பல மக்கள் பணிகளை செய்து வருவதை நீங்கள் அறிவீர்கள்.

கடந்த 04.03.2017 அன்று சென்னை மண்டலத்திற்குட்பட்ட ஏழு மாவட்டங்களில் ரூ.1,486 கோடியே 98 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு துறைகளைச் சார்ந்த புதிய திட்டப் பணிகளின் தொடக்க விழாவும், அடிக்கல் நாட்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றது.

சேலம் மண்டலத்திற்கு உட்பட்ட சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ரூ.330 கோடியே 84 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு 3,971 திட்டப்பணிகள் தொடங்கி வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளி மண்டலத்திற்கு உட்பட்ட அரியலூர், கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், திருச்சிராப்பள்ளி ஆகிய எட்டு மாவட்டங்களில் ரூ.623 கோடியே 55 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவு செய்யப்பட்ட 2,603 திட்டப்பணிகளை நான் தொடங்கி வைத்தேன்.

அதன் தொடர்ச்சியாக திருநெல்வேலி மண்டலத்திற்கு உட்பட்ட திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய

3 மாவட்டங்களின் முடிவுற்ற திட்டப்பணிகளை துவக்கி வைத்ததில் நான் மிக்க மன நிறைவு கொள்கிறேன்.

வேளாண் குடிமக்களும், தோட்டத் தொழிலாளர்களும் அதிகமாக வசிக்கக்கூடிய மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம். சங்க இலக்கியத்தில், நில அமைப்பிற்கு ஏற்றாற்போல் நிலத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்து வகையாகப் பிரித்தார்கள். இந்த ஐந்து வகை நிலங்களும் ஒரே மாவட்டத்தில் அமைந்திருப்பது என்பது அரிது. ஆனால், இந்த ஐந்து வகை நிலங்களையும் உடையது திருநெல்வேலி மாவட்டம் தான். இங்கே மலைகள் இருக்கிறது, காடுகள் இருக்கிறது, வயல்கள் இருக்கிறது, கடற்பகுதி இருக்கிறது. அதே நேரம் வறண்ட பகுதிகளும் இருக்கிறது. இத்தகைய சிறப்பு மிக்கது திருநெல்வேலி மாவட்டம் மற்றும் ஒரு சிறப்பு திருநெல்வேலிக்கு உண்டு. திருநெல்வேலி மாவட்டம் அதிக பள்ளிகளையும் கல்லூரிகளையும் பெற்றது. அதனால் தான் பாளையங்கோட்டையை "தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு" என்று அழைக்கிறார்கள். "கல்வி சிறந்த தமிழ்நாடு" என்று பாடிய மகாகவி பாரதியார் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவ்வளவு சிறப்பு மிக்கது திருநெல்வேலி மண்டலம்.

உலகம் போற்றும் சுவாமி விவேகானந்தர் ஞானம் பெற உந்துதலாக இருந்த இடம் கன்னியாகுமரி.

எனவே இந்த விழாவில் கலந்து கொள்வது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கிறது.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில், ரூ.27 கோடியே 60 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள குழந்தைகள் நல ஒப்புயர்வு மையம் ஒன்றும் மற்றும் செவிலியர் பயிற்சி பள்ளி விடுதி கட்டடம், ரூ.14 கோடியே 98 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள துப்புரவு பணியாளர்கள் குடியிருப்புகள், அலுவலக கட்டடங்கள் மற்றும்

குடிநீர் மேம்பாட்டுப் பணிகள், கரந்தனேரியில் 110 கிலோவாட் மின்திறன் கொண்ட துணை மின் நிலையம் உள்ளிட்ட 102 பணிகள் ரூ.88 கோடியே 21 இலட்சம் செலவில் நிறைவு செய்யப்பட்டு துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் உயர்கல்வித்துறையின் சார்பாக நாகலாபுரத்திலுள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிக்கான கட்டடங்கள், மாணவர் விடுதிகள், வ.உ.சி. பொறியியல் கல்லூரி மாணவர் விடுதி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், அங்கன்வாடி கட்டடங்கள், பசுமை வீடுகள், பஞ்சாயத்து சேவை மையங்கள் உள்ளிட்ட ரூ.124 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டில் 822 திட்டப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம், திங்கள் சந்தை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 500 மெட்ரிக் டன் சேமிப்புக் கிடங்கு ரூ.50 இலட்சம் செலவிலும், கைவினைஞர்களின் தரமான தயாரிப்புகளை நியாயமான விலையில் விற்பனை செய்ய ரூ.2 கோடியே 40 இலட்சம் செலவில் கன்னியாகுமரியில் நகர்ப்புற கண்காட்சி / குடில், ரூ.1 கோடியே 50 இலட்சம் செலவில் சுகாதாரப் பணியாளர்கள் குடியிருப்பு, நாகர்கோவிலில் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் உள்ளிட்ட 174 பணிகள் ரூ.22 கோடியே 50 இலட்சம் செலவில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

ஆக மொத்தம், 1,098 திட்டப்பணிகள், ரூ.235 கோடியே 61 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவு செய்யப்பட்டு, இன்றைய தினம் மக்களின் பயன்பாட்டுக்கென துவக்கி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மீனவ நண்பனாக விளங்கினார். அவர்களுடைய வழியில் மாண்புமிகு அம்மா அவர்களும் மீனவர்களுக்கெல்லாம் தாயாக விளங்கினார். மீனவர்களுக்கு எப்போதெல்லாம் இடர்பாடுகள்

ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டு இன்னல்கள் தீர்க்கப்படுகின்றன.

மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கைகளினால் **2,541** மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். கடந்த **6**ஆம் தேதி இராமேஸ்வரம் மீனவர்கள் பாக். வளைகுடாவில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினரால் சுடப்பட்டார்கள். இந்த துப்பாக்கி சூட்டில் திரு. பிரிட்ஜோ உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன். உயிரிழந்த மீனவரின் குடும்பத்திற்கு உடனடியாக ரூ.**5** இலட்சம் நிதி வழங்க உத்தரவிட்டு, துப்பாக்கி சூட்டில் காயமடைந்த மற்றவருக்கு தொடர் சிகிச்சை அளிக்க மாவட்ட நிருவாகத்திற்கு உத்தரவிட்டேன். இலங்கை கடற்படையினரின் அத்துமீறலை உடனடியாக நிறுத்த பாரதப் பிரதமரை வலியுறுத்தி கடிதம் எழுதியுள்ளேன். அதற்கிணங்க, மத்திய அரசும் இலங்கை அரசிடம் விளக்கம் கோரியுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் வந்த அம்மா அரசும் மீனவர்களுக்கு எப்போதும் உறுதுணையாகவும், நேசமாகவும், பாசமாகவும் இருக்கும் என்பதை உறுதியாக கூறுகிறேன்.

இன்றைக்கு, தமிழ்நாட்டில் **140** ஆண்டுகளுக்கு பின்னர் வரலாறு காணாத அளவில் வறட்சி ஏற்பட்டு உள்ளது. இந்த வறட்சியால் விவசாயிகளை பாதுகாக்கும் விதமாக, விவசாய பெருமக்களின் இன்னல்களைப் போக்கும் விதமாக அவர்களுக்கு ரூ. **2,247** கோடி பயிர் இழப்பு வறட்சி நிவாரணத் தொகை வழங்கிட மாண்புமிகு அம்மாவின் அரசு உடனடியாக உத்தரவிட்டது. இந்த நிவாரணத்தொகை வழங்கும் பணி **06.03.2017** அன்று சென்னையில் துவக்கி வைக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மூலம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகைக்கான உத்தரவுகள் வழங்கப்பட்டு, விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நிவாரணத் தொகை உடனடியாக




செலுத்தப்படும். இதனால் வறட்சியால் பாதிக்கப்பட்ட 32 இலட்சத்து 30 ஆயிரத்து 191 விவசாயிகள் பயனடைவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

வறட்சி காரணமாக வேலை வாய்ப்பின்றி பாதிக்கப்பட்டுள்ள விவசாய தொழிலாளர்களுக்கு, போதிய வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், 100 நாட்கள் பணி வரம்பு என்பது 150 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

வறட்சி காரணமாக கிராமப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகளுக்காக ரூ.350 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணையிடப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

வறட்சி காரணமாக நகர்ப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் ரூ.160 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

பொதுப்பணித் துறை மூலமாக நிலத்தடி நீர்த்தேக்கும் அமைப்பு, நிலத்தடி நீர் செறிவூட்டும் அமைப்பு போன்ற நீராதாரங்களை மேம்படுத்த ரூ.25 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இப்படிப்பட்ட திட்டங்கள் அனைத்தும் ஏழை, எளிய மக்களை மையமாக வைத்து மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது.

அதிலும் குறிப்பாக மகளிருடைய நலனுக்காகவும், பாதுகாப்புக்காகவும் மாண்புமிகு அம்மாவின் அரசு ஏராளமான திட்டங்களை வகுத்துள்ளது. "மகளிரும், குழந்தைகளும் என் இரு கண்கள்" என்பார் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா வழியில் வந்த இந்த அரசு பொறுப்பேற்ற முதல் நாளிலேயே கையெழுத்திட்ட ஐந்து திட்டங்களில் இரண்டு திட்டங்கள் மகளிரின் நலனுக்குரியது என்பதை நான் என்னுடைய உரையின் தொடக்கத்திலேயே குறிப்பிட்டு இருந்தேன். இதை ஏன் நான் இந்த நேரத்தில் குறிப்பிடுகிறேன் என்றால், இன்று சர்வதேச மகளிர் தினம். சர்வதேச மகளிர் தினத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் வந்த அம்மாவுடைய அரசு இங்கே வருகை தந்திருக்கிற மகளிர் உள்ளிட்ட அனைத்து மகளிருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் பெண்களின் நலனுக்காக கொண்டு வந்த திட்டங்களை எல்லாம் இங்கே நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். தொட்டில் குழந்தை திட்டம், பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்கள், இந்தியாவிலேயே முதன்முறையாக அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், அனைத்து மகளிர் அதிரடிப்படை மற்றும் அனைத்து மகளிர் காவல் படை, தாயின் முதல் எழுத்தை குழந்தையின் தலைப்பு எழுத்தாக பயன்படுத்துதல், வீரதீர

பெண்மணிக்கு கல்பனா சாவ்லா விருது, ஏழை பெண்களுக்கான திருமண உதவித் திட்டம், பெண்களை ஊக்கப்படுத்தும் வகையில் பட்டம் மற்றும் பட்டயம் பெற்ற பெண்களுக்கான திருமண உதவித் தொகை, பெண்களின் வேலை பளுவைக் குறைக்கும் வகையில் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின் விசிறி, இளம் பெண்களின் சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் விலையில்லா சானிடரி நாப்கின் திட்டம், மகளிர் சுகாதார வளாகங்கள், 24 மணி நேர மகப்பேறு மருத்துவ சேவை அளிக்கும் திட்டம், இன்னும் பல திட்டங்களை மகளிருக்கு அள்ளி அள்ளி வழங்கிய ஒரே அரசு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு தான் என்பதை நான் சொல்லி உங்களுக்கு தெரிய வேண்டியது இல்லை. இன்னொரு சிறப்பு, ஒவ்வொரு ஆண்டும் சமூக தொண்டு செய்யும் பெண்களை ஊக்குவிக்கும் வகையில் உயரிய விருதான ஔவையார் விருதினை மாண்புமிகு அம்மா அவர்கள் தான் உருவாக்கி வழங்கினார்கள்.

“எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்” என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களின் மகத்தான கொள்கை. அந்த கொள்கை வழியில், மக்கள் மேம்பாட்டிற்கு அயராது பாடுபட எங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் பயிற்சி அளித்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் வந்த இந்த அரசு எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்பதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்து வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசு செயல்படுத்தும் திட்டங்கள் அனைத்தும் ஏழை, எளிய மக்கள் நலனையே மையமாகக் கொண்டது. எனவே மக்கள் அனைவரும் இந்தத் திட்டத்தின் பயன்களை முழுமையாகப் பெற்று அவர்கள் வாழ்வில் முன்னேற வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்விழா மிகச் சிறப்பாக நடைபெற அனைத்து ஏற்பாடுகளையும் செய்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், அரசு உயர் அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து நல் இதயங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
08.03.2017 அன்று மதுரை மண்டலத்திற்கான
அரசு திட்டங்களைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை

## மதுரை மண்டலத்திற்கு உட்பட்ட 6 மாவட்டங்களில் ரூ.1,004.13 கோடி மதிப்பீட்டில் 6,874 திட்டப்பணிகள்!



**மா**ண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா என்ற தெய்வத்தை வணங்கி,

இந்த சிறப்பான நிகழ்ச்சியினை தலைமை தாங்கி நடத்தி கொண்டிருக்கிற

மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே,

இந்த எழுச்சியோடு நடைபெற்று கொண்டிருக்கிற இந்த விழாவிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கிற

மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்களே,

மாண்புமிகு கூட்டுறவு துறை அமைச்சர் திரு. செல்லூர் ராஜூ அவர்களே,

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார் அவர்களே,

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்களே,

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் எம். மணிகண்டன் அவர்களே,

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் திரு. ஜி. பாஸ்கரன் அவர்களே,

விழாவில் பங்குகொண்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

அரசு செயலாளர்களே,

காவல்துறை அதிகாரிகளே,

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

முன்னாள் ஊராட்சிமன்ற பிரதிநிதிகளே,

கூட்டுறவு சங்க நிருவாகிகளே,

பத்திரிக்கை மற்றும் ஊடக நண்பர்களே,

அனைவருக்கும் எனது பணிவான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை மாநகருக்கு மற்றொரு பெயர் தூங்கா நகரம். இதற்குக் காரணம், இரவு முழுவதும் தூங்காமல் கண் விழித்து வணிகம் செய்கிறார்கள் மதுரை மாநகர மக்கள்.

மீன் தூங்குவது இல்லை. மீனைப்போன்ற கண்களையுடைய அனைவரையும் காக்கும் அருள்மிகு மீனாட்சி தாயும் தூங்காமல்

கண் விழித்து மதுரை மக்களை காப்பாற்றி வருகிறார் என்ற மற்றொரு பொருளிலும் மதுரையை தூங்கா நகரம் என்று அழைக்கிறோம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆணி வேராகத் திகழ்ந்த மாண்புமிகு அம்மா எங்களுக்கு மகா சக்தியாக விளங்கி தமிழக மக்களை காப்பாற்ற கண் துஞ்சாமல் அயராது உழைத்தார்கள்.

வடக்கே டில்லியைப் போல தெற்கே பல மன்னர்களால் ஆளப்பட்ட ஒரு நகரம் மதுரை. குறிப்பாக பாண்டியர்களாலும், சோழர்களாலும், நாயக்கர்களாலும், இந்நகரம் பல கால கட்டங்களில் ஆளப்பட்டுள்ளது. அந்தந்த மன்னர்கள் தங்கள் கலை, கலாச்சாரம், கட்டடக்கலை, மொழி, பண்பாடு அனைத்தையும் இங்கு நினைவு சின்னங்களாக விட்டுச் சென்றிருக்கிறார்கள். அதனால் தான் மதுரை ஒரு கலைகளின் சங்கமமாக இன்றும் விளங்கி வருகிறது.

இத்தனை சிறப்புகள் மிக்க மதுரைக்கு இன்னொரு சிறப்பு என்னவென்றால், தனி ஒரு பெண்ணால் சர்வ அதிகாரமும் படைத்த அரசனையே எதிர்த்து நீதி பெற முடியும் என்று நிரூபித்தது மதுரை தான் நம் மதுரை. அதே வழியில் தான், தனியொரு பெண்மணியாக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழக மக்களுக்காக போராடிப் போராடி பல வெற்றிகளைத் தேடித் தந்தார்கள் என்பதை இந்த உலகம் அறியும். தமிழக மகளிருக்கு சகலவித உரிமைகளும் வாய்ப்புகளும் கிடைத்து, அவர்கள் வேகமாக முன்னேறி இன்று பல சாதனைகளை படைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனை சர்வதேச மகளிர் தினமான இன்று கூறிக் கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

ஒரு பெண்ணின் சிரமம் மற்றொரு பெண்ணுக்குத் தான் தெரியும் என்பார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதில் இருந்து



மகளிருடைய அல்லல்களை எல்லாம் தீர்க்கும் விடிவெள்ளியாக பல்வேறு மகளிர் நலத் திட்டங்களை அடுக்கடுக்காக செயல்படுத்தினார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் அம்மா அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் நாளே, கையெழுத்திட்ட ஐந்து சிறப்பான திட்டங்களில் இரண்டு மகளிருக்கானது என்பதிலிருந்தே இந்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு என்பது விளங்கும்.

பெண்கள் நாட்டின் கண்கள் என நினைத்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசும்போது, “பெண்கள் நினைத்தால் தங்கள் தலையெழுத்தை மட்டுமல்ல, மற்றவர்களின் தலையெழுத்தையும் மாற்ற முடியும். அவர்களுக்குத் தேவை வாய்ப்புகள். அந்த வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்குவதே எனது இலட்சியம்” என்று முழங்கினார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் இலட்சியத்தைப் போன்றே வேறு எந்த நாட்டிலும், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு பல்வேறு நலத் திட்டப் பணிகளை மகளிருக்கு அள்ளி அள்ளிக் கொடுத்தது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசு மட்டுமே. எனவே, அம்மாவின் வழியில் வந்த அம்மா அரசு மகளிருக்கு ஏராளமான நலத் திட்டப் பணிகளை வழங்கக் காத்திருக்கிறது என்ற உறுதியுடன், சர்வதேச மகளிர் தினமான இன்று அனைத்து மகளிருக்கும்



என் உளமார்ந்த மகளிர் தின நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த ஊர் இந்த மதுரை. தமிழை பக்தி இலக்கியத்துடன் வளர்த்த பூமி இந்த பூமி. அதனால் தான் தொலைநோக்கு பார்வையுடன் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் உலகத் தமிழ்ச் சங்கத்தை மதுரையிலே நிறுவ உத்தரவிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் உலக தமிழ்ச் சங்கம் நிறுவும் திட்டத்திற்கு புத்துயிர் கொடுத்து, நிதி ஒதுக்கி இத்தனை பிரம்மாண்டமான கட்டடத்தை நிறுவி சாதனை படைத்தார்கள்.

இந்த விழா உலகத் தமிழ்ச் சங்க வளாகத்திலே நடைபெறுவதை வரலாற்று சிறப்பாக கருதுகிறோம். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் அறிவிக்கப் பெற்ற உலகத் தமிழ்ச் சங்க வளாகம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 14.5 ஏக்கர் நிலப் பரப்பில் நிறுவப் பெற்று ரூ. 37 கோடியே 25 இலட்சம் செலவில் இந்தக் கட்டடம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களால் 01.03.2016 அன்று திறந்து வைக்கப்பட்டது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே பகிர்ந்து கொள்கிறேன். அதன் பிறகு, இவ்வளாகத்தில் நடைபெறும் மிகப்பெரிய அரசு நிகழ்ச்சி இதுதான் என்பதனையும் நினைவூட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப் பெற்று, நிறைவு செய்யப்பட்ட பல்வேறு திட்டப் பணிகளை இந்த வளாகத்திலே தொடங்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மதுரை மாவட்டத்தில், புரட்சித்தலைவர் காலனி திட்டப்பகுதியில் ரூ.20 கோடியே 35 இலட்சம் செலவில் 276 குடிசை மாற்று வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புகள், ரூ. 1 கோடியே 50 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம் உட்பட ரூ.91 கோடியே 51 இலட்சம் செலவிலான 1,641 பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

தேனி மாவட்டம், பெரியகுளத்தில் ரூ.15 கோடியே 53 இலட்சம் செலவில் குடிநீர் திட்டம் மற்றும் 110 கிலோவாட் மின்திறன் கொண்ட துணை மின் நிலையம் உள்ளிட்ட ரூ.84 கோடியே 43 இலட்சம் செலவிலான 333 பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மாநகராட்சியில் ரூ.5 கோடி செலவில் புதிய அலுவலக கட்டடம், நத்தம் பேரூராட்சியில் ரூ. 4 கோடியே 90 இலட்சம் செலவில் புதிய பேருந்து நிலையம் மற்றும் ரூ. 2 கோடியே 2 இலட்சம் செலவில் கட்டப்பட்ட திண்டுக்கல் (கிழக்கு) வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் உள்ளிட்ட ரூ. 103 கோடியே 93 இலட்சம் செலவிலான 1,644 பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

சிவகங்கை மாவட்டத்தில் ரூ.7 கோடி செலவில் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் இயந்திரம், காரைக்குடி, அழகப்பா பல்கலைக் கழகத்தில் ரூ. 3 கோடியே 52 இலட்சம் செலவில் மகளிர் விடுதிக் கட்டடங்கள், கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் உட்பட ரூ.45 கோடியே ஒரு இலட்சம் செலவிலான 548 பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன.



இராமநாதபுரம் மாவட்டத்தில், ரூ.22 கோடியே 90 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள பாம்பன் மீன் இறங்குதளம், முகுந்தராயர் சத்திரம் மீன் இறங்குதளம், வேதாளை மீன் இறங்கு தளம் மற்றும் பரமக்குடி மற்றும் நீராவியில் ரூ.3 கோடியே 5 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவியர் விடுதிகள் உள்ளிட்ட ரூ.600 கோடியே 18 இலட்சம் செலவிலான 1,398 பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை மற்றும் சாத்தூரில் ரூ.14 கோடியே 50 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மதுரை காமராஜர் பல்கலைக் கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடங்கள், ரூ. 11 கோடியே 6 இலட்சம் செலவில் அச்சங்குளம் மற்றும் கோட்டைப்பட்டியில் கட்டப்பட்டுள்ள தடுப்பணைகள், விருதுநகர் மாவட்ட தலைமையிடத்து மருத்துவமனையில் ரூ.3 கோடியே 33 இலட்சம் மதிப்பிலான கட்டடங்கள் உள்ளிட்ட ரூ.79 கோடியே 7 இலட்சம் செலவிலான 1,310 பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

ஆக மொத்தம், மதுரை மண்டலத்திற்கு உட்பட்ட மதுரை, தேனி,திண்டுக்கல்,சிவகங்கை,இராமநாதபுரம்,விருதுநகர் ஆகிய 6 மாவட்டங்களில், பல துறைகளின் சார்பில் ரூ. 1,004 கோடியே 13 இலட்சம் மதிப்பீட்டில் 6,874 திட்டப்பணிகள் நிறைவு செய்யப்பட்டு, அதற்கான துவக்க விழா நடைபெறுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்திற்குட்பட்ட இராமேஸ்வரத்தில் மீன்பிடி தொழில் முதன்மை தொழிலாக நடந்து வருகிறது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மீனவர்களின் நலனிலும் பாதுகாப்பிலும் அதிக அக்கறை கொண்டு பல்வேறு நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தினார்கள்.

முந்தைய தி.மு.க. அரசால் **2010–2011**ஆம் ஆண்டில் மீன் வளத்துறைக்காக ஒதுக்கப்பட்டிருந்த **193** கோடியே **33** இலட்சம் ரூபாயை, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் **2016–2017**ஆம் ஆண்டில் **743** கோடியே **79** இலட்சம் ரூபாயாக பன்மடங்கு உயர்த்தி மீனவர்கள் வாழ்வுக்கு வளமூட்டினார்கள் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாநிலத்தின் மீன்வள உட்கட்டமைப்பு வசதிகளை முனைப்புடன் மேம்படுத்தும் விதமாக, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு கடந்த **5** ஆண்டுகளில் எப்பொழுதும் இல்லாத வகையில் ரூ.**1,104** கோடியே **91** இலட்சம் மதிப்பீட்டில் பணிகளை செய்து முடித்துள்ளது.

புதிய சூரை தூண்டில் மற்றும் செவல் வலை மீன்பிடி விசை படகுகள் கட்டிட **50** விழுக்காடு மானியமாக அதிகபட்சமாக ரூ.**30**இலட்சம்வழங்கும்திட்டத்தின்கீழ்**11**பயனாளிகுழுக்களுக்கு ரூ.**3** கோடியே **30** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு படகு கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மீன்பிடிப்பு குறைவு கால சிறப்பு நிவாரணமாக **2016–2017**ஆம் ஆண்டு **4,524** மீனவ குடும்பங்களுக்கு ரூ.**22** கோடியே **62** இலட்சம் வழங்கப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூரில் சுமார் ரூ.**114** கோடி செலவில் மீன்பிடி துறைமுக கட்டுமானப் பணிகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு தற்போது பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பாக் வளைகுடாப் பகுதியில் தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையினை நிலைநாட்டுவதிலும், தி.மு.க. ஆட்சியில் தாரைவார்க்கப்பட்ட கச்சத்தீவினை மீட்டெடுப்பதிலும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உறுதியான நிலைப்பாட்டினை தற்போதுள்ள அம்மாவின் அரசு தொடர்ந்து வலியுறுத்தும் விதமாக, 27.02.2017 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை புதுடெல்லியில் நேரில் சந்தித்து மீண்டும் ஒரு கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த 6ஆம் தேதி இராமேஸ்வரம் மீனவர்கள் பாக் வளைகுடாவில் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினரால் சுடப்பட்டார்கள். இந்த துப்பாக்கி சூட்டில் திரு. பிரிட்ஜோ உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன். உயிரிழந்த மீனவரின் குடும்பத்திற்கு உடனடியாக ரூ. 5 இலட்சம் நிதி வழங்க உத்தரவிட்டு, துப்பாக்கி சூட்டில் காயமடைந்த மற்றவருக்கு தொடர் சிகிச்சை அளிக்க மாவட்ட நிருவாகத்திற்கும் உத்தரவிட்டேன். இலங்கை கடற்படையினரின் அத்துமீறலை உடனடியாக நிறுத்த பாரதப் பிரதமரை வலியுறுத்தி கடிதம் எழுதியுள்ளேன். அதற்கிணங்க, மத்திய அரசும் இலங்கை அரசிடம் விளக்கம் கோரியுள்ளது.

மீனவர்களின் நலத்திலும், வளத்திலும் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் கொண்ட ஈடுபாடும் அக்கறையும் போலவே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மீனவர்களின் பாதுகாப்பிற்கும் வாழ்வாதாரத்திற்கும் பாதுகாவலராக விளங்கியதைப் போல, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் வந்த இந்த அரசு மீனவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் என உறுதிபடக் கூறிக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் நடப்பாண்டு பருவமழை பொய்த்த காரணத்தினால் கடும் வறட்சி ஏற்பட்டு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களின் இன்னல்களைப் போக்கும் வண்ணம் விவசாயிகளுக்கு ரூ. 2,247 கோடி பயிர்

இழப்பு வறட்சி நிவாரணத் தொகை வழங்கிட மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த அரசு உடனடியாக உத்தரவிட்டது. இந்த நிவாரணத்தொகை வழங்கும் பணி 06.03.2017 அன்று சென்னையில் துவக்கி வைக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகைக்கான உத்தரவுகளை மாண்புமிகு அமைச்சர்கள் வழங்க உள்ளார்கள். விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நிவாரணத் தொகை செலுத்தப்பட உள்ளது. இதனால் வறட்சியால் பாதிக்கப்பட்ட 32 இலட்சத்து 30 ஆயிரத்து 191 விவசாயிகள் பயனடைவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு தமிழகத்தில் பருவ மழை பொய்த்ததால் ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக கால்நடைகளுக்கு தீவனம் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள சிரமங்களை களையும் பொருட்டு டெல்டா மாவட்டங்கள் உட்பட தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் வட்டார அளவில் உலர் தீவனக் கிடங்குகள் திறக்கப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமல்ல, மாநிலத்திலுள்ள நீர் ஆதாரங்களை திறம்பட மேலாண்மை செய்து வறட்சியினை எதிர்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நீர் நிலைகளைப் புனரமைக்க பண்டைய குடிமராமத்து திட்டத்திற்கு புத்துயிர் அளித்து இந்த நிதியாண்டில் மட்டும் ரூ.100 கோடி மதிப்பில் திட்டப்பணிகள் செயல்படுத்தப்படும். வரும் ஆண்டில் ரூ.300 கோடி மதிப்பில் மக்கள் இயக்கமாக திட்டப் பணிகள் செயல்படுத்தப்படும்.

வறட்சி காரணமாக வேலை வாய்ப்பின்றி பாதிக்கப்பட்டுள்ள விவசாய தொழிலாளர்களுக்கு, போதிய வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், 100 நாட்கள் பணி வரம்பு என்பது 150 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

வறட்சி காரணமாக கிராமப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் ரூ. 350 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணையிடப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

வறட்சி காரணமாக நகர்ப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் ரூ.160 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணையிடப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

பொதுப்பணித்துறை மூலமாக நிலத்தடி நீர்த்தேக்கும் அமைப்பு, நிலத்தடி நீர் செரிவூட்டும் அமைப்பு போன்ற நீராதாரங்களை மேம்படுத்த ரூ.25 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அரசு, மாண்புமிகு அம்மா வழியிலேயே, மாண்புமிகு அம்மாவின் எண்ணங்களை எல்லாம் நிறைவேற்றி, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எப்பொழுதுமே விசுவாசமாக இருக்கும் என்று உறுதியளிக்கிறேன். விசுவாசம் என்றால் என்ன என்பதை விளக்குவதற்கு ஒரு சிறிய சுருக்கமான கதை.

“ஒரு காட்டில் ஒரு பெரிய மரம் இருந்தது. அந்த மரத்தின் நிழலில் பல பறவைகள் கூடுகட்டி மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தன. அந்த மரத்தின் மீது அன்பு கொண்டிருந்தன. ஆனால் இறைவன் இந்த மரத்தில் வாழும் பறவைகள் யாவும் அந்த மரத்தின் மீது உண்மையிலேயே அன்பு கொண்டிருக்கின்றனவா என்பதை சோதிக்க நினைத்தார்.

எனவே மாயையாக அந்த மரத்தை பட்டுப் போகச் செய்தார். இந்த காட்சியை கண்ட ஒரு கிளி மட்டும் திடுக்கிட்டது. அம்மரத்தின் நிலை அறிந்து கண்ணீர் விட்டது. இத்தனை நாள் இந்த மரத்தின் பொந்தில் எவ்வித ஆபத்துமின்றி அமைதியுடன் என் வாழ்க்கையை கழித்தேன். எனக்கு குடியிருக்க இடம் தந்த இந்த மரம் என் பசியைப் போக்கி வைக்கக் கனிகள் தந்தது, என்னை அலங்கரித்துக் கொள்ள பூக்களை தந்தது என தவித்தது.

இதில் வசித்த மற்ற பறவைகள் அனைத்தும் செழுமையான இடத்தை நோக்கி பறந்தன; ஆனால் கிளி மட்டும் அந்த மரத்தை விட்டு செல்லவில்லை. அந்த மரத்திலேயே தொடர்ந்து வசித்து வந்தது.

இந்த கிளியின் உறுதியினை அறிந்த இறைவன் அதன்முன் தோன்றி “நீ தங்கியிருக்கும் இந்த மரம் தற்பொழுது பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, பசுமையான வேறு இடத்திற்கு செல்லாமல் இங்கேயே இன்னும் ஏன் வாழ்ந்துக் கொண்டிருக்கிறாய்” எனக் கேட்டார்.

அதற்கு அந்தக் கிளி “இந்த மரத்தில் தான் என் தாய் என்னை ஈன்றாள். அதன் பின்னர் இந்த மரமே எனக்குத் தாயாகவே இருந்து எனக்கு உணவூட்டியது, உற்ற நண்பனைப்போல என்னிடம் இணைந்து பிணைந்து உறவாடியது. இயற்கை சீற்றங்களிலிருந்து என்னைக் காப்பாற்றியது, எனவே தற்சமயம் இந்த மரத்திற்கு ஒரு பாதகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கலாம், என் தாயைப் போன்று ஒத்திருக்கும் இந்த மரத்தினை விட்டு செல்வது தர்மம் ஆகாது” எனக் கூறியது.

“என்னிடம் இது காட்டிய அன்பிற்காக நான் பெரியதாய் கடமைப்பட்டுள்ளேன். எனவே என்னை தயவு செய்து இந்த மரத்தை விட்டு போ என்று மட்டும் கூறாதீர்கள்” என்று கிளி கூறியது, இந்த கிளியின் வார்த்தையைக் கேட்டு இறைவன்

மிகவும் மகிழ்ந்து போனான். தன்னுடைய நலனை கருதாமல் தன்னைப் பேணிக்காத்த மரத்திற்கு விசுவாசமாக இருக்க நினைக்கும் இந்தக் கிளி அபூர்வமானது, வணங்கத்தக்கது என எண்ணிய இறைவன், ‘‘சரி, இந்த மரத்தை விட்டு போக வேண்டாம். வேறு என்ன வரம் வேண்டும். கேள்’’ என்றார். அதற்கு அந்தக் கிளி ‘‘இந்த மரத்தை பழையபடியே பசுமையாக்க வேண்டும்’’, எனக் கேட்டது.

உடனே இறைவன் கிளியிடம் ‘‘இந்த மரம் உண்மையிலேயே பாதிப்புக்கு உள்ளாகவில்லை. இங்கு வசிக்கும் பறவைகளின் எண்ணங்களை அறியவே நான் ஒரு மாயையை உருவாக்கினேன். கிளியான நீ மரத்தின் மீது கொண்டிருந்த விசுவாசத்தினை கண்டு மெய் சிலிர்த்து, மாயை விலக்கி மீண்டும் முன்போல் இந்த மரத்தை பூத்து குலுங்கச் செய்கிறேன்’’, என்றார்.

ஒரு சிறிய கிளியானது, தன்னை வளர்த்து ஆளாக்கிய மரத்தின் மீது மிகுந்த அன்பு கொண்டிருக்கிறது, அதற்காக இறைவனிடம் வாதாடி அந்த மரத்தை மீண்டும் பூத்துக் குலுங்கச் செய்தது. ஆனால் சில மனிதர்களோ, தங்களுடைய சுயநலத்தை கருத்தில் கொண்டு, தாங்கள் வந்த பாதையை மறந்து எங்கெங்கோ சென்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் ....... தன்னலம் கருதாமல், விசுவாசமாக இருந்தால், இறைவன் நம்மை உயர்த்துவார். நன்றி பாராட்டுவது, விசுவாசமாக இருப்பது, இறைவனையே அழைத்து வரும்’’ என்பதை நாம் மறக்கக் கூடாது.

மாண்புமிகு அம்மா அவர்கள் அடிக்கடி கூறுவார்கள், ‘‘என் எண்ணங்கள் மக்களைச் சுற்றியே அமைந்திருக்கின்றன, என்னுடைய செயல்பாடுகள் மக்களை மையப்படுத்தியே அமைந்திருக்கிறது’’ என்பார்கள். ‘‘ஏழைகள் ஏழைகளாகவே இருந்து விடக்கூடாது. அவர்களுடைய நிலை உயர வேண்டும். அதற்காகவே அல்லும் பகலும் நான் உழைத்து வருகிறேன்’’

என்று கூறி, தன்னைப் பின்பற்றுகிறவர்களையும் மக்களுக்காக உழைக்க ஊக்கப்படுத்தியவர்கள் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களிடம் விட்டுச் சென்ற மக்கள் பணிகள் அனைத்தையும் நாங்கள் நிறைவேற்றி விசுவாசமாக நடந்து கொள்வோம் என இந்த விழாவில் உறுதியளிக்கிறோம்.

இந்த இனிய விழாவிலே கலந்துகொண்டு நாங்கள் மேலும் பல திட்டங்களை செயல்படுத்த ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும் உங்களுக்கு நன்றி.

இந்த சிறந்த விழாவிற்கு ஏற்பாடு செய்த அனைத்து நல் இதயங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
22.03.2017 அன்று சட்டப்பேரவையில், டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் M.Phil., ஆராய்ச்சி படிப்பு படித்து வந்த சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர் திரு. முத்துகிருஷ்ணன் மரணம் குறித்து சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது ஆற்றிய உரை.

## வெளிமாநிலத்தில் உயர்கல்வி படிக்கச் செல்லும் மாணவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க அரசு ஏற்பாடு செய்யும்!



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மனிதராய்ப் பிறப்பது பெரிதல்ல,
பிறப்பிலே ஒரு சிறப்பு வேண்டும்
வளர்வது பெரிதல்ல,
நல்ல ஞானத்தோடு வளர வேண்டும்
சாதிப்பது பெரிதல்ல,

சாதனைகள், சரித்திரத்தில் இடம் பெற வேண்டும்

அந்த வகையில்,

பிறப்பிலேயே, சரித்திர சாதனைக்கு
சொந்தக்காரர் ஒருவர்,
உண்டு என்றால்......... அதுதான், அகிலம் போற்றும்,
**மாண்புமிகு அம்மா அவர்கள்.**

இனம் காத்து, மொழி காத்து, நதி காத்து, சமூக நீதி காத்து, எளியவர், வறியவர், உயிர் காத்து,

பெண் இனத்திற்கு பெருமை காத்து,
கால் பதித்த இடமெல்லாம்,
வரலாற்றுச் சுவடுகளாய் பதித்து,
எட்டுத் திசையிலும் வாழும்
எட்டரை கோடி தமிழர்களின்....... **இதயதெய்வம்**,
அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற
கழகம் என்னும், ஆல மரத்தினைத் தாங்குகின்ற வேராகி,
தமிழினத்தின் தலைமகளாய், முதல்வராய்,
மக்களால் நான் மக்களுக்காக நான்
என தவ வாழ்வு வாழ்ந்து,
இன்றைக்கு வங்கக் கடலோரம் தெய்வமாய் நின்று
நம்மை வழிநடத்திடும் இதயதெய்வம்
புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !

இந்த நல் வாய்ப்பினை உருவாக்கித்தந்த கழக பொதுச்செயலாளர் மாண்புமிகு சின்னம்மா அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !

புது டெல்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் M.Phil ஆராய்ச்சி படிப்பு மாணவரான சேலம் மாவட்டம், அரிசிப்பாளையத்தைச் சேர்ந்த திரு. ஜீவானந்தம் என்பவரின் மகன் திரு. முத்துகிருஷ்ணன் 13.03.2017 அன்று இறந்துள்ளார் என்ற செய்தியை அறிந்தவுடன், துயரமுற்று, அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்தேன்.

புதுதில்லியில் வசந்த விஹார் காவல் நிலையத்தில் முத்துகிருஷ்ணன் இறந்தது தொடர்பாக குற்ற எண்.120/2017 இந்திய தண்டனை சட்டப்பிரிவு 306 மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டப் பிரிவு 3 (1) (x)ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு, எய்ம்ஸ் மருத்துவமனையில் ஐந்து மருத்துவர்கள் அடங்கிய குழுவினரால் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு மறைந்த திரு. முத்துகிருஷ்ணனின் தந்தை திரு. ஜீவானந்தம் அவர்களிடம் அவரது உடல் ஒப்படைக்கப்பட்டது.

திரு. முத்துகிருஷ்ணன் அவர்களின் உடலை, அவருடைய சொந்த ஊருக்கு கொண்டு வருவதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்யுமாறு தமிழக அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தேன். அதன்படி, மறைந்த திரு. முத்துகிருஷ்ணன் அவர்களின் உடலை, அவரது சொந்த ஊருக்கு கொண்டு வருவதற்கு தமிழ்நாடு அரசால் அனைத்து உதவிகளும் செய்யப்பட்டது.

மறைந்த திரு. முத்துகிருஷ்ணன் அவர்களின் குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து அவருடைய குடும்பத்திற்கு மூன்று இலட்சம் ரூபாயை வழங்க ஆணையிட்டேன்.

மக்களவை உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் மற்றும் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் மறைந்த திரு. முத்துகிருஷ்ணனின் உடலுக்கு மரியாதை செலுத்தி, தமிழக அரசின் சார்பில் அறிவிக்கப்பட்ட நிவாரணத் தொகையான மூன்று இலட்சம் ரூபாய்க்கான காசோலையை அவரது பெற்றோரிடம் வழங்கினார்.

திரு. முத்துகிருஷ்ணன் இறப்பு தொடர்பான வழக்கு புதுதில்லி வசந்த விஹார் காவல் நிலையத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது.

மத்திய தரைவழி மற்றும் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் மாண்புமிகு திரு. பொன். ராதாகிருஷ்ணன் அவர்கள், மறைந்த திரு. முத்துகிருஷ்ணனின் உடலுக்கு சேலத்தில் உள்ள அவரது வீட்டிற்கு சென்று மரியாதை செலுத்தினார் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதோடு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வெளி மாநிலத்திற்கு சென்று உயர்கல்வி படிக்கின்ற மாணவர்களுக்கு பாதுகாப்பு வேண்டுமென்று இங்கே கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்கள். அரசு வெளிமாநிலத்தில் உயர்கல்வி படிக்கச் செல்கின்ற மாணவர்களுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாட்டை செய்யும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

◈◈◈

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் சட்டப்பேரவையில்,
திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கொத்தயம்
கிராமத்தில் நல்லதங்காள் ஓடையின் குறுக்கே ஏரி அமைக்கும் பணி
குறித்து ஆற்றிய உரை – 24.03.2017

# ரூ.9.86 கோடி செலவில் திண்டுக்கல் மாவட்டத்தில் நல்லதங்காள் ஓடையின் குறுக்கே ஏரி அமைக்கும் பணியை விரைந்து முடிக்க நடவடிக்கை!



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கொத்தயம் கிராமத்தில் நல்லதங்காள் ஓடையின் குறுக்கே ஏரி அமைக்கும் பணிக்காக ரூ. 6 கோடியே 97 இலட்சம் தமிழ்நாடு அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டம், கொத்தயம் மற்றும் போடுவார்பட்டி கிராமங்களில்

**804** ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் வகையிலும், **576** மெட்ரிக் டன் உணவு உற்பத்தி செய்யும் வகையிலும் உருவாக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு **20** ஏக்கர் புறம்போக்கு நிலத்தைத் தவிர, கொத்தயம் கிராமத்தில் **82.78** ஏக்கர் நிலமும், போடுவார்பட்டி கிராமத்தில் **48.72** ஏக்கர் நிலமும் ஆக மொத்தம் **131.50** ஏக்கர் பட்டா நிலங்கள் கையகப்படுத்தப்பட வேண்டும். இத்திட்டத்திற்கு **30.01.2015** அன்று ரூ. **11** கோடியே **12** இலட்சம் திருத்திய நிருவாக ஒப்புதல் வழங்கி, தமிழ்நாடு அரசால் ஆணையிடப்பட்டது.

தற்போது கொத்தயம் கிராமத்தில் **82.78** ஏக்கர் பட்டா நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. போடுவார்பட்டி கிராமத்தில் நில மதிப்பு நிர்ணயம் செய்தபோது, நில உரிமைதாரர்கள் கூடுதல் இழப்பீடு கேட்ட காரணத்தினால், நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் **30.11.2016** அன்று திருத்திய நில மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டு, **48.72** ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஏரி அமைக்கும் பணி **50** சதவிகிதம் முடிக்கப்பட்டுள்ள நிலையில், நிலம் கையகப்படுத்தும் பணி முழுமையாக நிறைவு பெறாததால், இப்பணிக்கான ஒப்பந்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

இப்பணிக்கு, இதுநாள் வரை நிலம் கையகப்படுத்த ரூ.**5** கோடியே **25** இலட்சமும், பணிகளுக்கு ரூ. **4** கோடியே **61** இலட்சமும் என ஆக மொத்தம் ரூ. **9** கோடியே **86** இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடையும் தருவாயில் இருப்பதால், இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் விரைந்து முடிக்கப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

◈◈◈

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்,
சட்டமன்றத்தில் 24.03.2017 அன்று
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
எழுப்பிய கேள்விக்கு பதிலளித்து ஆற்றிய உரை.

## உச்சநீதிமன்றத்தில்,
## காவேரி மேலாண்மை குறித்து
## நமக்கு சாதகமான தீர்ப்பு கிடைக்கும்!



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முல்லைப் பெரியாறு பிரச்சினையில் இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை இங்கே தெரிவித்தார். மாண்புமிகு அம்மாவிடைய அரசு சட்டப்போராட்டம் நடத்தித் தான் 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தப்பட்டது, அம்மாவினுடைய ஆட்சியில். அதற்குப் பிறகு தொடர்ந்து அம்மா எடுத்த நடவடிக்கையின்படி 142 அடியிலிருந்து 152 அடியாக உயர்த்துவதற்கு அனைத்து நடவடிக்கையும்

அம்மாவினுடைய அரசு எடுத்து வருகிறது. அதற்காக 7.85 கோடி ரூபாய் அணையை பலப்படுத்துவதற்காக, சீரமைப்பதற்காக இன்றைக்கு நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, கேரள அரசு அதற்கு முழு ஒத்துழைப்பு நல்கவில்லை. ஆகவே, அதனால்தான் காலதாமதம் ஏற்பட்டிருக்கேயொழிய, அதற்குண்டான பணிகள் முழுவதும் நடைபெற்று வருகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அதேபோல காவிரி மேலாண்மை வாரியத்தைப் பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். 2007, 2ஆவது மாதமே நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வந்தது. அப்பொழுது மத்தியிலே நீங்கள் ஆட்சியிலே இடம் பெற்றிருந்தீர்கள். அப்பொழுதே இதை நடைமுறைப்படுத்தியிருந்தால் இந்தப் பிரச்சினைக்கு வழிவகுத்திருக்காது. நீங்கள் அரசிதழிலும் வெளியிடவில்லை, அதற்குண்டான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை, இருந்தாலும் அம்மாவினுடைய அரசினால் தொடர்ந்து பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுதப்பட்டு அதை அரசிதழில் வெளியிடவேண்டும் என்று எவ்வளவோ கோரிக்கை வைத்தும் அவர்களும் அதை நடைமுறைப்படுத்தாத காரணத்தினாலே, உச்சநீதிமன்றம் சென்று அதற்குத் தீர்வுகண்டு அரசிதழில் வெளியிடச்செய்த தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள். நமக்குக் கிடைக்க வேண்டிய பங்குநீரை, உரிமையை பெற்றுத் தந்தவர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். அதேபோல, இன்றைக்கு காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்காக உச்சநீதிமன்றத்திலே இப்பொழுது வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, வழக்கு தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே சட்டப்படி நம்முடைய உச்சநீதிமன்றத்திலே நமக்கு சாதகமான தீர்ப்பு கிடைக்கும் என்பதை எதிர்பார்க்கிறோம் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் அப்பொழுது ஆட்சி அதிகாரத்தில் மத்தியில் இருந்தீர்கள். 2007ஆம் ஆண்டே நடுவர்மன்றத் தீர்ப்பு வந்துவிட்டது. விரைவாக அரசிதழில் வெளியிட்டு மேலாண்மை வாரியம் அமைத்திருக்கலாம். 2007லிருந்து 2010 வரை ஆட்சியில் இருந்திருக்கிறீர்கள், மத்தியில், மூன்றாண்டு காலம் இருந்திருக்கிறீர்கள். என்ன செய்திருக்கிறீர்கள் ? அதுதான் என்னுடைய கேள்வி. இன்றைக்கு விவசாயம் பாதிக்கப்பட்டிருப்பதற்கு நீங்கள்தான் காரணம், வேறுயாரும் இல்லை. 2007, இரண்டாவது மாதம் நடுவர் மன்ற இறுதித்தீர்ப்பு வந்தது. அதிலிருந்து நீங்கள் ஆட்சி அதிகாரத்திலே மத்தியில் இருந்தீர்கள். அப்பொழுது அரசிதழில் வெளியிடப்பட்டு, காவிரி மேலாண்மை வாரியம் அமைத்திருந்தால் விவசாயிகள் இந்த நிலைக்கு தள்ளப்பட்டிருக்கமாட்டார்கள்.

◈◈◈

## 2011–2016 வரை விதி 110இன் கீழ் அறிவிக்கப்பட்ட 879 அறிவிப்புகளில் 527 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது!



**மா**ண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே,

விதி 110இன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளுடைய விவரங்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

2011–2012இல் மொத்த அறிவிப்புகள் 51, நிறைவேற்றப்பட்டவை 43, நடைபெற்றுக் கொண்டிருப்பவை 8 பணிகள்.

2012–2013இல் மொத்த அறிவிப்புகள் 87, நிறைவேற்றப்பட்டவை 62, நடைபெற்றுக் கொண்டிருப்பவை 22,

திட்டப்பணிகள் தொடங்க ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பவை 1, அரசாணை வெளியிடப்பட்டு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளவை 2 பணிகள்.

2013–2014இல் மொத்த அறிவிப்புகள் 292, நிறைவேற்றப்பட்டவை 214, நடைபெற்றுக் கொண்டிருப்பவை 75, திட்டப்பணிகள் தொடங்க ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பவை 2, நீதிமன்றத்தில் இருப்பது 1 பணி.

2014–2015இல் மொத்த அறிவிப்புகள் 236, நிறைவேற்றப்பட்டவை 126, நடைபெற்றுக் கொண்டிருப்பவை 105, திட்டப்பணிகள் தொடங்க ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பவை 1, மத்திய அரசுபரிசீலனையில் உள்ளவை 2, நீதிமன்றத்தில் 2 பணிகள்.

அதேபோல, 2015–2016ஆம் ஆண்டு 213 அறிவிப்புகள் வெளியிடப்பட்டது, 82 பணிகள் நிறைவேற்றப்பட்டன, 122 பணிகள் நடைபெற்று வருகின்றன, திட்டப்பணிகள் தொடங்க ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பவை 3, மத்திய அரசு பரிசீலனையில் உள்ளவை 4, அரசாணை வெளியிடப்பட்டு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது 2 பணிகள்.

ஆக, 2011–2012 முதல் 2015–2016 வரை 879 அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, 527 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன, 332 பணிகள் நடைபெற்று வருகின்றன, 7 பணிகள் திட்டப்பணி தொடக்க ஆயத்த நிலையில் இருக்கின்றன, மத்திய அரசு பரிசீலனையில் உள்ளவை 6, அரசாணை வெளியிடப்பட்டு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது 7 பணிகள் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, **2016–2017**இல் விதி **110**இன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் **175,** நிறைவேற்றப்பட்டவை **10,** நடைபெற்று வருபவை **133,** திட்டப்பணிகள் தொடங்க ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பவை **7,** மத்திய அரசு பரிசீலனையில் உள்ளவை **2** என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

◈◈◈

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**திரு.எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
31.03.2017 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், ஊனமாஞ்சேரியில்
அமைந்துள்ள தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் நடைபெற்ற
பயிற்சி உதவி ஆய்வாளர்களின் பயிற்சி நிறைவு
அணிவகுப்பு விழாவில் ஆற்றிய உரை.

# தமிழ்நாடு காவல்துறையின் திறனை மேலும் உயர்த்த நீங்கள் அனைவரும் பாடுபடவேண்டும்!




**மா**ண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா என்னும் தெய்வத்தை வணங்கி,

இந்த இனிய விழாவிற்கு வருகைப் புரிந்துள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

தலைமைச் செயலாளர் அவர்களே!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

வரவேற்புரை ஆற்றிய தமிழ்நாடு அரசு உள்துறை

முதன்மைச் செயலர் அவர்களே!

காவல்துறை தலைமை இயக்குநர் அவர்களே !

நன்றியுரை ஆற்ற உள்ள காவல் துறை இயக்குநர்– பயிற்சி அவர்களே!

தமிழ்நாடு அரசு உயர் அதிகாரிகளே!

காவல்துறை அதிகாரிகளே!

இன்று பயிற்சியினை நிறைவு செய்யும் காவல் உதவி ஆய்வாளர்களே!

இந்த நிகழ்ச்சியில் பங்குபெற்றுள்ள பெரியோர்களே, தாய்மார்களே!

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

உங்கள் அத்தனை பேருக்கும் எனது பணிவான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

"முயற்சி தன் மெய்வருத்த கூலி தரும்"

என்பது திருவள்ளுவர் வாக்கு.

"பயிற்சி தன் மெய்வருத்த கூலி தரும்"

என்பது காவல்துறைக்கே உரித்தான வாக்கு.

உடல்வருத்தி பயிற்சி மேற்கொள்பவர்களுக்கு நிச்சயமாக பலன் கிட்டும் என்பது தான் இதற்கான பொருள். முயற்சியும் பயிற்சியும் தான் ஒரு சாதாரண மனிதனை சாதனை மனிதனாக மாற்றும் என்பார்கள். நீங்கள் சாதனையாளர்களாக மாறுவதற்கான தொடக்கம் தான் இந்த ஓர் ஆண்டுகால பயிற்சி.

உங்கள் அனைவரது சிந்தனையும் செயல்பாடும் ஒருங்கிணைந்து ஒரே நோக்கத்திற்காக இருக்க வேண்டும் என்பதற்காக தான் இந்த பயிற்சியும் இந்த அணிவகுப்பும். இந்த பயிற்சியின் ஒரே நோக்கம், நமது தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கை

சிறப்பாக நிலைநிறுத்துவதாக இருக்க வேண்டும். ஓர் ஆண்டு கால காவல் பயிற்சியை நிறைவு செய்திருக்கின்ற உங்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

இந்த மிகச் சிறந்த அணிவகுப்பானது, உங்களது திறமை, மேன்மையான நோக்கம், உடல் மற்றும் மனத்திடம், ஆகியவற்றை வெளிப்படுத்தும் வண்ணம் விளங்குகிறது. பேரறிஞர் அண்ணா கூறிய கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை உங்கள் பணிகாலங்களில் கடைப்பிடிப்பதுடன், இன்றைய தினம் நீங்கள் எடுத்துள்ள உறுதிமொழியையும் கடைபிடித்து, உலகளவில் தலைசிறந்து விளங்கும் தமிழ்நாடு காவல் துறையின் திறனை மேலும் உயர்த்த நீங்கள் அனைவரும் பாடுபட வேண்டும்.

உலகத் தரம் வாய்ந்த, இந்த தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் 1,027 தாலுக்கா உதவி ஆய்வாளர்கள் மற்றும் 1 ஆயுதப்படை உதவி ஆய்வாளர் என ஒரே நேரத்தில் 1,028 உதவி ஆய்வாளர்கள், தங்களது ஒரு வருட பயிற்சியினை கடந்த 26.02.2016 அன்று துவங்கி நிறைவு செய்திருப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மூன்றாம் பாலினத்தவர்களின் மேல் மாண்புமிகு அம்மா அவர்கள் மிகுந்த பாசமும் அக்கறையும் கொண்டவர் என நீங்கள் அனைவரும் அறிவீர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் செயல்படும் இந்த ஆட்சியில் இந்தியாவிலேயே முதன்முறையாக திருநங்கை ஒருவர் இன்று உதவி ஆய்வாளர் பயிற்சியை வெற்றிகரமாக முடித்துள்ளார் என்பது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

இந்தப் பயிற்சியில், 254 பெண் உதவி ஆய்வாளர்களும் தங்களது பயிற்சியினை நிறைவு செய்திருக்கிறார்கள். “ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை காண்” என்ற பாரதியாரின் வாக்கின்படி பெண்களும் இந்த கடினமான பயிற்சியை மேற்கொண்டு காவல் பணிக்கு தங்களை தகுதியாக்கி கொண்டிருப்பது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை தருகிறது.

**1650**–களில் தமிழ்நாடு தலைமைச் செயலகம் இருக்கும் புனித ஜார்ஜ் கோட்டை முள்வேலிகளால் சூழப்பட்டிருந்தது. யாரும் அத்துமீறி உள்ளே நுழைந்துவிடக் கூடாது என்பதற்காக சுற்றிலும் காவலர்களை நிறுத்தி வைத்தார்கள். அந்தக் காவலர்கள்தான் இந்தியாவின் முதல் ஆயுதப்படையாக கருதப்பட்டார்கள்.

இந்தியாவின் முதல் ஆயுதப்படை நமது புனித ஜார்ஜ் கோட்டையில் தான் ஆரம்பித்தது. அந்த முதல் ஆயுதப்படை தான் காவல் துறையாகவும் மலர்ந்தது. இது ஒவ்வொரு தமிழனும் பெருமைப்படக் கூடிய வரலாறு ஆகும்.

தமிழ்நாடு காவல்துறை பல்வேறு ஆட்சிக் காலங்களை கடந்து படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ளது. அந்த வளர்ச்சிக்கெல்லாம் முத்தாய்ப்பாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, தமிழ்நாடு காவல்துறை புதிய எழுச்சியையும், மலர்ச்சியையும் பெற்றது.

**1991**ஆம் ஆண்டு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதல் முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற போது, இந்தியாவிலேயே காவல் துறையை நவீனமயமாக்கும் முன்னோடி திட்டத்தினை செயல்படுத்தினார்கள்.

தமிழ்நாட்டிலுள்ள பெண்கள் பொதுவாக காவல் நிலையத்திற்கு செல்லவே அச்சப்படுவார்கள். தமிழகத்தில் பெண்கள் எந்தவிதமான அச்சமோ, தயக்கமோ இன்றி காவல் நிலையங்களுக்கு சென்று தங்களுக்கு உள்ள குறைகளை எடுத்துக் கூறி, அவற்றிற்கு நிவாரணம் தேட வேண்டும் என்பதற்காகவே, **1992**இல் சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில், முதல் அனைத்து மகளிர் காவல்நிலையத்தை திறந்து வைத்து பெண்களுக்கு பெருமைச் சேர்த்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். நாட்டிலேயே முதல் பெண்



கமாண்டோ படையினை 21 பெண் காவலர்களை கொண்டு 2002ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். வீட்டைக் காப்பது போல இந்த நாட்டையும் மகளிர் காத்து வருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்கு பார்வை தான் காரணம். எனவேதான், மாண்புமிகு அம்மா அவர்களை பெண்கள் தங்கள் வீட்டு குலதெய்வமாக போற்றி வருகிறார்கள்.

அமைதி, வளம், வளர்ச்சி என்பது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தாரகமந்திரம். ஒரு நாட்டில் அமைதி நிலவினால் தான் வளமும் வளர்ச்சியும் இருக்கும். நாட்டில் அந்த அமைதியை ஏற்படுத்தக் கூடியவர்கள் காவல்துறையினர் தான். உங்கள் பணியை முதலில் வைத்து மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த தாரக மந்திரத்தை குறிப்பிட்டார்கள்.

அமைதி ஒன்று தான், ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், தனி மனித மேம்பாட்டிற்கும் காரணமாக விளங்குகிறது. அத்தகைய அமைதி சூழலை ஏற்படுத்துவதில்

காவல் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே தான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தன்னுடைய ஆட்சி காலங்களில் காவல்துறைக்கு மிக முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினார்கள்.

❖ இரவு பகல் பாராமல், இலட்சியத்துடன் ஓய்வில்லாமல், பணியாற்றும் காவல் துறையினர், ஓய்வு பெற்ற பிறகு அமைதியான சூழலில் மன நிம்மதியுடன் வாழ வேண்டும் என்பதன் அடிப்படையில் “உங்கள் சொந்த இல்லம்” திட்டத்தின் கீழ் இதுவரை **4,644** வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளது.

❖ இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டிலுள்ள காவலர்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை பணியாளர்களுக்கு குறைந்த விலையில் அனைத்து பொருட்களும் கிடைக்கக்கூடிய வகையில் **47** காவலர் பல்பொருள் சிறப்பு அங்காடிகள் இயங்கி வருகின்றன.

❖ **26** ஆயுதப்படை தலைமையிடங்களிலும், **10** தமிழ்நாடு சிறப்பு காவல் பட்டாலியன் தலைமையிடங்களிலும் காவல்துறையினருக்கான மருத்துவ சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

❖ **40** வயதைக் கடந்த அனைத்து காவல் துறையினரும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினரும், வருடம் ஒரு முறை கட்டணம் எதுவுமில்லாமல் ஒட்டு மொத்த உடல் பரிசோதனை செய்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. **2016–2017** ஆம் ஆண்டு **81** சதவீதத்தினர் உடல் பரிசோதனை மேற்கொண்டு பயன்பெற்றுள்ளனர்.

❖ காவலர் மற்றும் அவர்தம் குடும்பங்கள் மருத்துவ சிகிச்சை பெற ஏதுவாக தமிழகத்தில் **13** காவலர் மருத்துவமனைகள் திறம்பட செயல்பட்டு வருகின்றன.

- ❖ பல்வேறு போட்டிகளில் பங்கேற்று பதக்கம் பெறும் காவலர்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசுத் தொகைகள் பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளன.

இப்படி மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் வழங்கப்பட்ட ஏராளமான திட்டங்களால் காவல்துறையினர் மகிழ்ச்சியும் மனநிறைவும் பெற்று சட்டம் ஒழுங்கை செம்மையாக காத்து வருகிறார்கள்.

அத்துடன், தமிழக காவல்துறையினரின் பணியினை மேம்படுத்திடவும், காவல் துறையை நவீனப்படுத்தும் நோக்கிலும்,

- ❖ சென்னை மாநகரத்தின் அனைத்துப் பகுதிகளிலும் காவலர்களின் கண்காணிப்பு பணி இடைவிடாது இருக்க, அதிக அளவு ரோந்து வாகனங்களை வழங்கியது;
- ❖ குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் முறை நடைமுறைப்படுத்தியது;
- ❖ தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்திற்கு நுண்ணலை இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது;
- ❖ அதிக மக்கள் கூடும் திருவிழாக்கள், முக்கியத் தலைவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் போது தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்; முக்கிய குற்றங்களில் தடயங்கள் குறித்து அறியவும் மற்றும் இயற்கை பேரிடர்களின் போது சேதங்கள் குறித்து அறிந்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து விரைவு படுத்தவும் ஆளில்லா வானவூர்திகள் வாங்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன;
- ❖ குற்றங்களைத் தடுக்கும் விதமாகவும், குற்றங்கள் நிகழ்ந்த இடத்தில் தடயங்களை சேகரிக்க உதவிடும் வகையிலும் பொது இடங்களில் **1,42,229–**க்கும் அதிகமான கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன;




❖ மே 2011 முதல் இதுநாள் வரை 1219 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 14,227 காவல்துறை குடியிருப்புகளும், 197 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 416 காவல் நிலையங்களும், 304 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 229 காவல்துறைக்கான இதர கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன.

இப்படி எண்ணற்ற திட்டங்களை காவல்துறை மேம்பாட்டிற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்தினார்கள்.

சட்டம் – ஒழுங்கை காப்பதற்கும், காவலர்கள் எவ்வித அச்ச உணர்வோ இடையூறோ இல்லாமல் தங்கள் பணிகளை நேர்மையாகவும், திறமையாகவும், செம்மையாகவும், உண்மையாகவும், சட்டப்படியும் ஆற்றிடவும் உகந்த சூழ்நிலையை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காவல்துறைக்கு ஏற்படுத்தி தந்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் அம்மா அரசு காவல்துறை நலனில் தனி அக்கறை

செலுத்துவதோடு, குற்றவாளிகள் மீது காவல்துறையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் தலையிடாமல், காவல்துறையினருக்கு முழு சுதந்திரம் அளித்து, சட்டம் ஒழுங்கை காப்பதையே குறிக்கோளாக கொண்டுள்ளது. அதனால் தான், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலும், அம்மா வழியில் செயல்படும் இந்த ஆட்சியிலும் தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக, மக்கள் மகிழ்ச்சியோடு வாழத்தகுந்த நாடாக விளங்கி வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

காவலர்கள் பணியாற்றுவதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், அவர்கள் தங்கள் பணியினை திறம்பட ஆற்றிட பயிற்சி மிகவும் அவசியம் ஆகும்.

பயிற்சி தான் மனிதனை பக்குவப்படுத்தும். எந்தத் துறையாக இருந்தாலும், அதில் பயிற்சி பெற்றால் தான் ஒருவர் தன்னுடையப் பணியை திறமையாகவும், செம்மையாகவும் ஆற்ற இயலும்.

இதனை கருத்தில் கொண்டு, உலகத் தரம் வாய்ந்த காவல் உயர் பயிற்சியகம் தமிழ்நாட்டில் நிறுவப்பட வேண்டும் என்பது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கனவாக இருந்தது. அந்தக் கனவை நனவாக்கும் விதமாக, தொட்டதை துலங்க வைக்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் 2004ஆம் ஆண்டு இந்த ஊனமாஞ்சேரியில் தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்தப் பயிற்சியகம், இயற்கை சூழலுடன், சிறந்த கட்டமைப்பு வசதிகளுடன், திறமையான பயிற்சியாளர்களையும் கொண்டிருக்கிறது. பல்வேறு புது உத்திகளுடன் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் முதல் கணினி தொடர்பான குற்றங்கள் வரை பல்வேறு குற்ற நிகழ்வுகளை கையாளுவதற்கான பயிற்சிகளும் இங்கு அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியின் மூலம், களப்பணி,

தலைமைப் பண்பு, ஆய்வுத் திறன், மென் கணினித் திறன் ஆகியவற்றை நீங்கள் நன்கு பெற்று இருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

ஆயுதங்களை கையாளுதல்; குறி பார்த்து சுடுதல்; நுண்ணறிவுத் தகவல்களை சேகரித்தல்; பொதுமக்களின் உணர்வுகளை ஆய்ந்தறிதல்; பண்புடன் நடந்து கொள்ளும் திறன் என மாறுபட்ட கோணங்களில் நீங்கள் பயிற்சி பெற்று இருப்பீர்கள். இந்த பயிற்சியின் மூலம், சட்டம் ஒழுங்கை எப்படி பராமரிக்க வேண்டும்; பொதுமக்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் நீங்கள் முழுமையாக கற்றிருப்பீர்கள்.

"ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பது வள்ளுவர் வாக்கு. காவல் துறையினருக்கு ஒழுக்கம் மிகவும் அவசியம். ஒழுக்கம் இருந்தால் தான், விருப்பு வெறுப்பு இன்றி; வேண்டியவர் வேண்டாதவர் என்ற வேறுபாடு இல்லாமல்; காவல் துறையினர் தங்கள் கடமையை ஆற்ற முடியும். அவ்வாறு கடமையாற்றினால் தான், காவலர்களை மக்கள் மனதார பாராட்டுவார்கள்.

காவல்துறைக்கு சட்டம் என்பது ஆயுதமாக கருதப்படுகிறது. சட்டம் மனித சேவைக்காக உருவாக்கப்பட்டது தான் என்பதை முதலில் நீங்கள் உணர வேண்டும். இந்தப் பயிற்சியின் மூலம், மனித நேயத்துடன் கூடிய அணுகுமுறையை நீங்கள் நிச்சயம் பெற்று இருப்பீர்கள். நீங்கள் அனைவரும் சட்டத்தை கடைப்பிடித்து கடமை உணர்ச்சியுடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் பணியாற்ற வேண்டும்.

மக்கள் இரவில் நிம்மதியாக தூங்கி எழ, தூங்காமல் விழித்திருந்து பாதுகாக்கும் தியாக உணர்வுமிக்க தாயைப்போல, மக்கள் மீது அன்பும், அக்கறையும் கொண்டு உள்ளத்தைக் கவரும் நண்பனைப் போல, மக்களுக்காக அல்லும் பகலும் உழைக்கும் காவல் துறையினரான நீங்கள் தான் இந்த நாட்டின் அரிய சொத்துகளாக மதிக்கப்படுகிறீர்கள்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ‘‘சட்ட திட்டத்தை மதிப்பவர்களுக்கு உற்ற நண்பனாகவும்; சட்டத்தையும், மற்றவர்களின் உரிமைகளையும் மீறுபவர்களுக்கு அச்சத்தைக் கொடுக்கக் கூடிய எதிரியாகவும் காவலர் விளங்க வேண்டும். அதாவது, காவலர் என்பவர் நாணயத்தின் இரு பக்கம் போன்றவர். சட்டப்படி நடப்பவருக்கு நண்பர் எனும் பக்கம் தெரிய வேண்டும். சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிரி என்ற பக்கம் தான் தெரிய வேண்டும்’’ என்று காவல்துறை எவ்வாறு செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்கள்.

ஒரு பிரச்சினைக்கு உடல் வலிமையை கொண்டு தீர்வு காண்பதைவிட, அறிவுக்கூர்மையைக் கொண்டு தீர்வு காண்பதே சிறந்தது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். எனவே, காவல்துறையினர் காலத்திற்கு ஏற்றார்போல் உடல் வலிமையோடு அறிவுக்கூர்மை மிக்கவர்களாக தங்களை தகுதிப்படுத்தி கொள்ள வேண்டும். இக்காலத்தில் படித்தவர்கள் கூட தங்களுடைய கல்வி அறிவை தவறான வழியில் பயன்படுத்தி நுட்பமான முறையில் குற்றங்களில் ஈடுபடுகிறார்கள். அதை தான் White Collar Crime என்கிறோம். அப்படிப்பட்ட குற்றங்களை தடுத்து நிறுத்தி குற்றவாளிகளை கண்டறிவதற்கு காவல்துறையினருக்கு தற்கால தொழில்நுட்ப அறிவு மிகவும் தேவையாக இருக்கிறது. எனவே நீங்கள் கணினி மற்றும் இணைய தொழில்நுட்ப அறிவை ஒவ்வொரு நாளும் புதுப்பித்து கொள்ள வேண்டும் என்பதை இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறேன்.

‘‘மண்ணுக்கு மரம் காவல்’’, ‘‘மரத்துக்கு இலை காவல்’’, ‘‘பயிருக்கு வேலி காவல்’’, ‘‘கண்ணுக்கு இமை காவல்’’, ‘‘கடலுக்கு கரை காவல்’’ என்பதைப் போல் மக்களுக்கு காவலாக விளங்குவது காவல் துறை என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காவல்துறையின் சிறப்பை எடுத்துரைத்தார்கள்.

காவல்துறையினர் பணியின் போது இறந்தாலும், உடல்நலக்குறைவால் இறந்தாலும், அரசு தரும் குடும்ப நல நிதியைத் தவிர, அவர்களது குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்தும் 3 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்க மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, அதனை தொடர்ந்து செயல்படுத்தி வந்தார்கள் என்பதலிருந்தே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காவல்துறையை தன் கண் போல பாவித்தார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம். இதனை மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் அம்மா அரசும் நடைமுறைப்படுத்தி வருகிறது.

காவல்துறை மேம்பாட்டிற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பலப்பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ஸ்காட்லாண்ட் யார்டு காவல் துறைக்கு இணையாக புகழப்படும் தமிழ்நாடு காவல்துறை பணிகளை துவக்கி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

31.03.2017 அன்று காணொலி காட்சி வசதி திட்டம் 6 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம், அனைத்து காவல் ஆணையாளர்கள், மண்டல காவல்துறை தலைவர்கள், சரக காவல்துறை துணைத்தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள், தனிப்பட்ட முறையிலோ அல்லது அனைவரும் ஒன்று சேர்ந்தோ தொடர்பு கொண்டு கலந்துரையாடல் செய்து தகவல்களை பரிமாறிக் கொள்ள முடியும். இது தவிர பவர் பாயின்ட் விளக்கக்காட்சி மூலமாகவும் தகவல்களை பரிமாறிக் கொள்ள முடியும்.

சேலம் மாநகரம் முழுவதும், இராமேஸ்வரம் கோவில், ஏர்வாடி தர்கா மற்றும் காரைக்குடி நகரம் ஆகிய இடங்களில் உட்சுற்று கண்காணிப்பு கேமராக்கள் (சிசிடிவி) பொருத்தும் திட்டம் 31.03.2017 அன்று தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம், சேலம் மாநகரத்தில் 3 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவிலும், இராமேஸ்வரம் கோவில், ஏர்வாடி தர்கா

மற்றும் காரைக்குடி நகரம் ஆகிய இடங்களில் 3 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவிலும் தொடங்கப்பட்டுள்ளது. இந்த இடங்களில் நடக்கும் நிகழ்வுகளை காவல்துறை அதிகாரிகள் கண்காணித்து, சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளை தீர்க்கவும், பெண்கள், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற நிகழ்வுகள் நடைபெறாமல் தடுக்கவும், போக்குவரத்து நெரிசல்களை சரிசெய்யவும், போக்குவரத்து விதிமீறல்களை கண்காணித்து தக்க நடவடிக்கை எடுக்கவும் பயன்படுத்த முடியும்.

இந்தத் திட்டத்தின் கீழ் சேலம் மாநகரத்தில் அமைந்துள்ள 56 சந்திப்புகளில், 192 வலைதள வசதியுள்ள கேமராக்கள், 8 சுழலும் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது. ஏர்வாடி தர்காவில் வலைதள வசதியுள்ள 15 கேமராக்கள், காரைக்குடி நகரில் 29 கேமராக்கள் மற்றும் இராமேஸ்வரம் கோவிலில் 70 கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் 30 நாட்கள் ஒளிப்பதிவை சேமித்து வைக்கும் வசதி கொண்ட கருவிகள் பொருத்தப்பட்டுள்ளதால், எதிர்கால புலன் விசாரணைகளுக்கு இத்திட்டம் உதவிகரமாக இருக்கும்.

248 காவல் நிலையங்களுக்கு உட்சுற்று கண்காணிப்பு கேமிராக்கள் (சிசிடிவி) பொருத்தும் திட்டம் 5 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்பட்டுள்ளது. மக்களுக்கு காவல் துறையின் மேல் நன்மதிப்பை ஏற்படுத்தும் பொருட்டும் மற்றும் வெளிப்படையான தன்மையை எடுத்துக்காட்டும் பொருட்டும், காவல் நிலையங்களில் 6 வலைதள வசதியுள்ள கேமராக்கள், 1 ஒளிப்பதிவு கருவி, 30 நாட்கள் ஒளிப்பதிவை சேமித்து வைக்கும் வசதி கொண்ட கருவிகள், மானிட்டர் மற்றும் தடையில்லா மின்சாரம் வழங்கும் உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் காவல் நிலையங்களில் நடைபெறும் சம்பவங்களை பதிவு செய்து தேவைப்படும் நேரத்தில் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

ஆக மொத்தம் 18 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்கள் இங்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டைப் பாதுகாப்பதில் ராணுவத்தினருக்கு எத்தனை பங்கு இருக்கிறதோ, அதே அளவு பங்கு காவல் துறையினருக்கும் இருக்கிறது. நாட்டுக்குள்ளே மக்களோடு மக்களாக நல்லவர்களைப் போல வாழ்ந்து கொண்டிருக்கின்ற தேச விரோதிகளையும், குற்றவாளிகளையும் கண்டறிவது என்பது காவல் துறையினருக்கு பெரும் சவாலாகும். அவர்களை இனம் கண்டறிய வேண்டுமென்றால், காவல் துறையினருக்கு நுண்ணறிவு தேவை. அத்தகைய நுண்ணறிவும் பகுத்தறிவும் மிக்கது தமிழ்நாடு காவல்துறை என்பது பலமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது. அதே வழியில், தமிழ்நாடு காவல்துறையின் மாண்பையும் சாதனையையும் நீங்கள் மேலும் சிறப்படைய செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

இலக்குகள் நமது வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோளைத் தருகின்றன. வெற்றி பெறுவதற்கான துவங்குமிடம் இதுவேயாகும். நீங்கள் அடைய வேண்டிய இலக்கினை நீங்கள் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். ஆதலால், குறிக்கோளுடன் வாழுங்கள். சிறந்த காவல் அதிகாரிகள் என்ற நற்பெயரை பெறுவதையே இலட்சியமாக கொள்ளுங்கள்.

நீங்கள் இத்தனை சிறப்போடு இந்த பயிற்சியை நிறைவு செய்திருக்கிறீர்கள் என்றால் அதற்கு காரணமாக திகழும் இந்த பயிற்சியகத்தை சேர்ந்த அனைத்து அதிகாரிகளையும், அலுவலர்களையும் மனதார பாராட்டி, உங்கள் எதிர்காலம் சிறந்து விளங்க எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

◈◈◈

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 01.04.2017 அன்று
திருவள்ளூர் மாவட்டம், கொரட்டூரில் நடைபெற்ற
அரசு விழாவில் பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப
அட்டைதாரர்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகளை
பயனாளிகளுக்கு வழங்கி ஆற்றிய உரை.

# ரூ.330 கோடி செலவில், 1.89 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கும் திட்டம் துவக்கம்!






**மா**ண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா என்னும் தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த இனிய விழாவிற்கு வருகை புரிந்துள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

தலைமைச் செயலாளர் அவர்களே!

வரவேற்புரை நிகழ்த்திய கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மை செயலாளர் அவர்களே!

நன்றியுரை ஆற்ற உள்ள உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் அவர்களே!

தமிழ்நாடு அரசு உயர் அலுவலர்களே!

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே!

உங்கள் அத்தனை பேருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் நடைமுறையில் இல்லாத விலையில்லா அரிசி வழங்கும் உன்னத திட்டத்தை குடும்ப அட்டைதாரர்களுக்கு நடைமுறைப்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். வறுமை கோட்டிற்கு மேல் உள்ளோர், வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளோர் என்ற பாகுபாடு எதுவுமில்லாமல் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை அறிவித்து, தமிழக மக்களின் பசிப்பிணியைப் போக்கியதுடன், அவர்களது உணவு பாதுகாப்பையும் உறுதி செய்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அதனால் தான், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, அனைவருக்குமான பொதுவிநியோகத் திட்டத்தை தமிழ்நாட்டில் தொடர்ந்து செயல்படுத்தும்.

பொது விநியோகத் திட்டத்தை மேலும் செம்மைப்படுத்தும் நோக்கில் **330** கோடி ரூபாய் செலவில் **1** கோடியே **89** இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து, காணொலி மூலம் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கும் பணியையும் தொடங்கி வைத்ததில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

“தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில்
ஜகத்தினை அழித்திடுவோம்”

என்று பாரதியார் தனிமனித உணவு உரிமைக்காக குரல் கொடுத்தார்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், புரட்சித்தலைவி அம்மா அவர்களும் ஏழைகள் மகிழ வேண்டுமென்றால், ஏழைகளின் வயிறு நிறைய வேண்டும், அதற்கான திட்டங்கள் தான் மற்ற எல்லா திட்டங்களை விட நாட்டுக்கு மிக மிக அவசியமான திட்டம் என்றார்கள். தங்கள் ஆட்சி காலங்களில் பாமர அடித்தட்டு மக்கள், அன்றாட கூலி தொழிலாளர்கள், விவசாய பெருங்குடி மக்களை, மகிழ்விக்கும் திட்டங்களையே தொடர்ந்து செயல்படுத்தினார்கள்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஏழை குழந்தைகள் பசியாற சத்துணவு திட்டத்தையும், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை மக்கள் பசியாற அம்மா உணவகத்தையும் தமிழ்நாட்டில் தொடங்கி வைத்து பிற மாநிலத்தை சேர்ந்தவர்களையும், வெளிநாட்டினரையும் வியக்க வைத்தார்கள்.

தானத்தில் சிறந்தது அன்னதானம் என்பார்கள். அன்னதானத்தின் சிறப்பினை விளக்கும் மகாபாரதக் கதை என் நினைவிற்கு வருகிறது.

கொடை என்றால் நம் நினைவிற்கு முதலில் வருபவர் கர்ணன் தான். கர்ணன் இறந்து சொர்க்கத்தில் இருந்த போது, அவருக்கு கடும் பசி ஏற்பட்டது. சொர்க்கத்தில் பசி என்பது யாருக்குமே இருக்காது. ஆனால், தனக்கு மட்டும் பசி ஏற்பட காரணம் என்ன என்று நாரதரிடம் கேட்டார்.

அதற்கு நாரதர், “பூலோகத்தில் நீ எல்லாவிதமான தான தர்மங்களையும் செய்தாய். ஆனால் அன்னதானம் மட்டும் செய்யவில்லை. ஒருநாள் ஒரு வழிப்போக்கன் அன்னதான சத்திரம் எங்கே இருக்கிறது என்று கேட்டான். அதற்கு நீ உன்

ஆள்காட்டி விரலால் அன்னதான சத்திரத்தை சுட்டிக்காட்டினாய். நீ நேரடியாக அன்னதானம் செய்யாவிட்டாலும், அன்னதானம் நடந்த இடத்தை காட்டியமையால் உன் ஆள்காட்டி விரல் அன்னதானம் செய்த பலனைப் பெற்றது. எனவே, இப்போது நீ உன் ஆள்காட்டி விரலை உனது வாயில் வைத்தால் பசி நீங்கிவிடும்'', என்று நாரதர் கூறினார்.

அன்னதானம் செய்யாமலேயே, அன்னதானம் நடைபெறும் இடத்தை சுட்டிக்காட்டிய ஆள்காட்டி விரலுக்கு இந்த புண்ணியம் கிட்டியது என்றால், அன்னதானம் செய்தால் கிடைத்திடும் பலனை அளவிட முடியாது என்பதை நாம் இதில் இருந்து புரிந்து கொள்ளலாம்.

நமது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வீடுதோறும் விலையில்லா அரிசி, ரம்ஜானுக்கு நோன்புக்கஞ்சி அரிசி, கோயில் தோறும் அன்னதான திட்டத்திற்கு அரிசி வழங்கி ஏழை மக்களின் பசியினை போக்கி புண்ணியம் பெற்று வந்தார்கள். அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு அம்மா அவர்கள் கொண்டு வந்த அன்னதான திட்டங்களை மேலும் செம்மைப்படுத்தும் என்பதை உறுதி கூறுகிறேன்.

உணவு உற்பத்தியில் மிகை மாநிலங்களான ஆந்திரா, சத்தீஷ்கர், பஞ்சாப், மேற்குவங்காளம் போன்ற மாநிலங்களில் கூட குடும்ப அட்டைதாரர்களுக்கு விலைக்குதான் அரிசி வழங்கப்படுகிறது. அதே சமயம் நமது தமிழ்நாட்டில் மட்டும் தான் குடும்ப அட்டைதாரர்களுக்கு 01.06.2011 முதல் விலையில்லா அரிசி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உணவுத்துறைக்கு ஆண்டு ஒன்றுக்கு 5,500 கோடி ரூபாயை மானியமாக ஒதுக்கி எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றி வரும் ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டும்தான் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

தானிய சேமிப்பு கட்டமைப்புகளை உருவாக்குவதில் படைக்கப்பட்ட சாதனைகளுக்காக 2013 மற்றும் 2014ஆம்

வருடங்களில் மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட அனைத்து பரிசுகளும் தமிழ்நாட்டிற்கே வழங்கப்பட்டன. உணவு உற்பத்தியில் சாதனை, விவசாயிகளுக்கு நெல்லுக்கு ஊக்கத்தொகை வழங்குவதில் சாதனை, நுகர்வோர் குறைதீர் முகாம்கள் நடத்தி அன்றைய தினமே குறைகளை நிவர்த்தி செய்து சாதனை என சாதனை தலைவியாக விளங்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் திட்டங்களை தீட்டி செயல்படுத்துவதில் மட்டும் சாதனையாளராக விளங்கவில்லை, அந்த திட்டங்கள், கடைகோடி பாமர மக்களுக்கும் தடையில்லாமல் பலனளிக்கிறதா என்று கண்காணிக்கும் வல்லமை கொண்டவராக இருந்தார்கள். அதனால் தான் மக்களுக்கு பயனளிக்கும் பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாடுகள் அனைத்தையும் முழுமையாக கணினிமயமாக்கி, ஆதார் எண் விவரங்களுடன் அவர்களுக்கு தடையின்றி, தட்டுபாடின்றி உணவுப் பொருட்களை வழங்கிட ஆவன செய்தார்கள்.

தற்போது தமிழ்நாட்டில் சுமார் 1 கோடியே 89 இலட்சம் குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளன. கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகவும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகவும் செயல்பட்டு வரும் 34 ஆயிரத்து 840 நியாயவிலைக் கடைகள் வாயிலாக, அத்தியாவசியப் பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் மற்றும் சிறப்பு பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ், பருப்பு மற்றும் பாமாயில் எண்ணெய் ஆகியவை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்குவதற்கு தற்போது தாளில் அச்சிடப்பட்ட குடும்ப அட்டைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 2005ஆம் ஆண்டு வழங்கப்பட்டு ஆண்டுதோறும் நீட்டிக்கப்பட்டு வந்தது.



மேலும், நியாயவிலைக் கடைகளில் தேவையான அளவு அத்தியாவசியப் பொருட்கள் இருப்பு வைப்பதை உறுதிப்படுத்தவும், போலிக் குடும்ப அட்டைகள் மற்றும் போலிப் பட்டியலிடுதல் ஆகியவற்றை தவிர்க்கவும், ஒரு முழுமையான கண்காணிப்பு அவசியம் எனக் கருதப்பட்டது. பொது விநியோகத் திட்டத்தினை முழுமையாக கணினிமயமாக்கி, அனைத்து அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களை கணினி மூலம் ஒருங்கிணைத்து, அனைத்து நடவடிக்கைகளையும் முழுமையாக கண்காணித்து, இணையதளம், மின்னஞ்சல், குறுந்தகவல், தொலைபேசி வாயிலாக நுகர்வோரின் குறைகளை பெற்று அவற்றை தீர்க்கும் வகையில் இணையவழி சேவைகள் ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டது.

இதனை கருத்தில் கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2013ஆம் ஆண்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி எண் 110இன் கீழ் இந்திய உணவுக் கழகம் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான கிடங்குகளில் இருந்து நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் எடுத்துச் செல்லப்படுவதை கண்காணிக்கும் பொருட்டு பொதுவிநியோகத் திட்டம் கணினிமயமாக்கப்படும் என அறிவித்திருந்தார்கள்.

மேலும் **2012–2013** மற்றும் **2013–2014** ஆகிய ஆண்டுகளில் உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை மானியக் கோரிக்கையின் போது, தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு பதிவேடு விவரங்களின் அடிப்படையில் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து **2015**ஆம் ஆண்டு **330** கோடி ரூபாய் செலவில் பொதுவிநியோகத் திட்டத்தினை முழுமையாக கணினிமயமாக்கவும், அதனை ஐந்தாண்டு காலம் பராமரிக்கவும், ஒரு திட்ட ஒருங்கிணைப்பாளர் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு, கணினிமயமாக்கும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், **2015**ஆம் ஆண்டு பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் உள்ள நியாயவிலைக் கடைகளில் விற்பனை முனைய இயந்திரங்கள் நிறுவப்பட்டு பொதுவிநியோகத் திட்ட செயல்பாடுகள் அனைத்தும் இணையவழியே கண்காணிக்கப்பட்டன. அதனை தொடர்ந்து, **2016**ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இத்திட்டம் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

தற்போது நடைமுறையில் உள்ள குடும்ப அட்டைகளுக்கு மாற்றாக மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கும் பொருட்டு, விற்பனை முனைய இயந்திரங்கள் வாயிலாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களின் ஆதார் எண் விவரங்கள் சேகரிக்கப்பட்டு, புதிய தரவு தொகுப்பு (New Data Base) உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பதிவு செய்யப்பட்ட குடும்ப அட்டைகளில் உள்ள சுமார் **6** கோடியே **90** இலட்சம் உறுப்பினர்களில், சுமார் **5** கோடியே **85** இலட்சம் உறுப்பினர்களின் ஆதார் எண் விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதன்படி, **1** கோடியே **89** இலட்சம் குடும்ப அட்டைகளில் **1** கோடியே **17** இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு முழுமையான ஆதார் விவரங்களும், **70** இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு குறைந்தபட்சம் ஒரு

ஆதார் எண் விவரங்களும் பெறப்பட்டுள்ளன. மொத்த குடும்ப அட்டைகளில், 99 சதவிகித குடும்ப அட்டைகளுக்கு குறைந்தபட்சம் ஒரு உறுப்பினரின் ஆதார் எண் விவரங்களாவது சேகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட ஆதார் எண் விவரங்களின் அடிப்படையில் மின்னணு குடும்ப அட்டைகள் தயாரிக்கப்பட்டு தற்போது வழங்கப்படவுள்ளது. இந்த மின்னணு குடும்ப அட்டைகளின் விலையை தமிழ்நாடு அரசே ஏற்றுக் கொண்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையின்றி வழங்கப்படும்.

குடும்ப அட்டைதாரர்கள், அவர்களுடைய குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்களின் விவரங்களை அவ்வப்போது குறுஞ்செய்தி வாயிலாக அறியும் வகையில் இதுவரை 1 கோடியே 67 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களின் கைபேசி எண்களும் சேகரிக்கப்பட்டு விவரங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்பட்ட விவரத்தினை குடும்ப அட்டைதாரர்களுக்கு குறுஞ்செய்தி வழியாக அவர்களின் கைபேசிக்கு அனுப்பப்படுவதன் மூலம் போலிப் பட்டியலிடுதல் தவிர்க்கப்படும்.

பொது விநியோகத் திட்டம் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டு உள்ளதால், நியாய விலைக் கடைகளுக்கான அத்தியாவசியப் பொருட்களின் மாதாந்திர ஒதுக்கீடுகள் இணையவழி மூலம் மேற்கொள்ளவும், கிடங்குகள் முதல் நியாயவிலைக் கடைகள் வரையிலான அத்தியாவசியப் பொருட்களின் நகர்வினை உடனுக்குடன் கண்காணிக்கவும் இயலும்.

மேலும் ஒரு நபர், ஒன்றிற்கு மேற்பட்ட குடும்ப அட்டைகளில் அவரின் பெயர் இடம்பெறுவது தவிர்க்கப்படுவதால், போலி குடும்ப அட்டைகள் மற்றும் போலி பட்டியலிடுதல் போன்ற தவறுகள் தவிர்க்கப்பட்டு, அத்தியாவசியப் பொருட்கள்

தகுதியான நபர்களுக்கு வழங்கப்படுவது உறுதி செய்யப்படும். குடும்ப அட்டைதாரர்கள் பொது விநியோகத் திட்டம் சார்ந்த குறைகளை தெரிவிப்பதற்கு ஏதுவாக "**1967**" மற்றும் "**1800 425 5901**" ஆகிய கட்டணமில்லா தொலைபேசி சேவைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பொது விநியோகத் திட்டம் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டதன் மூலம் பொதுமக்கள் புதிய குடும்ப அட்டைகள் குறித்த மனுக்கள், குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்குதல், முகவரி மாற்றம் குறித்த மனுக்கள் ஆகியவற்றை இணையவழி மூலமாக சமர்ப்பிக்கலாம். இத்தகைய மனுக்களை துறை அதிகாரிகள் இணையவழியாக ஆய்வு செய்து, தகுதியுள்ளவர்களுக்கு குடும்ப அட்டைகள் தொடர்பான சேவைகள் விரைவில் கிடைத்திட வழி ஏற்படும். மேலும், இத்தகைய சேவைகளை பொது சேவை மையங்கள் மூலமாகவும் பொதுமக்கள் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், கொரட்டூரில் தொடங்கப்பட்ட மின்னணு குடும்ப அட்டை வழங்கும் பணி, இன்னும் இரண்டு மாதங்களில் அதாவது ஏப்ரல், மே மாதத்திற்குள் மாநிலம் முழுவதும் வழங்கி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மின்னணு குடும்ப அட்டை பெறுகிறவரை தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகள் மூலம் ரேசன் பொருட்களை பெற்றுக்கொள்ளலாம். குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்களது கைபேசியில் SMS மூலம் தகவல் வந்ததற்கு பின்னால், குடும்ப அட்டைதாரர்கள் அங்காடிகளுக்கு நேரில் சென்று தங்களது மின்னணு குடும்ப அட்டைகளை பெற்றுக் கொள்ளலாம்.

மாண்புமிகு அம்மா அவர்கள் விட்டுச்சென்ற மக்கள் நல திட்டங்கள், தமிழ்நாட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்பதை உறுதிப்படுத்தும் விதமாகவே இந்த நிகழ்ச்சியில் தொடங்கி வைக்கப்பட்ட இந்த திட்டம் அமைந்துள்ளது.

மிக அதிகமானவர்களுக்கு மிக அதிக நன்மைகளைப் பயப்பது தான் உண்மையான மக்களாட்சி என்பதால், மாண்புமிகு அம்மாவின் மக்களாட்சியில் இங்கே தொடங்கி வைக்கப்பட்டிருக்கிற மின்னணு குடும்ப அட்டை வழங்கும் திட்டத்தின் மூலம் அதிகமான மக்கள் பயன்பெறுவார்கள்.

தாயின் அன்பினை உணர்த்துவதில் உணவு உன்னதமானது. சிலர் சாப்பிடும் போது, இது எங்கள் அம்மா சமைத்தது போல உள்ளது என்று பெருமைப்பட்டு கொள்வார்கள். காரணம், அம்மா சமைத்த உணவுக்குள்ளே உணர்வுகளும் கலந்திருக்கின்றன. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், இந்த நாட்டிற்கே அன்னபூரணி அம்மாவாக திகழ்ந்து, ஏழைகளுக்கும், ஏழை குழந்தைகளுக்கும் அன்னமிடும் பல திட்டங்களை செயல்படுத்தினார்கள். இப்போதும், எப்போதும் மாண்புமிகு அம்மா அவர்கள் மக்களோடு மக்களாக, மக்களுக்கெல்லாம் தாயாக இருந்து வருகிறார்கள். அம்மா அவர்கள் வழியில் வந்த இந்த அரசில் அன்புக்கு பஞ்சம் இருக்காது, அன்னத்திற்கும் பஞ்சம் இருக்காது. ஏழைகளே இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குவதே அம்மா அரசின் தலையாய குறிக்கோள் ஆகும். மாண்புமிகு அம்மாவிடம் பயிற்சி பெற்ற நாங்கள் அதனை முழு முனைப்போடு நிறைவேற்றுவோம் என்று இந்த நேரத்திலே உறுதி கூறிக் கொண்டு, இந்த வரலாற்று சிறப்புமிக்க இவ்விழாவினை ஏற்பாடு செய்த நல் இதயங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

◈◈◈

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 01.04.2017 அன்று, திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர், எஸ்.ஆர்.எம்.மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடைபெற்ற விரிவுரையாளர்கள் பணியிடங்களுக்கான நியமன ஆணைகளை வழங்குதல், பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு குறித்த மாநில அளவிலான போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசு வழங்குதல் மற்றும் பல்வேறு பள்ளிக் கல்வி திட்டங்கள் தொடக்க விழாவில் ஆற்றிய உரை.

## நாட்டிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்க ஒவ்வொரு அரசுப் பணியாளரும், ஆசிரியரும் என்னோடு இணைந்து செயலாற்ற வேண்டும்!




**அ**ன்பின் உருவம், ஆற்றலின் இருப்பிடம், இன்றும் என்றும் என்றென்றும் மாணவர்கள் மற்றும் மக்களின் மனதை விட்டு நீங்காத **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் வாழும் திசை நோக்கி பணிந்து வணங்குகிறேன்.

இந்த இனிய விழாவிற்கு வருகைப் புரிந்துள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! தலைமைச் செயலாளர் அவர்களே!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! வரவேற்புரை ஆற்றிய பள்ளிக்கல்வித் துறை செயலர் அவர்களே! தமிழ்நாடு அரசு உயர் அலுவலர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அவர்களே! கல்வித்துறை அதிகாரிகளே! பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

உங்கள் அத்தனை பேருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

உயர்ந்த சிந்தனையும் உன்னத நோக்கமும் கொண்ட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசிகளோடு நடைபெறுகின்ற, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றில் விரிவுரையாளர் பணி இடங்களுக்கான பணிநியமன ஆணை வழங்குதல், பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு குறித்த மாநில அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்குதல் மற்றும் பல்வேறு பள்ளிக்கல்வித் திட்டங்கள் தொடக்க விழாவில் கலந்துகொண்டு உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மாணவர்களின் அறிவுக்கண்ணைத் திறந்து, வாழ்வில் சமூக சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றல் மிக்கவர்களாக அவர்களை உருவாக்குவது கல்வியே ஆகும்.

அத்தகைய சிறப்பு மிக்க கல்வியை சற்றும் சிரமம் இல்லாமல் அனைவரும் பெற வேண்டும் என்பதற்காகவும், ஏழை மக்களின் கல்விச் செலவு சுமையை குறைத்திடவும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இலவசப் பேருந்து பயண அட்டை, விலையில்லாச் சீருடைகள், விலையில்லா பாடநூல்கள், விலையில்லாக் க்ரேயான்கள், விலையில்லா வண்ணப் பென்சில்கள், கணித உபகரணப் பெட்டி, விலையில்லா

நில வரைபட நூல், விலையில்லாப் புத்தகப் பை, விலையில்லாக் காலணிகள், விலையில்லா மிதிவண்டிகள், விலையில்லா மடிக்கணினி, மதிய உணவில் 16 வகையான சத்தான ஆகாரம், இடைநிற்றலைக் குறைப்பதற்கான சிறப்பு ஊக்கத் தொகை, மலைப்பிரதேச மாணவர்களுக்கு கம்பளிச்சட்டை, நோட்டுப்புத்தகங்கள், வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு நிதியுதவி போன்ற பல்வேறு வகையான மாணவ நலத்திட்டங்களைச் செயல்படுத்தினார்கள். புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசும் பல்வேறு நலத்திட்டங்களைச் செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

ஒரு நாட்டின் வளர்ச்சியும் பொருளாதார முன்னேற்றமும் அந்த நாட்டின் மக்களின் கல்வி நிலையை அடிப்படையாக கொண்டவை என்பதை உணர்ந்த நமது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஒவ்வொரு குழந்தையையும் மதிப்புள்ளவர்களாக மாற்றிடும் நலனில் அக்கறை காட்டினார்கள்.

ஒரு நாட்டின் தலை எழுத்து வகுப்பறைகளில் தான் நிர்ணயிக்கப்படுகிறது. உயிரும் உணர்வும் கொடுத்தவர்கள் பெற்றோர்களாக இருக்கலாம். ஆனால், இந்த வெளி உலகத்தைக் காண சன்னல்களாகவும் வாழ்க்கையில் முன்னேறிச் செல்ல ஏணிகளாகவும் இருப்பவர்கள் நமது ஆசிரியர் பெருமக்களே.

ஒரு மனிதனுக்கு தாய் தந்தை நிலைக்கு அடுத்த நிலையில் குரு வைத்துப் போற்றப்படுகிறார். அதனால்தான் மாதா, பிதா, குரு, தெய்வம் என்று நமது முன்னோர்கள் வரிசைப்படுத்தினார்கள்.

ஆசிரியர் தொழில் என்பது ஒரு சிற்பியின் தொழிலைப் போன்றது. மாணவர்களை அறிவுச் சிற்றுளியால் தெய்வப் பதுமையாக மாற்றும் புனிதப் பணி உங்களுடையது. அந்தப் புனிதப் பணியை ஊக்கப்படுத்தும் விதமாகத்தான் தமிழ்நாடு அரசு முன்மாதிரியான ஆசிரியர்களுக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கி சிறப்பிக்கின்றது.



மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்வித் துறையை ஒரு மனிதசக்தியை வளப்படுத்தும் ஒரு துறையாக வளர்ச்சியடைச் செய்திருக்கிறார்கள். அனைத்துத் துறைகளையும் விட கல்வித் துறைக்கு அதிகப்படியான நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். தமிழ்நாட்டை 100 சதவீதம் கற்றவர்கள் நிரம்பிய மாநிலமாக மாற்ற பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தினார்கள்.

அனைத்துப் பள்ளி வயதுக் குழந்தைகளுக்கு இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியை எளிதில் பெறும் பொருட்டு, புதிய பள்ளிகளைத் தொடங்குதல், தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்துதல், உண்டு உறைவிடப் பள்ளிகளை தொடங்குதல், பள்ளிகள் திறக்க வாய்ப்பு இல்லாத குடியிருப்புகளில் குழந்தைகளுக்கு போக்குவரத்து, பாதுகாவலர் வசதிகளை அளித்தல் போன்ற நலத்திட்டங்களை புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தியதன் காரணமாக தொடக்கக் கல்வித் துறையில் நிகர சேர்க்கை விகிதம் 2015–2016இல் 99.85 விழுக்காடாகவும், நடுநிலை வகுப்புகளில் 99.11 விழுக்காடாகவும் அதிகரித்துள்ளது. இவ்வகையில் 2011–2012 முதல் 2016–2017ஆம் ஆண்டு வரை 226 புதிய தொடக்கப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டதோடு 115 தொடக்கப் பள்ளிகள் உயர் தொடக்கப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாட்டில் 1 முதல் 9ஆம் வகுப்பு வரை முப்பருவ கல்விமுறை நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இம்முப்பருவக் கல்வி முறையால் மாணவர்களின் புத்தகச்சுமை குறைந்ததோடல்லாமல், கற்றலிலும் கூடுதல் கவனம் ஏற்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை தமிழக கல்வி வரலாற்றில் ஒரு மைல் கல் எனலாம்.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி, தனியார் பள்ளிகளில் 25 சதவிகித இட ஒதுக்கீட்டில் மாணவர் சேர்க்கை நடைபெறுவதை தமிழக அரசு உறுதிசெய்கிறது.இதன்காரணமாகசுயநிதிப்பள்ளிகளில்வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளை பள்ளிகளில் சேர்ப்பது கடந்த மூன்று ஆண்டுகளாக உயர்ந்து வருகிறது. இவ்வகையில் மாணவர் சேர்க்கை 2013–2014ஆம் கல்வியாண்டில் சேர்க்கை 49,864 ஆகவும், 2016–2017இல் 97,506 ஆகவும் இருமடங்காக உயர்ந்துள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாணவர்களுக்காக செயல்படுத்திய பல்வேறு திட்டங்களின் காரணமாக, 10 மற்றும் 12ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் மாணவர்களின் கல்விச் செயல்பாடு குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்து வருகிறது. 2015–2016 ஆம் கல்வியாண்டில் தேர்ச்சி விகிதம் 10ஆம் வகுப்பில் 93.6 விழுக்காடாகவும், 12ஆம் வகுப்பில் 91.4 விழுக்காடாகவும் உயர்ந்துள்ளது. மேலும், 10ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் 1,467 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளும், 12ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் 266 அரசு மேல்நிலைப் பள்ளிகளும் 100 விழுக்காடு தேர்ச்சியைப் பெற்றுள்ளன என்பதை நான் இங்கே பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



ஆசிரியர் இல்லாத காரணத்தினால் மாணவர்களின் கற்றல் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசால் பள்ளிக் கல்வித் துறையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் **74,316** ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசின் தொலை நோக்குப் பார்வையில் கல்வியே முன்னிலை வகித்து வருகிறது என்பதற்குச் சான்று, **2017–2018**ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பள்ளிக் கல்வித்துறைக்கென ரூபாய் **26** ஆயிரத்து **932** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதே ஆகும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளின் கல்வித் தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் **2012**ஆம் ஆண்டு ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தை (DTERT) மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமாகத் (SCERT) தரம் உயர்த்தினார்கள்.

இந்தத் தரம் உயர்த்தப்பட்ட மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், ஆசிரியர்களின் பணி மேம்பாடு மற்றும் மாணவர்களின் தரமான கற்றலை உறுதிப்படுத்துவதோடு மட்டுமின்றி மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்

“தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023”இன்படி தமிழகத்தை இந்தியாவின் அறிவுசார் தலைநகரமாக மாற்றி, சமூகப் பொருளாதார நிலையில் தமிழகத்தை முன்மாதிரி மாநிலமாக உருவாக்கிடும் உயரிய நோக்கத்தோடு செயல்பட்டு வருகிறது.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் 9 துறைகள் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டு, கூடுதலாக 36 கல்வியாளர் பணியிடங்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. தரமான தொடக்கக் கல்வி ஆசிரியர்களை உருவாக்கத் தரமான கல்வியாளர்களை நியமிக்க மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களான மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்காக ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தெரிவு செய்யப்பட்ட 11 முதுநிலை விரிவுரையாளர், 80 விரிவுரையாளர், 18 இளநிலை விரிவுரையாளர், என மொத்தம் 109 நபர்களுக்கு 31.03.2017 அன்று கலந்தாய்வு நடத்தப்பட்டு அவர்களுக்குப் பணி நியமன ஆணைகள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் என்னால் வழங்கப்பட்டது.

இந்த இனிமையான நேரத்தில், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றி வரும் பல்வேறு பணிகள் குறித்து குறிப்பிட கடமைப்பட்டுள்ளேன்.

❖ கடந்த 2015ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை உள்ளிட்ட மாவட்டங்களில் பயின்ற மாணவர்கள் தங்கள் பாடநூல் உள்ளிட்ட உடைமைகளை இழந்து தவித்தபோது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பொதுத்தேர்வு எழுதும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு உதவும் வகையிலான கற்றல் கையேடுகளைத் தயாரித்து வழங்க ஆணையிட்டார்கள். அதன்படி இந்த

நிறுவனம் கையேடுகள் தயாரிக்கும் பணியினை சிறப்பாகச் செய்து முடித்து மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களே அக்கையேட்டினை வெளியிட்டார்கள். இதனால், வெள்ள பாதிப்பின் பயமின்றித் தேர்வினை எதிர்கொண்ட மாணவர்கள் சிறப்பான தேர்ச்சியைப் பெற்றதோடு இந்த மாவட்டங்களின் தேர்ச்சி விழுக்காடும் அதிகரித்தது பாராட்டுக்குரியதாகும்.

- இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக மெய்நிகர் வகுப்பறைகளை (Virtual Class rooms) 770 பள்ளிகளிலும் 11 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களிலும் நிறுவியுள்ளது.

- தற்காலக் கணினி யுகத்தின் டிஜிட்டல் தேவைகளைப் பூர்த்தி செய்ய மாணவர்களுக்குத் தேவையான பாடப்பொருள் சார்ந்த 950 காணொலிகள் உருவாக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- மாணவர்களின் கற்றலை இனிமையாக்க ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரையிலான தமிழ்ப் பாடல்களை அரசுப் பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களைக் கொண்டு காணொலியாக உருவாக்கப்பட்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் வெளியிடப்பட்ட “தாயெனப்படுவது தமிழ்” என்னும் குறுந்தகடு அனைவரின் வரவேற்பையும் பெற்றுள்ளது.

இவை போன்ற பல பணிகளை ஆற்றி வரும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் பணி மேலும் சிறக்க என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அம்மாவின் வழியில் வந்த இந்த அரசு, அம்மாவின் எண்ணங்களை ஈடேற்றும் வகையில் தொடர்ந்து கல்விக்காக சிறந்த திட்டங்களை செயல்படுத்தும் என்று இந்த நேரத்திலே உறுதியளிக்கிறேன்.



இங்கே பணிநியமன ஆணை பெற்ற விரிவுரையாளர்களுக்கு நிறைவாக ஒன்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். காலத்திற்கேற்றார்போல், மாணவர்களை ஒழுங்குபடுத்தி அவர்களை இந்நாட்டு மன்னர்களாக உருவாக்கும் சக்தி உங்களிடம் தான் இருக்கிறது. அதை நீங்கள் சரியாக செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. இது சம்பந்தமாக எனக்கு ஒரு கதை நினைவிற்கு வருகிறது.

ஒரு காட்டிலுள்ள ஆசிரமத்தில் முனிவர் ஒருவர் இருந்தார். அவர் ஏழை பணக்காரர் என்ற வித்தியாசம் இல்லாமல் அனைத்து பிள்ளைகளுக்கும் கல்வி கற்பித்து வந்தார். அந்நாட்டு அரசரும் தன் பிள்ளையை அந்த ஆசிரமத்திற்கு கல்வி கற்க அனுப்பி இருந்தார். ஆண்டுகள் பல கடந்ததால், தன்னுடைய பிள்ளையின் கல்வி கற்கும் நிலையை அறிந்திட அரசர் ஆசிரமத்திற்கு நேரில் சென்றார். அங்கு தனது மகன் விறகு வெட்டுவதும், துடைப்பத்தை கொண்டு ஆசிரமத்தை தூய்மை செய்வதையும் கண்ட அரசர் திடுக்கிட்டு இது குறித்து மகனிடம் கேட்டார். அப்போது அவரது மகன், தந்தையே இது என்னுடைய குருதேவரின் உத்தரவு. இங்கே அரசரும் ஒன்று தான், ஆண்டியும் ஒன்று தான். குருதேவர் சொல்வதை மறுக்காமல் செய்வது தான் எங்கள் கடமை என்று தெரிவித்தான்.

அந்த சமயத்தில் முனிவரும் அங்கே வந்து, "அரசே! உங்களுடைய பிள்ளை என்னுடைய எல்லா தேர்விலும் வெற்றி பெற்று விட்டான். பெரியோர் சொல்லை கேட்பது தான் ஒருவனின் உயர்ந்த குணம். இந்தக் குணத்தை உங்கள் மகன் பெற்று விட்டதால், எத்தகைய கடினமான வேலையை அவனிடம் கூறினாலும், அதை தட்டாமல் செய்து முடிக்கும் திறமை அவனுக்கு வந்து விடும். இந்தக் குணமும், விவேகமும் உங்கள் மகனுக்கு மன உறுதியை ஏற்படுத்தும். அதன்மூலம் அவன் நாட்டு மக்களின் பிரச்சினைகளை நன்கு உணர்ந்து சிறந்த முறையில் ஆட்சி செய்து பேரும் புகழும் பெறுவான்". என்று வாழ்த்தி அனுப்பினார்.

இந்த கதையில் வரும் முனிவரைப் போல, ஆசிரியர்களாகிய நீங்கள் இருக்க வேண்டும். இந்த கதையில் வரும் அரசனின் மகனைப் போன்ற மாணவர்களை நீங்கள் உருவாக்க வேண்டும். வருங்கால மன்னர்களாகிய மாணவச் செல்வங்களுக்கு கல்வியுடன், நற்சிந்தனை, ஒழுக்கம், பெரியோர் சொல் கேட்டு நடப்பது, போன்ற பண்புகளை கற்பித்து அவர்களை நல்ல குடிமக்களாக உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களுக்கு இருக்கிறது. அதனை உணர்ந்து நீங்கள் செயல்பட்டால் நம் நாடு ஒரு பெரிய வல்லரசு நாடாக மலரும் என்பதில் சந்தேகம் இல்லை.

"நாட்டிலேயே முதன்மையான மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்ற என்னுடைய கூர்நோக்கை மெய்யாக்குவதில் ஒவ்வொரு அரசுப் பணியாளரும், ஆசிரியரும் என்னோடு இணைந்து செயலாற்ற வேண்டும்" என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நமக்கு அன்பு கட்டளையிட்டார்கள். அம்மா அவர்களுடைய கட்டளையை ஏற்று அரசுப் பணியாளர்களும் ஆசிரியர்களான நீங்களும் தமிழகத்தின் கல்வி வளர்ச்சிக்காக இந்த அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

மாணவர்களின் எதிர்காலத்திற்கு நன்முறையில் அடித்தளமிடும் ஆசிரியர்களை உருவாக்கவுள்ள கல்வியாளர்களுக்கும் பரிசு பெற்ற அத்தனை மாணவச் செல்வங்களுக்கும் மீண்டும் ஒருமுறை என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த சிறப்பான விழாவினை ஏற்பாடு செய்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

◈◈◈

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
18.04.2017 அன்று சென்னை மாநில கல்லூரியின்
175ஆவது ஆண்டு நிறைவு விழா, கல்லூரி ஆண்டு விழா மற்றும்
விளையாட்டு விழாவில் ஆற்றிய உரை.

# சென்னை மாநிலக்கல்லூரி பல நூற்றாண்டுகள் கல்விப்பணியாற்றி சாதனையாளர்களை உருவாக்கி தமிழ்நாட்டிற்கு தொடர்ந்து பெருமை சேர்க்கவேண்டும்!




அன்பின் உருவம், ஆற்றலின் இருப்பிடம், இன்றும் என்றும் என்றென்றும்

மாணவர்கள் மற்றும் மக்களின் மனதை விட்டு நீங்காத

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாழும் திசை நோக்கி பணிந்து வணங்குகிறேன்.

இந்த இனிய விழாவிற்கு வருகைப் புரிந்துள்ள

மாண்புமிகு மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி. ஜெயக்குமார் அவர்களே!

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர்
திரு.கே.பி. அன்பழகன் அவர்களே!

மாண்புமிகு மத்திய சென்னை
நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்
திரு.எஸ்.ஆர். விஜயகுமார் அவர்களே!

உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர்
திரு. சுனீல் பாலீவால் அவர்களே!

கல்லூரி கல்வி இயக்குநர் முனைவர்
ஜெ. மஞ்சுளா அவர்களே!

வரவேற்புரை ஆற்றிய மாநிலக் கல்லூரி முதல்வர்
முனைவர் த. பிரம்மானந்த பெருமாள் அவர்களே!

தமிழ்நாடு அரசு உயர் அலுவலர்களே!
கல்லூரி பேராசிரியர்களே!

உயர்கல்வித்துறை அதிகாரிகளே!

நன்றியுரை ஆற்ற உள்ள
முனைவர் தாராபாய் தாட்சாயணி அவர்களே !

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

மாணவ, மாணவிகளே!

வருகை தந்திருக்கிற நண்பர்களே!

உங்கள் அத்தனை பேருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்று சிறப்புமிக்க மாநிலக் கல்லூரியின் 175ஆம் ஆண்டு கொண்டாட்ட நிறைவு விழா, கல்லூரி ஆண்டு விழா மற்றும் விளையாட்டு

விழாவில் கலந்து கொண்டு இக்கல்லூரியின் 175ஆம் ஆண்டு நினைவு வளைவிற்கு அடிக்கல் நாட்டும் வாய்ப்பினையும் பெற்றமைக்காக நான் பெருமைப்படுகின்றேன். 175 ஆண்டுகள் பழமையும் பெருமையும் வாய்ந்த இந்த மாநிலக் கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியப் பெருமக்களையும், மாணவ மணிகளையும் வாழ்த்துகிறேன்.

மாநிலக் கல்லூரியானது, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தென்னிந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் கல்லூரி என்ற பெருமை பெற்று விளங்குவதோடு, சென்னைப் பல்கலைக்கழகம் தொடங்கப்படுவதற்கு முன்னரே நிறுவப்பட்ட ஒரே அரசு கல்லூரி என்ற பெருமைக்குரியது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த மாநிலக் கல்லூரியில் உள்ள ஒவ்வொரு வகுப்பறையும் எத்தனை எத்தனையோ அறிஞர் பெருமக்களையும், அறிவியல் மேதைகளையும் உருவாக்கி இந்த நாட்டிற்கும், உலகத்திற்கும் அர்ப்பணித்திருக்கிறது. அத்தனை சாதனையாளர்களையும் இங்கே பட்டியலிட நேரம் போதாது என்றாலும், ஒரு சிலரை மட்டும் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

இந்தக் கல்லூரியில் பயின்று இராமன் விளைவு (Raman Effect) என்கிற அலை நீள மாற்றத்தை கண்டறிந்து, இயற்பியல் துறைக்கான நோபல் பரிசு பெற்ற திரு.சர்.சி.வி. இராமன் அவர்கள்;

விண்மீன்கள் பற்றிய ஆய்விற்காக இயற்பியல் துறைக்கான நோபல் பரிசு பெற்ற திரு. S. சந்திரசேகர் அவர்கள்;

கணித இயலில் நோபல் பரிசுக்கு நிகரான ஏபல் பரிசினைப் பெற்ற திரு. எஸ்.ஆர். ஸ்ரீனிவாச வரதன் அவர்கள்;

இந்தியாவின் உணவு தன்னிறைவுக்கு வித்திட்ட திரு. C. சுப்பிரமணியம் அவர்கள்;

எளிமையின் இருப்பிடம், எழுச்சியின் பிறப்பிடம் சிந்தனை சிற்பி திரு.சிங்காரவேலர் அவர்கள் உள்ளிட்ட ஏராளமான




சாதனையாளர்களையும், பல சிறந்த ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகளையும், தொழில் அதிபர்களையும் உருவாக்கிய பெருமை இந்த கல்லூரிக்கு உண்டு.

இக்கல்லூரியில் பயின்ற மாணவர்கள் சாதனையாளர்களாக உருவாக காரணமாக இருந்த பேராசிரியர் பெருமக்களில் ஒருவர்தான், தமிழ்நாட்டில் மூலை முடுக்குகளுக்கு எல்லாம் அலைந்து திரிந்து சிதைந்து கிடந்த தமிழ் ஓலைச்சுவடிகளை சேகரித்து, தமிழ் இலக்கியத்திற்கு புத்துயிர் ஊட்டிய ‘தமிழ்த்தாத்தா’ என்று எல்லோராலும் போற்றப்படும் திரு.உ.வே. சாமிநாதய்யர்.

இந்தக் கல்லூரி இன்னும் எத்தனையோ சாதனையாளர்களை உருவாக்க காத்திருக்கிறது. எனவேதான், இந்தக் கல்லூரி நிகழ்ச்சியில் கலந்து கொள்வதை நானும் பெருமையாக கருதுகிறேன்.

‘இந்தக் காட்டில் எந்த மூங்கில் புல்லாங்குழல்’ என்பது போல..... இங்கே எதிரில் அமர்ந்திருக்கின்ற உங்களில் பலர் தான் நாளைய அறிவியல் மேதைகளாகவும், அறிஞர் பெருமக்களாகவும்,

தலைவர்களாகவும் உயரப்போகிறீர்கள். அத்தகைய பெருமைமிக்க உங்களை இப்போது சந்திப்பதில் பெருமிதம் கொள்கின்றேன்.

ஒரு நாட்டின் எதிர்காலம் வகுப்பறையில் தான் உருவாக்கப்படுகிறது என்பார்கள். ஏட்டுக் கல்வி மட்டும் ஒருவருடைய எதிர்காலத்தை நிர்ணயித்து விடாது, அவருடைய சமுதாயக் கல்வி தான் அவரை முழு மனிதனாக உருவாக்குகிறது. நாம் அதிகமாக கற்கிறோம். ஆனால் குறைவாகத்தான் செயல்படுகின்றோம். இந்த நிலை மாற வேண்டும். இந்த கணினி யுகத்தின் சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றலும், அறிவு கூர்மையும் கொண்ட கல்வியை தான் ஒவ்வொரு கல்வி நிறுவனமும் வழங்க வேண்டும். கல்வி என்பது தேர்வுக்காக மட்டும் இருக்கக் கூடாது, வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் அமைய வேண்டும். அத்தகைய வாழ்வியல் கல்வியை வழங்கியதால் தான் இக்கல்லூரி வரலாற்றில் சிறப்பான ஓர் இடத்தை பெற்றிருக்கிறது.

இந்தக் கல்லூரியின் வழியாக தோன்றிய சாதனையாளர்களை நினைவு கூர்ந்து பெருமைப்படுகிற இந்த தருணத்தில், அவர்களை வெற்றியாளர்களாக உருவாக்கிய பேராசிரியர் பெருமக்களையும் நாம் போற்றி வணங்க வேண்டும். விருட்சமாக விரிந்து பரந்து வளர்ந்திருக்கிற உயர்ந்த மரத்திற்கு வெளியில் தெரியாத வேர்களாக, தியாகத்தின் மறு உருவமாக திகழ்பவர்கள் ஆசிரியர்கள்.

அதனால்தான், வேறு எந்த பணியையும் அறப்பணி என்று நாம் சொல்வதில்லை. ஆசிரியப் பணியை மட்டும்தான் அறப்பணி என்கிறோம். இதைக் கொண்டே ஆசிரியப் பணியின் மகத்துவத்தை நாம் புரிந்து கொள்ளலாம்.

ஆசிரியப் பணியின் சிறப்பைக் குறித்து பேசும் போது எனக்கு ஒரு வரலாற்று நிகழ்வு ஞாபகத்திற்கு வருகிறது.

கிரேக்க மன்னன் பிலிப் தன்னுடைய குரு அரிஸ்டாட்டிலிடம், தனது மகன் அலெக்சாண்டரை கல்வி கற்க அனுப்பி வைத்தார். ஒருசமயம், அரிஸ்டாட்டில் அலெக்சாண்டரை மலையடிவாரத்திற்கு கூட்டிச் சென்றார். அப்போது திடீரென வெள்ளம் வந்தது. அரிஸ்டாட்டிலுக்குப்

பின்னால் வந்த மாணவன் அலெக்சாண்டர், ‘‘குருவே.... வெள்ளம் அதிகமாய் வருகிறது, நான் முன்னே செல்கிறேன். நீங்கள் பின்னே வாருங்கள்’ என்றான். ‘எது மேடு, எது பள்ளம் என்று தெரியாத அளவிற்கு வெள்ளம் அதிகமாகி விட்டது. வெள்ளம் உன்னை இழுத்துப் போய்விடும், முன்னால் செல்ல வேண்டாம்’’ என்றார் அரிஸ்டாட்டில்.

‘‘குருவே... அரிஸ்டாட்டிலாகிய நீங்கள் நினைத்தால் ஆயிரம் அலெக்சாண்டர்களை உருவாக்க முடியும். ஆனால் ஆயிரம் அலெக்சாண்டர்கள் சேர்ந்தாலும் ஒரு அரிஸ்டாட்டிலை உருவாக்க முடியாது. எனவே, நான் முதலில் செல்கிறேன்’’, என்றான் அலெக்சாண்டர்.

இதிலிருந்து ஆசிரியப் பெருமக்களின் முக்கியவத்துவத்தை நாம் தெரிந்துக் கொள்ளலாம். ஒவ்வொரு ஆசிரியரும் அரிஸ்டாட்டிலை போன்று நாட்டிற்கு பெருமை சேர்க்கிற சாதனையாளர்களை உருவாக்க பணியாற்ற வேண்டும். அதேபோன்று, ஒவ்வொரு மாணவரும் அலெக்சாண்டர் போன்று ஆசிரியப் பெருமக்களிடம் பணிவுடன் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை இந்த நிகழ்வின் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்.

இந்த இனிய நேரத்தில் பெற்றோர்களின் எதிர்பார்ப்பையும், உணர்வுகளையும் மாணவர்கள் நினைவு கூர்ந்து பார்க்க வேண்டும். ஆயிரம் கனவுகளோடு உங்களை கல்லூரிக்கு பெற்றோர்கள் அனுப்பி வைக்கிறார்கள். அவர்களுடைய எண்ணங்களை ஈடேற்றும் வகையில் மாணவர்கள் நடந்து கொள்ள வேண்டும். எந்த நிலையிலும் உங்களுக்கு கவனச் சிதறல் ஏற்படாத வகையில், கல்வியில் மட்டுமே கவனம் செலுத்தி, நீங்கள் வாழ்வில் முன்னேற வேண்டும். அதுதான் உங்கள் பெற்றோர்களுக்கு நீங்கள் காட்டும் நன்றிக் கடனாக நான் நினைக்கிறேன்.

இளைஞர்களாகிய உங்கள் வாழ்க்கையை ஒளிமயமாக்க ஒரு தூண்டுகோல் தேவை. வாழ்க்கையின் முதல்படியில் கால் பதிப்பதற்கு தூண்டுகோலாக இருப்பவர்கள் ஆசிரியர்கள் தான்.

ஆசிரியர் ஒருவர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். 500 ரூபாய் நோட்டை எடுத்து மாணவர்களிடம் காட்டி, "இந்தப் பணம் வேண்டும் என்பவர்கள் கையை உயர்த்தலாம்", என்றார். எல்லோரும் கையை உயர்த்தினர். பிறகு அந்த ரூபாய் நோட்டைச் சுருட்டி, கசக்கி, அழுக்காக்கி அதை உயர்த்திப் பிடித்து "யாருக்கு இது வேண்டும்?" என்று மீண்டும் கேட்டார். இப்போதும் எல்லோரும் கையை உயர்த்தினர்.

அப்போது அந்த ஆசிரியர் சிரித்தபடி, "முதல் முறை நான் காட்டிய புத்தம் புதிய நோட்டின் மதிப்பு ஐநூறு ரூபாய். நோட்டை சுருட்டிக் கசக்கினாலும், கீழே போட்டு அழுக்காக்கியபோதும், அதன் மதிப்பு சிறிதும் குறையவில்லை. இதுபோன்றே நமது வாழ்க்கையில் சோதனைகள், துன்பங்கள், இழப்புகள், தோல்விகள், அவமானங்கள் என்று எவ்வளவு கசப்பான அனுபவங்கள் ஏற்பட்டாலும், நமது உண்மையான மதிப்பு ஒருபோதும் குறைவதில்லை. இந்த உண்மையை உணர்ந்தால், அதுவே ஒரு பெரிய தூண்டுகோலாகி, எந்த நிலையில் இருந்தாலும், தளராமல் உழைத்து, தடைகளைத் தாண்டி நாம் முன்னேற உதவும்", என்று கூறினார்.

பள்ளியில் மாணவர்களாக நுழையும் நீங்கள், கல்லூரியிலிருந்து மனிதர்களாக வெளியேறுகிறீர்கள். பள்ளிக்கல்வி உங்களுக்கு படிப்பை சொல்லித் தருகிறது. உயர்கல்விதான், நீங்கள் சிறப்புடன் வாழ்வதற்கு வழி அமைத்துக் கொடுக்கிறது.

நாட்டை வளப்படுத்துவதிலும், மக்களை மேம்படுத்துவதிலும், அறிவு சார்ந்த சமுதாயத்தை உருவாக்குவதிலும் உயர்கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த உயர்கல்வியை தமிழகத்தில் உள்ள ஏழை, எளிய மாணவ, மாணவியரும் பெறும் வண்ணம், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினார்கள்.

அவற்றில், ஒரு சிலவற்றை மட்டும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.




❖ தமிழ்நாட்டில் உள்ள மாணவர்கள், குறிப்பாக கிராமப்புற மாணவர்கள், குறைந்த கட்டணத்தில் உயர் கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்தில் 2011 முதல் மார்ச் 2017 வரை 4 அரசு பொறியியல் கல்லூரிகள், 44 அரசு மற்றும் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 16 அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள், தேசிய சட்டப் பள்ளி மற்றும் இந்திய தகவல் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம் துவக்கப்பட்டது ;

❖ தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளிலும், ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம், முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு நேரடி சேர்க்கை பெற்ற மாணவ மாணவியர்களில், முதல் தலைமுறை பட்டதாரி மாணவ மாணவியர்களுக்கு, இரண்டாயிரத்து எழுநூற்று இருபத்து இரண்டு கோடி ரூபாய்க்கு கல்விக் கட்டணச்சலுகை வழங்கியது;

❖ அரசு கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை விகிதம் கணிசமாக உயர்வதை கருத்தில் கொண்டு, 2011 முதல் மார்ச் 2017 வரை புதிதாக 959 பாடப்பிரிவுகளைத் தொடங்கியது;

- ❖ அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு ஆறு இலட்சத்து மூன்றாயிரத்து முன்னூற்று அறுபத்து ஐந்து விலையில்லா மடிக்கணினிகளை வழங்கியது;
- ❖ **2011** முதல் மார்ச் **2017** வரை அரசுக் கல்லூரிகளில் படிக்கும் **8** இலட்சத்து **51** ஆயிரத்து **542** மாணவர்களுக்குக் கட்டணமில்லா பேருந்து அனுமதி அட்டை வழங்கியது;
- ❖ இந்தியாவிலேயே முதன்முதலாக, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், வெளிநாட்டில் ஒரு பருவம் பயிலும் 'அயல்நாட்டில் கல்வி கற்கும் திட்டத்தின்' கீழ் **74** மாணவ–மாணவியர்கள் மற்றும் **15** ஆசிரியர்கள் இங்கிலாந்திற்கு அனுப்பியது;
- ❖ பொருளாதாரத்தில் நலிந்த **177** ஏழை மாணவ மாணவியர்கள், இளநிலை பொறியியல் மற்றும் இளநிலை தொழில்நுட்பப் படிப்புகளை தொடர்வதற்கு, ஒரு மாணவருக்கு **25** ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது;
- ❖ கட்டணமில்லாக் கல்வி முறை திட்டத்தின் மூலம் கடந்த ஐந்தாண்டுகளில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், இளநிலையில் பயிலும் **4** இலட்சத்து **63** ஆயிரத்து **63** மாணவர்களும் அரசு கல்லூரிகளில் முதுநிலையில் பயிலும் **30** ஆயிரத்து **403** மாணவர்களும் பயனடைந்தது;
- ❖ உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் தொழில் நிறுவனங்களையும் மாணவர்களையும் இணைக்கும் பல்கலைக்கழகம் – தொழில் நிறுவனங்கள் கூட்டிணைவு மையங்கள் அமைக்கப்பட்டது;
- ❖ எளிதாக வேலைவாய்ப்பினை பெற்றிடும் வகையில், ஆளுமைத்திறன், பேச்சுத்திறன், குழுப்பணித்திறன் போன்ற மென்திறன்களை (soft skills) மாணவர்களுக்கு கற்பிக்க **62** அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கல்லூரிகளில் மென்திறன் மையங்களை உருவாக்கியது;

- ❖ அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பல்வேறு பாடப்பிரிவுகளில் முழுநேர ஆராய்ச்சிப் படிப்பினை மேற்கொள்ளும் மாணவருக்கு, ஆண்டுதோறும் 36 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கியது. இத்திட்டத்தின் கீழ் 514 மாணவ–மாணவியர்கள் பயன் பெற்றனர்.

- ❖ அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வுகளை எழுதும் மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் சென்னை இராணிமேரி கல்லூரி மற்றும் மதுரை அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி ஆகியவற்றில் கட்டணமில்லாப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

- ❖ அரசு கல்லூரிகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மெதுவாகக் கற்கும் மாணவர்களுக்கு ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களை நன்கு படிக்க சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் கடந்தாண்டு பத்தாயிரத்து ஐநூற்று தொண்ணூற்று எட்டு மாணவ மாணவிகள் பயன்பெற்றுள்ளனர்.

இதுபோன்ற இன்னும் பல திட்டங்களை இங்கே குறிப்பிடலாம். நேரமில்லாத காரணத்தினால் ஒரு சிலவற்றையே நான் குறிப்பிட்டுள்ளேன். அம்மாவினுடைய ஆட்சியில் தான் இவ்வளவு திட்டங்களும் நிறைவேற்றப்பட்டன.

இதனால் தான் இந்தியாவில் உயர் கல்விக்கான மொத்த சேர்க்கை விகிதம் 24.50 என்கிற அளவில் இருக்கும்போது தமிழ்நாட்டின் மொத்த சேர்க்கை விகிதம் 44.30 ஆக உயர்ந்திருக்கிறது. ஆகவே, இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்வியிலே ஒரு புரட்சி, மறுமலர்ச்சி, மாணவர்களுக்கு செய்திட்ட நலத்திட்ட உதவிகள் வாயிலாக இன்றைக்கு உயர்கல்வி படிக்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை தமிழகத்தில் தான் உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தன்னிகரற்ற கல்வித் திட்டங்களால் உயர்கல்வித் துறையில் மாபெரும் சாதனைகள் நிகழ்ந்துள்ளன. அதன் காரணமாக தான், இக்கால இளைஞர்கள் முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு உயர்கல்வியில் பல சாதனைகள் படைத்து வருவதோடு இன்று உலகம் முழுவதும் பரவி வளமாகவும், நலமாகவும் வாழ்ந்து வருகிறார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2015ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி, 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மூலம் 2 இலட்சத்து 42 ஆயிரத்து 160 கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், இந்த ஆண்டு இறுதியில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு மீண்டும் நடத்தப்படவுள்ளது. இதனால் அதிக அளவில் தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டு, படித்த பட்டம் பெற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கி தரப்படும்.

வரலாற்று சிறப்பு மிக்க மாநிலக் கல்லூரி, 175 ஆண்டு நிறைவு செய்ததை நினைவுபடுத்தும் வகையில், ரூ.40 இலட்சம் செலவில் ஒரு நினைவு வளைவு அமைக்க, அடிக்கல் நாட்டுவதில் நான் மிக்க பெருமை கொள்கிறேன்.

மேலும், இக்கல்லூரியின் விக்டோரியா விடுதி 117 வருடம் வரலாற்று சிறப்பு மிக்கது ஆகும். இவ்விழாவிற்கு என்னை அழைத்தபோது, இக்கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள், கூடுதலாக ஒரு புதிய விடுதிக் கட்டடம் வேண்டும் என கோரிக்கை வைத்தனர். மாணவர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு, உடனடியாக விடுதிக்கு கூடுதலாக ஒரு புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்து நான் உத்தரவிட்டுள்ளேன். இப்பணிகள் இந்த ஆண்டிலேயே துவங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, உங்களுடைய கல்லூரி முதல்வரும் ஒரு சிலவற்றை குறிப்பிட்டு அதை நிறைவேற்றி

தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதுவும் அரசினுடைய பரிசீலனையில் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

“ஒரு மாநிலம், நிறைந்த பொருளாதார வளர்ச்சி அடைய வேண்டும் என்றால், அங்கு மனிதவள மேம்பாட்டிற்கு, குறிப்பாக, அறிவுசார் மனிதவள மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அறிவுசார் மனித வள மேம்பாட்டில் முக்கிய அங்கம் வகிப்பது கல்வி அறிவு தான்” என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அத்தகைய சிறப்பு மிக்க கல்வி வளர்ச்சியை தமிழகம் அடைந்திட பேராசிரியப் பெருமக்களும், மாணவச் செல்வங்களும் இந்த அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே, இங்கே படிக்கின்ற மாணவர்கள் கொடுத்து வைத்தவர்கள். ஏனென்றால் இது வரலாற்று சிறப்புமிக்க கல்லூரி. இந்த மாநிலக் கல்லூரியில் படிப்பதே ஒரு பெருமை. நானும் மேடையிலே வீற்றிருக்கக்கூடிய மரியாதைக்குரிய நிதி மற்றும் மீன்வளத் துறை அமைச்சர், உயர்கல்வித் துறை அமைச்சர்கள் எல்லாம் படிக்கின்ற காலத்திலே இப்படிப்பட்ட வசதிகள் கிடையாது. கிட்டத்தட்ட **38** ஆண்டுகளுக்கு முன்பு நான் ஈரோட்டிலே ஸ்ரீ வாசவி கல்லூரியில் படித்தேன். அப்போது எல்லாம் எங்களுக்கு போக்குவரத்து வசதியே கிடையாது. அந்தக் காலக்கட்டத்திலே தான் நாங்கள் எல்லாம் பயின்றோம். ஆகவே இன்றைக்கு இந்த நிலைக்கு உயர்ந்திருக்கிறோம் என்று சொன்னால், உழைப்பு, உழைப்பு, உழைப்பு. எங்கு உழைப்பு இருக்கின்றதோ, அங்கு உயர்வு நிச்சயம் கிட்டும். நாங்கள் எல்லாம் கிராமத்திலே பிறந்தவர்கள். மரியாதைக்குரிய அண்ணன் ஜெயக்குமார் அவர்கள், எளிமையான குடும்பத்திலே பிறந்தவர். மரியாதைக்குரிய உயர்கல்வித் துறை அமைச்சர் கிராமத்திலே பிறந்தார். ஆகவே நாங்கள் எல்லாம் இந்த அளவிற்கு உயர்ந்ததற்கு காரணம், நாங்கள் எங்களுடைய ஆசிரியப் பெருமக்கள் காட்டிய வழிகாட்டுதலின்படி

நடந்த காரணத்தினாலே இவ்வளவு உயர்விற்கு இன்றைக்கு உயர்ந்திருக்கிறோம். ஏதோ ஒரு கிராமத்திலே பிறந்தவர்கள் முதலமைச்சராக வரவேண்டும் என்றால் நீங்கள் எண்ணிப் பாருங்கள். ஆக, இன்றைக்கு இந்த சமுதாயத்திலே சாதாரண கிராமத்திலே பிறந்து வளர்ந்து கடினமான உழைப்பின் காரணமாக நாங்கள் உயர்ந்திருக்கிறோம். அதைப்போல இங்கே இருக்கின்ற மாணவச் செல்வங்கள் சிறந்த முறையிலே படித்து நீங்கள் எதிர்காலத்திலே உங்கள் வாழ்க்கையை வளமாக ஆக்கிக் கொள்ளுங்கள். நாட்டிற்கும் உங்கள் வீட்டிற்கும் நன்மை பயக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

175ஆவது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடும் இந்த மாநிலக் கல்லூரியானது, மேலும் பல நூற்றாண்டுகள் கல்விப் பணியாற்றி சாதனையாளர்களை உருவாக்கி, தமிழ்நாட்டிற்கு தொடர்ந்து பெருமை சேர்க்க வேண்டும் என்று வாழ்த்தி, இந்த விழாவில் பரிசு பெற்ற மாணவ மாணவிகளுக்கு என் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த சிறப்பான விழாவினை ஏற்பாடு செய்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

◈◈◈

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்,
23.04.2017 அன்று புதுடில்லியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள
தமிழக விவசாயிகளை சந்தித்த பின்னர்
பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டி.

# தமிழக விவசாயப் பிரதிநிதிகளின் கோரிக்கைகள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் வலியுறுத்தப்படும்!




**மா**ண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2016 சட்டமன்றத் தேர்தலின் போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, தேர்தல் அறிக்கை

வெளியிட்டார்கள். அப்பொழுது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி தமிழகத்திலே மலர்ந்தவுடன், முதன்முதலாக விவசாயிகளுடைய கடனை ரத்து செய்யப்படும் என்ற அறிவிப்பைத் தந்தார்கள். மக்களுடைய பேராதரவின் மூலமாக அம்மா அவர்கள் ஆட்சியிலே அமர்ந்தவுடன், விவசாயிகளுடைய கடனை முதலிலே ரத்து செய்து கையொப்பமிட்டவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். அதேபோல, தென்மேற்கு பருவமழை, வடகிழக்கு பருவமழை, இரண்டு பருவமழைகளும் பொய்த்ததின் காரணமாக, 140 ஆண்டு காலம் இல்லாத வறட்சி தமிழகத்திலே நிலவிக் கொண்டிருக்கின்றது. அந்த வறட்சியால் விவசாயிகள் மகசூல் பாதிக்கப்பட்டு, அந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கவேண்டும் என்ற அடிப்படையிலே, மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்தோம். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நானே நேரிலே சந்தித்து ரூ.39,565 கோடி எங்களுக்கு வழங்க வேண்டுமென்று Memorandum கொடுத்தோம். வறட்சியில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்குவதற்காக ரூ.2,247 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்த தொகையெல்லாம் வங்கியின் மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதோடு, புதியதாக பயிர் செய்த விவசாயிகளுக்கும் பயிர்க்கடனும் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல, நீர்நிலைகளில் இருக்கின்ற நீரை சேமித்து வைக்க வேண்டும் என்பதற்காக குடிமராமத்து திட்டத்தை தமிழகத்திலே துவங்கி, அதற்கு ரூ.100 கோடி முதற்கட்டமாக ஒதுக்கி, 1,519 ஏரிகள் இப்பொழுது தூர்வாரப்பட்டு வருகின்றன. மேலும், இந்தத் திட்டம் விரிவுபடுத்துவதற்காக ரூ.300 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்பட்டு வருகின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன். இங்கே விவசாயிகளினுடைய பிரதிநிதிகள், அதனுடைய தலைவர்

மரியாதைக்குரிய அய்யாக்கண்ணு அவர்கள் வைத்த கோரிக்கையை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடத்திலே வலியுறுத்தி கூறப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே 41 நாட்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்ற தமிழக விவசாய பிரதிநிதிகள் தங்களுடைய உண்ணாவிரதத்தை முடித்து, போராட்டத்தை கைவிட்டு, அங்கே தமிழகத்திற்கு திரும்ப வேண்டும் என்று அன்போடு அவர்களை கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி, வணக்கம்.

◈◈◈

புது டில்லியில் 23.04.2017 அன்று நடைபெற்ற நித்தி ஆயோகின்
**(NITI Aayog)** மூன்றாம் ஆளுமை குழுக் கூட்டத்தில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை.

# நாட்டின் வளர்ச்சி, மாநிலங்களின் நிதி தன்னாட்சியில் மாநிலங்களுக்கு அதிக பங்களிப்பு இருக்க வேண்டும்!




**மா**ண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களே,

மாண்புமிகு மத்திய அமைச்சர்களே,

மாண்புமிகு முதலமைச்சர்களே மற்றும்
துணைநிலை ஆளுநர்களே,

நித்தி ஆயோகின் துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களே,

மூத்த அதிகாரிகளே,

வணக்கம்.

✶ தமிழக மக்களின் நெஞ்சங்களில் என்றும் நிறைந்திருக்கும் மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய நல்வழியைப் பின்பற்றி, வளர்ச்சிப் பாதையில் பீடு நடை போட்டுக் கொண்டிருக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில், நித்தி ஆயோகின் மூன்றாம் ஆளுமை குழுக் கூட்டத்தில் (Governing Council) உரையாற்றுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

✶ நித்தி ஆயோகின் ஆளுமை கூட்டமானது, கடந்த ஈராண்டுப் பணிகளை ஆய்வு செய்வதற்காக நடத்தப்பெற்றாலும், இக்கூட்டம் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு மாற்றாகத் திகழப்போகும் மாற்றுத்திட்டத்தின் ‘நோக்கம், உத்தி மற்றும் செயல் ஆவணங்களின் வரையறைகள் குறித்து விவாதிப்பது தான் முக்கிய நோக்கமாகும். நித்தி ஆயோகால் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் தயாரிக்கப்பட்ட அறிக்கைகள், இக்குழுவின் நோக்கம், உத்தி மற்றும் செயல் ஆவணங்களின் வரைவுகளைத் தயாரிப்பதில் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை.

✶ திட்டமிடப்பட்ட செலவினத்திற்கும் திட்டம் சாராச் செலவினத்திற்கும் இடையேயிருக்கும் செயற்கையான வேறுபாட்டைக் களைவதற்காகக் குரல் கொடுத்த மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்பதால், ஐந்தாண்டுத் திட்டங்களை நீக்கியதற்கு தமிழக அரசு ஆதரவு தெரிவிக்கின்றது. இருப்பினும், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு தடை ஏற்படுத்தும் முக்கிய விவகாரங்களைக் கருத்தில் கொண்டு, அவற்றை எதிர்கொள்ளவும் அவற்றுக்குத் தீர்வு காணும் வழிகளைக் கண்டறியவும்,

மத்திய மற்றும் மாநில அரசுகளின் ஒருமித்த இசைவோடு குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் எய்தவேண்டிய நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் குறித்து, தெளிவான திட்ட வரையறை ஒன்றைத் தயாரிப்பதற்கான ஒரு வலுவான காரணம் இருப்பதை நித்தி ஆயோக் உருவாக்கப்பட்டபோதே நாங்கள் வலியுறுத்தினோம். இதற்கு நீண்டகால உத்தி சார்ந்த பார்வை மற்றும் நடுத்தர காலப் பார்வை ஆகிய இரண்டும் தேவைப்படுகின்றன.

✶ தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் **2011**ஆம் ஆண்டு மே மாதத்தில் பதவியேற்ற பின்னர், 'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் **2023**' குறித்த அறிக்கையின் வரைவைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் உடனடியாகத் தொடங்கப்பட்டு, **24.03.2012** அன்று அத்திட்ட அறிக்கை வெளியிடப்பட்டது. இவ்வறிக்கை, "முன்னோக்குத் திட்டம்" (Perspective Plan) தயாரிப்பதற்கு சிறந்த மாதிரியாக விளங்குகிறது.

✶ தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் **2023**இன் இலக்குகள் மற்றும் கருப்பொருள்கள், வளமான வேலைவாய்ப்பினை உருவாக்குவதன் வாயிலாக வருமானத்தைப் பெருமளவில் அதிகரித்தல், உயர்ந்த தரத்திலான உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளுக்கு வகைசெய்வதன் வாயிலாக வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், மாநிலம் முன்மாதிரியான அனுகூலத்தைப் பெற்றுள்ள துறைகளின் வளர்ச்சியில் கவனம் செலுத்துதல், இவை அனைத்திற்கும் மேலாக, அமைதி, வளமை மற்றும் நலிந்தோரின் பாதுகாப்பு ஆகியவற்றை அதிகரித்தல் உட்பட, மக்களின் வாழ்வில் நேரடியாகத் முன்னேற்றம் ஏற்படுத்துகிற வகையில் மிகவும் கவனத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

* தமிழக மக்களின் நியாயமான விருப்பங்கள் முறையாக உரியவாறு அங்கீகரிக்கபட்டுள்ளனவா என்பதை உறுதி செய்வதற்கும், அவற்றை நிறைவேற்றுவதற்கும் நீண்டகால இலக்குகள் திட்டமிடப்பட்டுள்ளன. வளர்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவை அனைவருக்கும் பயன்படுகின்ற முறையில் எய்தப்பட வேண்டும்.

* தமிழ்நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் உலகத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு வகை செய்வதே, தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023இன் முக்கிய நோக்கமாகும். இரண்டு முக்கிய காரணங்களின் அடிப்படையில், உட்கட்டமைப்பின் மீதான முக்கியத்துவம் இங்கு அவசியமாகியுள்ளது. உட்கட்டமைப்பு மேம்பாடானது அதிக அளவிலான முதலீட்டை ஈர்த்து, அதிக அளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அதன் வாயிலாக பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கச் செய்வது. மேலும், மிக முக்கியமாக, அனைத்துத் துறைகளிலும் பொருளாதாரம் மற்றும் சமுதாய வளர்ச்சிக்கு ஊக்கம் அளிப்பதன் வாயிலாக உட்கட்டமைப்பு மேம்பாடுகள் பொருளாதாரத்தில் மிகப்பெரிய அளவிலான ஆதாயமிக்க வெளிச்சூழல்களை உருவாக்குகிறது.

* அத்தகைய குறிக்கோள் சார்ந்த வளர்ச்சி விகிதங்களை எய்துவதற்கு புதிய முறைகள் ஒரு திறவுகோலாக அமையும் என்பதையும் கவனத்தில் கொண்டு, நாட்டின் “அறிவுசார் தலைநகரமாக” மற்றும் “புத்தாக்க” மையமாக தமிழ்நாட்டை மென்மேலும் உருவாக்குவதற்கு, இத்தொலைநோக்குத் திட்டம் வகை செய்கிறது. புதுமைகளுக்கும் அறிவூட்டங்களுக்கும் வகைசெய்கிற உரிய சுற்றுச்சூழலை உருவாக்குவதும் அதனை ஊக்குவிப்பதும் இதற்கு அவசியமாகிறது.

* "இந்திய தொலைநோக்குத் திட்டம் 2030"–க்கான ஆவணத்தைத் தயாரிக்கும்போது, தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டத்தின் I மற்றும் IIஆம் பகுதிகளையும் ஆய்வு செய்யுமாறு நித்தி ஆயோக் (NITI Aayog)–கிற்கு நான் பரிந்துரை செய்கிறேன். இத்தொலைநோக்குத் திட்டத்தை உத்தியுடன் இணைப்பதற்காக எடுத்துரைக்கப்பட்ட அடிப்படைக் கருத்துக்கள் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் தேசிய அளவில் எளிதாக எதிரொலிக்கக் கூடியது.

* இந்தியாவிற்கான எங்கள் தொலைநோக்குப் பார்வையானது, தமிழ்நாடு தொலைநோக்குப் பார்வைக்கு ஒத்ததாகவே உள்ளது. 2030ஆம் ஆண்டுக்குள், வறுமை மற்றும் இல்லாமையை ஒழித்து, உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடாக இந்தியாவைக் காண நாங்கள் விழைகிறோம். நம் நாடு, வளர்ச்சி மற்றும் பொருளாதார வெற்றியின் பலன்கள் அனைத்துப் பகுதிகளுக்கும், அனைத்து சமூக–பொருளாதார பிரிவினருக்கும் கிடைக்கும் வண்ணம், உயர் நடுத்தர பொருளாதார நிலையை (Uppere middle income) அடைய வேண்டும். 2030 இல், தனி நபர் வருமானம் ரூபாய் 10,00,000 (USD 15,000) (இன்றைய விலையில்) என்கிற அளவினை எய்துவதற்கு நாம் முயல வேண்டும். இந்த இலக்கினை அடைவதற்காக, நமது வளர்ச்சி வீதத்தை இரட்டை இலக்கத்தில் உயர்த்தி, அடுத்த 15 ஆண்டுகளுக்கு இந்த வளர்ச்சிப் பாதையை நீடித்து தக்க வைத்துக் கொள்ளவேண்டும். நாம், இந்த இலக்கை நிச்சயமாக எய்த முடியும் என்று நம்புகிறேன்.

* அறிவார்ந்த மற்றும் திறமையான மனித வளங்களைக் கொண்ட உலக மையமாக இந்தியா திகழ வேண்டும் என்பதையும், புதிய முயற்சிகள் மற்றும் நிறுவனத்திற்கான ஊற்றாக உலக அளவில் மீண்டும் புத்துயிர் பெறவேண்டும்

என்பதையும் நான் எதிர்பார்க்கிறேன். பாதுகாப்பை உறுதி செய்வதுடன் தனது குடிமக்களின் நலனுக்காகவும் ஒட்டுமொத்த மனித குலத்திற்கான புவியியல்–அரசியல் மற்றும் பொருளாதார பேச்சுவார்த்தைகளை நெறிப்படுத்தி உலக அரங்கில் முதன்மை நாடாக இந்தியா வளர்ந்து வருவதை நான் காண்கிறேன்.

✶ இந்த குறிக்கோள் சார்ந்த தொலைநோக்குத் திட்டத்தினை நான் முன்மொழியும் பொழுது, நாம் சந்திக்கவுள்ள சவால்களையும் நான் அறிவேன். இருப்பினும், இது தொடர்புடைய அனைத்துப் பொறுப்பாளர்களையும் ஒருங்கிணைத்து ஈடுபடுத்துவதன் வாயிலாக இதனை சாதிக்க இயலும் என்று நான் நம்புகிறேன். மாநிலங்கள் தங்களுக்காக பட்டியலிட்டிருக்கும் வளர்ச்சி உத்திகளை செயல்படுத்துவதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துவதில் இந்திய அரசு, மாநில அரசுகளுடன் நெருக்கமாக பணியாற்ற வேண்டும். இந்திய அரசு "அனைவருக்கும் ஒரே அளவு" (one size fits all) மாதிரியை தொடர்ந்து பின்பற்றாமல் மாநிலங்கள், அவற்றின் அதிகார வரம்பிற்குக் கீழுள்ள முன்னுரிமைகளுக்கேற்பத் திட்டமிடவும், நிருவகிக்கவும் அவற்றை அனுமதிக்க வேண்டும். இந்தத் தொலைநோக்கம், உத்தி மற்றும் செயல் திட்ட ஆவணங்கள், அவற்றின் பெரிய நடுத்தர அளவிலான திட்டங்களை மேம்படுத்துவதற்குப் போதிய வழிவகைகளை செய்ய வேண்டும். "தமிழ்நாடு தொலை நோக்குத் திட்டம் 2023"யே பின்பற்ற தமிழ்நாடு விழைகிறது.

✶ இந்த உத்திமுறை சார்ந்த ஆவணத்தில், முயற்சி மேற்கொள்வதற்காக, கொள்கை ஒருங்கிணைப்பு எவ்வாறு எய்தப்பட வேண்டும், வள ஆதாரங்கள் எவ்வாறு திரட்டப்பட வேண்டும் மற்றும் நீண்டகால இலக்குகளை எய்துவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்புகள் எவ்வாறு செயல்படுத்தப்பட வேண்டும் என்பவை குறித்து வலியுறுத்தப்பட வேண்டும்.

எனவே திட்டங்கள், முதலீட்டில் மட்டுமே கவனம் செலுத்தாமல், துறை சார்ந்த இலக்குகளை அடைவதில், தனியார் துறை பங்கேற்பாளர்கள், பொருளாதார வளர்ச்சியில் அவர்களின் பங்களிப்பை வழங்குவதற்கான கொள்கை நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்த வேண்டும்.

★ நித்தி ஆயோகின் இந்த செயல்பாடானது, 'நீடித்த வளர்ச்சி இலக்குகளை' (Sustainable Development Goals) நிலைநாட்டுவதற்கு ஐக்கிய நாடுகளின் (United Nations) முயற்சிகளுடன் ஒத்து இருக்க வேண்டும். இதனை, 2015ஆம் ஆண்டிற்குள் எய்துவதற்காக அமைக்கப்பட்ட ஆயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகளுக்கு (Millenium Development Goals) பதிலாக, 2030ஆம் ஆண்டிற்குள் எய்த வேண்டும். ஆயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகளின் கீழ் இந்தியாவின் செயல்பாட்டில், குறிப்பாக தமிழ்நாட்டின் செயல்பாடு மிகுந்த பாராட்டுக்குரியது. எனவே, தொலைநோக்குத் திட்டத்திற்கான வளர்ச்சியைக் கண்டறிந்து, அளவிடுவதற்கான கட்டமைப்பின் அடிப்படையிலான நீடித்த வளர்ச்சி இலக்குகளைப் பின்பற்றுவதை நான் வரவேற்கிறேன்.

★ தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் முயற்சிகளுக்கேற்ப கட்டமைப்பு அடிப்படையிலான நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கீழ் 17 இலக்குகள் மற்றும் 169 குறிக்கோள்களை செயல்படுத்துவதற்கான நடைமுறைகளை, தமிழ்நாடு அரசு ஏற்கெனவே துவக்கியுள்ளது. இந்தக் கட்டமைப்பு மூலம் பரிந்துரைக்கப்பட்ட இலக்குகளில் பலவும் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023இல் குறிப்பிடப்பட்டு ஏற்கெனவே முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். ஐக்கிய நாடுகளால் குறிப்பிடப்பட்ட காலவரையறைக்கு முன்பாகவே, மாநிலத்திற்கான இத்தகைய இலக்குகளை அடைவதற்கு என்னுடைய தலைமையிலான அரசானது

உறுதி பூண்டுள்ளது. நீடித்த வளர்ச்சிகளின் இலக்குகளை அடைவதில் கண்டறியப்பட்ட இடைவெளிகளை நிரப்புவதற்கு தேவைப்படும் திட்டங்களுக்கு நித்தி ஆயோக் மற்றும் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என நான் உறுதியாக வலியுறுத்துகிறேன்.

- ✶ குறிப்பிடப்பட்ட காலவரையறைக்குள், நாடு முழுவதற்குமான தற்போதைய நீடித்த வளர்ச்சி இலக்குகள் தொடர்பான தரவுகளை (Data) சேகரிப்பதற்கும், தொகுப்பதற்கும், ஆய்வு செய்வதற்கும், ஒருங்கிணைந்த தரவு மேலாண்மை ஏற்பாட்டு முறை ஒன்றை, நித்தி ஆயோக் மற்றும் மத்திய அரசு அமைக்க வேண்டும். இந்த நோக்கத்திற்காக, திட்டவட்டமான குறியீடுகள் கூடிய விரைவில் உருவாக்கப்பட்டு, மாநிலங்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

- ✶ இந்திய தொலைநோக்குத் திட்டம் தயாரிக்கப்படும் போது துறைவாரியாகச் செயல் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் என நித்தி ஆயோக் அமைப்பை நான் வலியுறுத்துகிறேன். பெரிய அளவிலான பணியாக இது இருப்பதால், தொடக்கத்தில் கல்வி, சுகாதாரம், வேளாண்மை, உட்கட்டமைப்பு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகிய சில முக்கிய துறைகளில் கவனம் செலுத்தப்படவேண்டும்.

- ✶ தொலைநோக்குத் திட்டம், உத்தி, செயல்திட்ட ஆவணங்கள் ஆகியவற்றைத் தயாரித்தல் குறித்து நித்தி ஆயோக், மாநிலங்களுடன் விரிவான கலந்தாலோசனையில் ஈடுபட்டுள்ளது என நிகழ்ச்சி நிரல் தெரிவிக்கிறது. தொலைநோக்குத் திட்டத்தை செயல்படுத்துவதில் ஒட்டுமொத்த அணுகுமுறை குறித்த கருத்துகளை தமிழ்நாடு அரசு அளித்துள்ளபோது, சில துறைகளுக்கு மட்டுமே துறைவாரியான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

* வருங்காலங்களில் உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இந்தியா உருவாக இருப்பதால், அதற்குத் தேவைப்படும் உணவை வேறு எந்தவொரு நாடும் உற்பத்தி செய்ய இயலாததால், இந்திய வேளாண்துறை தொடர்ந்து முக்கியத்துவம் பெருகிறது. உழவர்களின் வருமானத்தை மேம்படுத்துவதே நாட்டின் முக்கியமான பொருளாதார உத்தியாக இருக்க வேண்டும்.

* உழவர்களுக்கு மறுபயிற்சி அளித்தல், நவீன வேளாண் தொழில்நுட்பப் பயன்பாட்டினை ஊக்குவித்தல், பலதரப்பட்ட வேளாண் நடைமுறைக்கு ஆதரவளித்தல் மற்றும் பாசன உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் போன்றவை இத்தகைய சவால்களை எதிர்கொள்வதற்கு உதவக்கூடிய சில நடவடிக்கைகளாகும்.

* இந்தக் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலானது, வேளாண் துறையில் இரு குறிப்பிட்ட திட்டங்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கிறது. அவையாவன,

* வேளாண் வளர்ச்சி குறித்த சிறப்பு பணிக் குழுவின் அறிக்கை மற்றும் ‘உழவர் வருமானத்தை இரட்டிப்பாக்குதல்’ குறித்த அறிக்கை. கடந்த பல ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு தமிழ்நாடு கடும் வறட்சியினால் பாதிக்கப்பட்டு உள்ளது. 2016ஆம் ஆண்டு, வடகிழக்கு பருவ காலத்தின் மழைப்பொழிவு 62 சதவீதம் குறைந்தது. இதன் காரணமாக, தமிழ்நாடு வரலாறு காணாத கடும் வறட்சியை எதிர் நோக்குகின்றது. இதனால், இம்மாநில உழவர்கள் வேதனையில் உள்ளனர். உழவர்களின் பிரதிநிதிகள் புது தில்லியில் கூட அவர்களுடைய குறைகளுக்காக குரல் கொடுத்து வருகின்றனர். நியாயமான குறைகளுக்கு, இந்திய அரசு செவி சாய்க்க வேண்டியது அவசியமானது.

* தமிழ்நாடு, பாசனம் மற்றும் குடிநீர் வழங்கலுக்கான நீர்த்தேவையை நிறைவு செய்வதற்கு, மாநிலங்களுக்கிடையேயான ஆறுகளை, குறிப்பாக, காவேரி ஆற்றை சார்ந்துள்ளது. காவேரி நீர் விவகாரங்கள் தீர்ப்பாயத்தின் இறுதி ஆணையைச் செயல்படுத்துவதற்காக காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீரை முறைப்படுத்தும் குழுவினை உடனடியாக அமைப்பதற்கான கோரிக்கையை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

* நம் நாட்டிலுள்ள நீர் வளங்களை சரியான மற்றும் சமமான முறையில் பகிர்ந்து கொள்வதை உறுதி செய்வதற்கான நீண்ட காலத் தீர்வு என்பது ஆறுகளை ஒன்றிணைப்பதேயாகும். தீபகற்ப ஆறுகள் மேம்பாட்டு ஆக்கக்கூறுகளின் கீழ், நம் மதிப்பிற்குரிய தலைவி, மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, பாலாறு, காவிரி, வைகை மற்றும் குண்டாறு ஆகிய ஆறுகளை ஒருங்கிணைப்பதற்கு இந்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள். மேலும், மேற்கு நோக்கி பாயக்கூடிய பம்பை மற்றும் அச்சன்கோவில் ஆறுகளின் உபரி நீரை வைப்பாறுக்கு திருப்பி விடுவதற்கும் வலியுறுத்தி வந்தார்கள். 27.02.2012ஆம் நாளிட்ட உச்ச நீதிமன்ற ஆணையின் அடிப்படையில், எங்களின் தொடர்ச்சியான வேண்டுகோள் என்னவென்றால், ஆறுகளை ஒருங்கிணைப்பதற்காக இந்திய அரசால் அமைக்கப்பட்ட சிறப்புக் குழு, இன்னும் சிறந்த முறையில் முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்பதேயாகும். மாநிலங்களுக்கிடையேயான அனைத்து ஆறுகளும் தேசியமயமாக்கப்பட வேண்டும் என்ற எங்களுடைய மதிப்பிற்குரிய தலைவி மறைந்த புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நியாயமான மற்றும் முறையான கோரிக்கையை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். இதன் மூலம், நாட்டின் நீர் வள ஆதாரங்கள் உரிய முறையில் பயன்படுத்தப்படும்.

- பயிர் சாகுபடி, தோட்டக்கலை, கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளம் உள்ளிட்ட துணை செயல்பாடுகளிலிருந்தும் வருமானங்களை அதிகரிக்கின்ற கூட்டு நடவடிக்கைகள் வாயிலாக உழவர்களின் வருமானங்களை இரு மடங்காக அதிகரிக்கும் இலக்கினை எய்த முடியும். இந்திய அரசினால் வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த துறைகளுக்கு, குறிப்பாக, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்திற்கான நிதி ஒதுக்கீடு கணிசமாகக் குறைந்துள்ளது. தமிழ்நாடு அரசு, பண்ணை வருவாய்களை பெருக்குவதற்கு விலையில்லா கறவை மாடுகள், வெள்ளாடுகள் மற்றும் ஆடுகள் வழங்குவதன் வாயிலாக கால்நடைப் பராமரிப்பினை மேம்படுத்த எண்ணற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கால்நடைப் பராமரிப்பு உட்கட்டமைப்பினை மேம்படுத்த கடந்த 6 ஆண்டுகளாக சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. தரிசு நில உழவர்களின் வருவாயை நிலைப்படுத்த தரிசு நில வேளாண் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. தோட்டக்கலைப் பயிர்களுக்கு உதவுவதன் மூலம் பலவகை பயிர்கள் ஊக்குவிக்கப்படுகிறது. உழவு உற்பத்தியாளர்கள் அமைப்புகளுக்கு அடிப்படையாக உள்ள சுழற்சி வழங்கல் மேலாண்மை சந்தை ஒருங்கிணைப்பு மற்றும் உழவு உற்பத்தியாளர்கள் குழுக்களுக்கு ஆதரவு ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசு வேளாண்–செய்முறைத் தொகுப்புகள் மற்றும் தொழில் பிரிவுகள் மேம்படுத்துவதற்கான திட்டத்தினை மீண்டும் செயல்படுத்த வேண்டும். இத்தகைய நடவடிக்கைகள் உழவர்களின் வருவாயை அதிகரிப்பதுடன் பண்ணைச் செயல்பாடுகளை நீண்டகாலத்திற்கு நிலைத்திட செய்யும்.

- இந்த வறட்சி ஆண்டில், உழவர்களின் நடப்பு வருவாய் அளவாவது பாதுகாக்கப்படுகிறது என்பதை உறுதி செய்வதற்கேனும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும், இதற்கு வேளாண் காப்பீடு உதவியாக இருக்க வேண்டும். பிரதம

மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டத்தை மேம்படுத்துவதற்காக ரபி பருவத்தில், 15 இலட்சம் விவசாயிகள் 30 இலட்சம் ஏக்கர் பரப்பளவின் பயிர்களை பதிவு செய்துள்ளனர். 2017 ஆம் ஆண்டின் நடவுப்பணிகளை அவர்கள் மேற்கொள்ளும் பொருட்டு ஏற்கெனவே பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு காப்பீட்டு தொகையை விரைவாக வழங்க மாநில அரசு அனைத்து பொறுப்பாளர்களுடன் ஒருங்கிணைந்து செயலாற்றி வருகிறது. பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் உழவர்களிடையே நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில், வழிகாட்டிக் குறிப்புகளின்படி பயிர் அறுவடைப் பரிசோதனைகளினடிப்படையில், விளைச்சல் குறித்த தரவு பெறப்பட்ட 3 வார காலங்களுக்குள், 2016–2017ஆம் ஆண்டிற்கான காப்புறுதிக் கோரிக்கைகள், காப்புறுதி நிறுவனங்களால் தீர்வு காணப்பட வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். தேவையான தகவல் அளிக்கப்பட்டுள்ளதால் 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முடிவடைவதற்கு முன்னர் தமிழ்நாட்டிலுள்ள உழவர்களுக்கு 2016–2017ஆம் ஆண்டிற்கான சம்பா பருவகாலத்திற்கான காப்புறுதி இழப்பீட்டுத் தொகையை வழங்கிட காப்பீட்டு நிறுவனங்களுக்கு உடனடியாக உத்தரவிட வேண்டும்.

✶ தற்போது தமிழ்நாட்டில் பாக் நீரிணைப்பு நெடுகிலும் உள்ள மீனவர்கள் அதிக பாதிப்பிற்கு உள்ளாகிறார்கள். கடலை நம்பி வாழ்கிற இவர்களுடைய வாழ்வாதாரம் இலங்கை கடற்படையினரின் தீவிரமான நடவடிக்கைகளினால் மீண்டும் மீண்டும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளது. பாக் நீரிணைப்பிலுள்ள இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், அவர்களுடைய பாதுகாப்பு உறுதி செய்யப்படவேண்டும் என்றும் நான் வலியுறுத்துகிறேன். கைப்பற்றப்பட்ட மீன்பிடி படகுகளை நீண்டகாலமாக விடுவிக்காமலிருப்பது மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கச் செய்து,

அவர்களுடைய மிகவும் முக்கியமான உடைமையை மீட்க இயலாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை அரசால் பிடித்து வைக்கப்பட்டுள்ள 133 படகுகளை சீரமைக்கப்பட்ட நிலையில் உடனடியாக விடுவிக்குமாறு மத்திய அரசிடம் நான் ஆணித்தரமாக வலியுறுத்துகிறேன். இந்த நீண்டகால பிரச்சினைக்குரிய நிரந்தரத் தீர்வு கட்சத்தீவை மீட்பது தான். மீன்வளத்தை பல்திறப்படுத்துவதற்கான (Diversification) விரிவான தொகுப்புதவித் திட்டத்திற்கு விரைவில் அனுமதி அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் நான் வலியுறுத்துகிறேன். பாக் நீரிணைப்பில் உள்ள அசாதாரண சூழ்நிலையை எளிதாக்குவதற்கான வழி சாதாரண மீன்பிடி இழுவை படகுகளை ஆழ்கடல் டூனா மீன்பிடி நீராவிக் கப்பல்களாக மாற்றுவது ஆகும்.

- ✶ அதிக எண்ணிக்கையில் வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கு உற்பத்தித் துறையின் பங்கினை அதிகரிப்பது என்பது காலத்தால் உறுதிசெய்யப்பட்ட ஓர் உத்தியாகும். பல்வேறு உற்பத்திப் பொருட்களுக்கு ஒருங்கிணைந்த உலகளாவிய மற்றும் வட்டார மதிப்பினை உருவாக்குவதற்காக வணிகர்களுடன் மத்திய அரசு நெருக்கமாக ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும். அதன் மூலம் இந்தியாவை உற்பத்தித் துறையில், உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தைகளாக உருவாக்க இயலும்.

- ✶ உட்கட்டமைப்பு உருவாக்கம் மற்றும் அவற்றின் நீடிப்புத்தன்மை, பொருளாதார முன்னேற்றத்திற்கு மிகவும் இன்றியமையாததாகும். இரயில்வே, சாலைகள், விமானநிலையங்கள், துறைமுகங்கள், நீர்வழிகள் மற்றும் மின்சக்தி போன்ற பன்னாட்டு உட்கட்டமைப்பு திட்டங்களில் முதலீட்டிற்கு மத்திய அரசு மிகுந்த முக்கியத்துவம் அளிக்குமேயானால் அது, மாநிலங்களும் தனியார் துறையும் செயல்படுத்தி வருகிற திட்டங்களுக்கு சரியான

தூண்டுதலை அளிக்கும். மாநிலங்கள் தங்கள் பங்கிற்கு பணியாக, கிராமங்கள் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் வாழும் மக்களுக்கு உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித்தர பாடுபட வேண்டும்.

✶ இந்தியாவின் மிகப்பெரிய பலம் அதனுடைய மனித வளமாகும். சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய துறைகளை எடுத்துக்கொண்டால் நமது மக்கள், உலகத் தரம்வாய்ந்த சேவைகளை பெறும் வகையில் சிறந்த சேவைகளை வழங்குவது மத்திய, மாநில அரசுகளின் கடமையாகவும் உள்ளது.

✶ சுகாதாரத் துறையில் மாநில அரசின் செயல்பாடுகள் இத்துறைக்கான "வரைவு தொலைநோக்குத் திட்டத்தில்" கோரப்பட்டன. அனைவருக்கும் சுகாதார பாதுகாப்பை வழங்கும் ஒட்டுமொத்த நோக்கம் பெரிதும் பாராட்டப்படக்கூடியது என்றாலும், வரைவு தொலைநோக்குத் திட்டத்தில் சில பிரச்சினைகளும் உள்ளன. அவற்றை எடுத்துக்கூற வேண்டியுள்ளது. சுகாதாரத் துறையில்,
மத்திய மற்றும் மாநில அரசுகள் இரண்டுமே திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருப்பதால் தான், நாட்டில் குறைவான சுகாதார பாதுகாப்பு முறைகளுக்கு வழிவகுத்திருப்பதாக ஒரு தவறான கருத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது. உண்மையில், சுகாதாரத் துறையில் ஒருங்கிணைந்த முறையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதால் தான், தமிழ்நாடு போன்ற சில மாநிலங்களில், இத்துறைக்கு முன்னுரிமை அளித்து வலுவான பொது சுகாதார அமைப்புகளை உருவாக்க முடிந்தது. மத்திய அரசின் தற்போதைய அணுகுமுறையானது, அரசின் பங்கை இனி வருங்காலங்களில் சுகாதாரத் துறையை வரன்முறைபடுத்துவதும், சேவைகளை காப்பீடுகளின் வாயிலாக கொள்முதல் செய்வதை அதிகரிப்பதாக உள்ளது. பொது சுகாதாரத் துறை மற்றும் தனியார் சுகாதாரத் துறைகள்

சமமான போட்டியாளர்களாக சுகாதார சேவைகளை வழங்க வழிவகை செய்யப்படுகின்றது. தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் போன்ற அரசால் செயல்படுத்தப்படும் சுகாதார காப்பீட்டுத் திட்டங்கள் முக்கியமாக இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை உள்நோயாளிப் பிரிவுகளுக்கு நல்ல பயனளிக்கிறது. இந்த பொது சுகாதார அமைப்புமுறைகள் தொடர்ந்து செயல்பாட்டில் இருப்பதால் சுகாதார சேவைகளின் விலை கட்டுப்பாட்டில் வைக்கப்படுவதுடன், மிகவும் நலிவுற்றோருக்கும் சுகாதார சேவைகள் கிடைப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஊரக மற்றும் புறநகர் பகுதிகளில் ஆரம்ப சுகாதாரம் மற்றும் புற நோயாளிகளுக்கான சேவைகள் தற்போது முழுமையாக அனைத்துப் பகுதிகளிலும் பொது சுகாதாரத் துறையின் வாயிலாக செயல்படுத்தப்படுகிறது. அனைவருக்கும் சுகாதார பாதுகாப்பு எனும் நோக்கத்தை தமிழ்நாட்டில் எய்துவதற்கு தற்போது செயல்பாட்டிலுள்ள பொது சுகாதார அமைப்பை வலுப்படுத்தி, எங்கெல்லாம் பற்றாக்குறை உள்ளதோ, அவற்றை மட்டும் தனியார் மூலம் நிவர்த்தி செய்வது சால சிறந்ததாகும் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

- கல்வியைப் பொறுத்தமட்டில், தற்போதுள்ள அனைவரையும் உள்ளடக்கிய,சமஉரிமைகளைஉறுதிசெய்யும்எல்லோருக்கும் கல்வி உலகமயமாக்கல் மற்றும் மாநில மொழி மற்றும் பண்பாட்டை பாதுகாக்கும் கொள்கைகளைக் கொண்டுள்ள தற்போதைய கல்விக் கொள்கையை பாதுகாக்க வேண்டியது அவசியம் என்று தமிழ்நாடு அரசு உறுதியாக நம்புகிறது. இச்சூழலில், நீட் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டிருப்பது மாநிலத்தின் உரிமைகளுக்கு குந்தகம் விளைவிப்பதாக உள்ளது. தமிழகத்தில் நன்கு செயல்பட்டு வரும், தமிழ்நாடு அரசின் வெளிப்படையான மருத்துவக் கல்லூரிக்கான மாணவர் சேர்க்கை முறையின் மூலமாக பயனடைந்து வரும் தமிழ்நாடு மாணவர்களுக்கு, மாபெரும் அநீதி

இழைப்பதாகவும் இது அமைந்துள்ளது. தமிழ்நாடு அரசு மருத்துவ கல்லூரிகள் உட்பட தொழிற் பிரிவுகளில் சேர்க்கை நடைமுறையை முறைப்படுத்துவதற்காக **2005**ஆம் ஆண்டு முதல் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கவனமான பரிசீலனைக்குப் பின்னர் மாநிலத்திலுள்ள இளநிலை (தொழிற்கல்வி) பிரிவுகளில் **2006**ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்களின் சேர்க்கை சட்டத்தின் வாயிலாக நுழைவுத் தேர்வுகளை ரத்துசெய்தது. இது அரசமைப்பு சட்டத்தின் **254(2)**ஆம் பிரிவின் கீழ் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுள்ளது. உச்சநீதிமன்றம் வரையிலான சட்டப்பூர்வ சவால்களையும் எதிர்கொண்டு வெற்றிகண்டுள்ளது. தமிழ்நாட்டின் மாணவர் சேர்க்கை முறையானது குறிப்பாக, நலிவுற்ற பிரிவுகள் மற்றும் கிராமப்புறப் பகுதிகளிலிருந்து வரும் மாணவர்களின் நலனை பாதுகாக்கிறது. ஏனெனில், அத்தகைய மாணவர்களால் பொது நுழைவுத் தேர்வுகளில் நகர்ப்பகுதி உயர்பிரிவு மாணவர்களுடன் போட்டியிட இயலாது. பொது நுழைவுத் தேர்வை தடைசெய்யும் தமிழ்நாடு அரசின் முடிவினால் பெருவாரியான எண்ணிக்கையில், சமூகரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பின்தங்கிய, தகுதிவாய்ந்த கிராமப்புற மாணவர்கள் பயன் பெற்றிருக்கின்றனர். பட்டமேற்படிப்பு சேர்க்கையைப் பொறுத்தவரையில், ஊரகப் பகுதிகளில் பணியாற்றி வருபவர்களுக்கு, தமிழ்நாடு அரசு கூடுதல் முன்னுரிமை அளித்து வருகிறது மேலும், மலைப்பகுதிகள் மற்றும் பழங்குடியினர் பகுதிகளில் பணியாற்றியவர்களுக்கு கூடுதல் முன்னுரிமை அளித்து வருகிறது. “நீட்” தேர்வினை அறிமுகம் செய்வது இத்தகைய கொள்கை முயற்சிகள் செயல்படுத்தப்படுவதை பயனில்லாமல் செய்வதுடன், மேற்கொண்டு மாநிலத்தின் சமூக–பொருளாதார நோக்கங்களை வீணாக்கிவிடும். அரசு மருத்துவ மற்றும் பல்மருத்துவக் கல்லூரிகள் பட்டப்படிப்பு

மற்றும் பட்டமேற்படிப்புக்கான நடைமுறையிலுள்ள சேர்க்கை கொள்கையை பாதுகாப்பதற்கு, தமிழ்நாடு சட்டமன்றம் இரு சட்டமுன்வடிவுகளை அண்மையில் ஒருமனதாக நிறைவேற்றியது. இதற்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் **254(2)**ஆம் ஷரத்தின் கீழ், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவரின் அனுமதி வேண்டப்பட்டுள்ளது. மாநிலத்தில் அரசு மருத்துவக் கல்லூரிகள், பல்மருத்துவக் கல்லூரிகள் மற்றும் தனியார் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில், தற்போது நடைமுறையில் உள்ள நியாயமான மற்றும் வெளிப்படையான சேர்க்கை முறையை தொடர்வதற்கு ஏதுவாக இந்த இரு சட்ட முன்வடிவுகளுக்கு உடனடியாக ஏற்பளிக்குமாறு நான் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஒவ்வொரு மாநிலத்தில் நிலவும் சூழலை கருத்திற்கொள்ளாமல், பொறியியல் மற்றும் கால்நடை மருத்துவ அறிவியல் உள்ளிட்ட ஏனைய தொழிற்படிப்புகளுக்கு, பொது நுழைவுத் தேர்வினையும் கட்டாயமாக்க வேண்டாமென்றும் இந்திய அரசினை நான் வலியுறுத்துகிறேன்.

✶ நமது மனித வளத்தின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கும், கிராமங்களிலிருந்து வேலை வாய்ப்பைத் தேடி இடம்பெயர்கின்ற இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பினை உருவாக்கித் தரவேண்டிய அவசரத் தேவை எழுந்துள்ளது. திறன் மேம்பாட்டுத் துணைக் குழுவின் உறுப்பினர்களுள் தமிழக முதலமைச்சரும் ஒருவர். தமிழ்நாடு தெரிவித்த ஏராளமான முக்கிய கருத்துக்கள் துணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. திறன் மேம்பாட்டு திட்டங்களை மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் நேரடியாக செயல்படுத்துவதால், ஒவ்வொரு அரசின் பங்கினை தெளிவுபடுத்துவது இன்றியமையாதது என்ற கருத்தை தமிழ்நாடு அரசு குழுவின் முன் வைத்தது.

தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் போன்ற நிறுவனங்கள் (NSDC) பயிற்சி அளிப்பவர்களை நேரடியாக பணியமர்த்தி நிதியுதவி அளிக்கின்றன. மாநில அமைப்புகளும் இதே பணியை செயல்படுத்துகின்றன. இரண்டு அரசுகளின் இவ்வகையான செயல்பாட்டினால், இரட்டிப்பான முயற்சிகள், குறைவான மேற்பார்வை மற்றும் அதிக முதலீட்டு செலவுகள் ஆகியவற்றினை எதிர்கொள்ள நேரிடுகிறது. தேசிய திறன் மேம்பாட்டுக்கழகம் போன்ற மத்திய அரசின் அமைப்புகள், தேசிய அளவிலான நிலைப்படுத்தல், அங்கீகாரம், சான்றளிப்பு செயல்பாடுகள், நிதியளித்தல், கொள்கை மற்றும் கட்டமைப்புப் பணிகளை உருவாக்குதல் ஆகியவற்றில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும் என தமிழ்நாடு கருதுகிறது. திறன் மேம்பாட்டை நாடும் இளைஞர்களை கண்டறிந்து பயிற்சி அளிக்க மாநில அரசின் அமைப்புகள் மட்டுமே சிறந்த நிலையில் இருப்பதால் பயிற்சி அளிக்கும் பணி, அந்நிறுவனங்களுக்கே வழங்கப்பட வேண்டும். பிரதம மந்திரி கௌஷல் விகாஸ் திட்டத்தின் கீழ், ஒட்டு மொத்த பயிற்சியையும் மாநில அரசு அமைப்புகளால் மேற்கொள்ளப்பட வழிவகை செய்யப்பட வேண்டும். அதே போன்று, SANKALP திட்டத்தின் கீழ், பயிற்றுநர்கள் மேம்பாடு உட்பட திறன் வளர்ப்பு கட்டமைப்பினை வலுப்படுத்த தேவையான நிதியுதவி வழங்கப்பட வேண்டும்.

✶ மத்திய அரசு நிதி வழங்கும் திட்டங்களை முதலமைச்சரின் துணைக் குழுவின் அறிக்கை அடிப்படையாக கொண்டு சீரமைக்கப்பட்டன. இந்த சீரமைப்பு முறையானது, அதிகளவு தாராள நிதி விகிதாச்சாரம், ஆறு முக்கிய (Core to Core) திட்டங்களுக்கான நடைமுறையிலுள்ள நிதி பங்கீட்டு நடைமுறையை தொடர்தல் உட்பட பல நேர்மறை அம்சங்களை கொண்டுள்ளது. மத்திய அரசின் பங்கு, 50 சதவீதத்திற்கு குறையாமல் இருப்பதை உறுதி செய்கிறது. எனினும், பல பிரச்சினைகள் தொடர்கின்றன.

★ அனைத்து முக்கிய திட்டங்களுக்கான மாநில நிதிகளின் பங்குத் தொகை 40 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது ஒரு முக்கிய பிரச்சினையாகும். 14ஆவது நிதி ஆணையம், மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கை 42 சதவீதமாக உயர்த்தி வழங்கி உள்ளது இதற்கு முக்கியமான காரணம் என கூறப்படுகிறது. 14ஆவது நிதி ஆணையத்தின் பரிந்துரைகளால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட மாநிலமாக தமிழகம் உள்ளது. ஏனெனில், மாநிலங்களுக்கிடையேயான பங்கீட்டில், தமிழகத்தின் பங்கு ஏறத்தாழ 20 சதவீதம் வரையில் குறைக்கப்பட்டுள்ளது. அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய வரிவசூல் கூட்டப்பட்டபோதும், தமிழ்நாட்டிற்கு எவ்வித பயனும் இல்லை. பல்வேறு மத்திய வரிகள் மீது வரி மீது வரி மற்றும் மேல்வரிகள் விதிக்கின்ற போக்கு நிலைமையை மேலும் மோசமாக்கி உள்ளது. எனவே, மத்திய அரசால் நிதி வழங்கப்படும் திட்டங்களுக்கு மாநில அரசின் கூடுதல் பங்கான 40 சதவீதம் வழங்குவது, தமிழ்நாட்டிற்கு ஒரு சவாலாக உள்ளது.

★ சில முக்கிய திட்டங்களுக்கு மத்திய நிதிநிலை அறிக்கையில் குறைவாக நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது, மாநிலங்களின் இடர்களை அதிகப்படுத்தி உள்ளது. குறிப்பாக, அனைவருக்கும் கல்வி இயக்கம், தேசிய இடைநிலை கல்வி இயக்கம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்பிற்கு கல்வி உதவித்தொகை திட்டம் போன்ற திட்டங்களின்பால் உங்கள் கவனத்தை நான் ஈர்க்க விழைகிறேன்.

★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பினருக்கான மெட்ரிக் படிப்புக்கு பிந்தைய கல்வி உதவித் தொகை குறித்த நேர்வில், 2015–2016ஆம் ஆண்டு வரை இந்திய அரசால், வழங்கப்பட்ட நிதிகளுக்கான பயன்பாட்டு சான்றிதழ்களை தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

2015–2016ஆம் ஆண்டுக்கான நிலுவைத் தொகை ரூ.669.47 கோடியையும், 2016–2017ஆம் ஆண்டிற்கான கேட்புத் தொகை ரூ.1,882.04 கோடியையும் வேண்டி கோரிக்கை அளிக்கப்பட்டும், இத்தொகை சமூக நீதி மற்றும் மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தால் இதுவரை வழங்கப்படவில்லை. தமிழ்நாட்டின் கோரிக்கைகளை அமைச்சகம் ஏற்றுக் கொண்ட நிலையில், வரவு–செலவுத் திட்டத்தில் போதுமான ஒதுக்கீடுகள் இல்லாத காரணத்தினால் நிதி வழங்கப்படவில்லை. இப்பிரச்சினையின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, இத்திட்டத்திற்காக வரவு–செலவுத் திட்டத்தில் போதுமான ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டும் என்றும், மேலும் எவ்வித காலதாமதமுமின்றி மாநிலங்களுக்கு நிதிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். மெட்ரிக் படிப்புக்கு பிந்தைய கல்வி உதவித் தொகை திட்டத்திற்காக மத்திய அரசின் முழு அளவிலான தற்போதைய ஆதரவு 31.03.2017 அன்றுடன் முடிவடையும் 12ஆவது ஐந்தாண்டு திட்டக் காலத்திற்கு பின்னரும் பேணுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

✶ அனைவருக்கும் கல்வி மற்றும் இடைநிலை கல்வி திட்டத்தை குறித்த நேர்வில், மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் ஒப்புதல் அளிக்கப்பட்ட மத்திய வரவு செலவுத் திட்டத்தின் நிதிகளை குறைப்பதன் காரணமாக, அமைச்சகத்தினால் ஆண்டு செயல் திட்டங்களுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட அதன் நிதி பங்களிப்பை வழங்க இயலவில்லை. 31.03.2017 வரையிலான கால அளவிற்கான, இரண்டு திட்டங்களின் கீழ், ரூ.1,862.34 கோடி தமிழ்நாட்டிற்கு வழங்குவது நிலுவையாக உள்ளது. இதுபோன்ற கல்வித் திட்டங்களை செயல்படுத்துவதற்காக, கல்விக்கான மேல் வரியை மத்திய அரசு விதித்துள்ள போதிலும், இந்நிலை தொடர்ந்து வருத்தத்திற்குரியதாகும். ஒப்புக் கொள்ளப்பட்ட மத்திய நிதியுதவி பங்கினை வழங்காதது, மாநிலத்தின்

நிதி நிலையை மோசமாக பாதிப்பது மட்டுமன்றி, மிக முக்கியமான, சமூக முன்னேற்றத்திற்கான திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதில் சுணக்கத்தை ஏற்படுத்துகிறது. இதுபோன்ற பாதகமான செயல்பாடுகளால் தான், பல மாநிலங்களில் நிதி பற்றாக்குறை நிலவுகிறது.

✶ வேளாண்மை, ஊரக குடிநீர் வழங்கும் திட்டம் மற்றும் வறுமை ஒழிப்பு போன்றவை மத்திய அரசு நிதி வழங்கும் திட்டங்களில், முக்கிய திட்டங்களாகும். முன்னுரிமை அளிக்கப்படும் இத்துறைகளுக்கு, மிகச் சொற்ப அளவில் நிதி ஒதுக்கீடு செய்வது வருந்தத்தக்க ஒன்றாகும். எனவே, மத்திய அரசு நிதி வழங்கும் முன்னுரிமைத் திட்டங்களில், அதன் நீடித்த பயன்களை உறுதி செய்து, அதற்கேற்ப வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்வதை உறுதி செய்யப்பட வேண்டும்.

✶ மத்திய அரசு திட்டங்களை சீரமைக்கும்போது பல சிறிய திட்டங்கள் குறைந்த நிதி ஒதுக்கீடுடன், துணை திட்டங்களாக தொடர்வதால், தேசிய அளவில் எவ்வித பயனுமில்லை. அத்தகைய நேர்வுகளில், ஒதுக்கீடுகள் பயனுள்ள அளவிற்கு அதிகரிக்க வேண்டும் அல்லது துணைத் திட்டங்கள் கைவிடப்பட வேண்டும்.

✶ மிகவும் நலிவுற்றவர்களையும், ஏழைகளையும் அக்கறையுடன் பேணி காக்கும் கருணை தான் இந்தியாவை ஒரு மகத்தான நாடாக உயர்த்தும் ஒரு சிறந்த அடையாளம். எனவே, ஏழ்மை நிலையை அகற்றி நலிவுற்றோருக்கு சமூகப் பாதுகாப்பு வழங்குவதில் உலகத்திலேயே இந்தியாவை முதன்மையான நாடாக மாற்ற நாம் பாடுபடவேண்டும். தற்போது தேசிய அளவில், ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஒரு சில தெரிவு செய்யப்பட்ட ஒன்றியங்கள் மற்றும் நகரங்களில் தான் செயல்படுத்தப்படுகின்றன. மேலும், கிராம வறுமை ஒழிப்பு குழுக்களுக்கு வழங்கப்படும் நிதி வழங்கும் அளவுகோலும்

கணிசமாக மாறுபடுகிது. தமிழ்நாட்டில் மாநில நிதிகள் மற்றும் பன்னாட்டு நிதி உதவி மூலம் இத்திட்டங்களுக்கு கூடுதல் நிதி வழங்கப்படுகிறது. ஆகையால், தேசிய ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்கள் நாடு முழுவதும் செயல்படுத்துவதும், கூடுதல் நிதி ஒதுக்கீடு அளிப்பதும், வறுமை ஒழிப்பு முயற்சிக்கு இன்றியமையாததாகும்.

✶ இந்திய பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட மத்திய சரக்குகள் மற்றும் சேவைவரி, ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டுச் சட்டங்களின் மூலமாக மறைமுக வரிகளில் வரலாற்றுப் புரட்சி ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் சரக்கு மற்றும் சேவை வரிச்சட்ட வரைவு, விரைவில் மாநில சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்பட உள்ளது. சரக்கு மற்றும் சேவை வரியின் அறிமுகம், தமிழ்நாடு போன்ற நிகர ஏற்றுமதி மற்றும் உற்பத்தி மிகு மாநிலத்திற்கு, நிரந்தர வருவாய் இழப்பு ஏற்படுத்தும் எனவும் மாநிலத்தின் நிதி நிலையை வெகுவாக பாதிக்கும் என தமிழ்நாடு அரசு தொடர்ந்து தெரிவித்து வருகிறது. அரசியலமைப்பின் 101ஆவது திருத்தத்திற்குப் பின்னர் மாநிலங்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன என்பதை உறுதிசெய்ய சரக்கு மற்றும் சேவை வரி குழுவினோடு தமிழ்நாடு தொடர்ந்து முனைப்பாக பங்கேற்று வருகிறது. சரக்கு மற்றும் சேவை வரியின் குழுவிற்கான கூட்டங்களில் தமிழ்நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது, மகிழ்ச்சி அளிக்கிறது. எஞ்சியுள்ள விவகாரங்களும் இதே போன்று விட்டுக்கொடுத்து செயல்படுத்தப்படுவதை நான் வலியுறுத்துகிறேன்.

✶ சரக்கு மற்றும் சேவை வரியினை செயல்படுத்துவதனால் ஏற்படும் வருவாய் இழப்புகள், மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நிதி ஆதாரங்களை பாதிக்கக்கூடும் என சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாநிலங்கள், சரக்கு மற்றும்

சேவை வரியினை செயல்படுத்துவதில் ஏற்படக்கூடிய வருவாய் இழப்பிற்கான கட்டாய இழப்பீட்டை தவிர, நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையிலான நிதிப்பகிர்வாகவும், மத்திய அரசு திட்டங்களுக்கான மத்திய நிதி பங்கீடாகவும் நிதி பெறுகின்றன. சரக்கு மற்றும் சேவை வரி கட்டமைப்பிற்குள்ளாக மாநிலங்களின் இழப்பீட்டிற்கான நிதிகளின் அளவு, நிர்ணயிக்கப்பட்டதைவிட மிக அதிகமாக இருக்கக்கூடும். இத்தகைய சூழலில், ஒட்டுமொத்த நிதிகளின் பரிமாற்றத்தில் தொகையை குறைப்பது மாநிலங்களின் வளர்ச்சியை கடுமையாக பாதிக்குமென்பதால், சரக்கு மற்றும் சேவை வரி செயல்படுத்துவதற்காக மாநிலங்களுக்கு இழப்பீடு வழங்கும்போது, மத்திய அரசின் இதர நிதி பரிமாற்றங்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதை உறுதிசெய்யப்பட வேண்டும் என மத்தி அரசை வலியுறுத்துகிறேன்.

✶ நிருவாக வசதிக்காகவும் மக்களின் நலனை உறுதிசெய்வதற்காகவும் எண்மத் தொழில்நுட்பத்தை (Digital Technology) முழுமையாக பயன்படுத்த தமிழக அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மாநிலத்தில் 99 விழுக்காட்டிற்கு மேலான உரிய வயதடைந்த அனைவருக்கும் ஆதார் எண்கள் வழங்கப்பட்டுள்ளது. 0–5 வயது வரையிலான மாணவர்கள் மற்றும் குழந்தைகளின் பயோமெட்ரிக் கணக்கெடுக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இது விரைவில் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆதார் எண் இணைக்கப்பட்ட குடும்ப அட்டைகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. முதியோர் ஓய்வூதியம், தொழிலாளர் நலன், நில பதிவுருக்கல் மற்றும் உதவித் தொகைகள் உள்ளிட்ட மக்கள் தொகை தரவுதளங்களும், ஆதார் எண்களுடன் இணைக்கப்பட்டு வருகின்றன.

- ✶ முதியோர் ஓய்வூதியம், கல்வி உதவித்தொகை, மகப்பேறு பலன், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்திரவாத திட்டத்தின் கீழ் ஊதியம் மற்றும் இயற்கை சீற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணத் தொகை வழங்குதல் உள்ளிட்டவற்றை வங்கி கணக்குகளுக்கு மாற்றி, ரொக்கமாக வழங்குவதற்கு பதிலாக நேரடி பலனை பெறும் வகையில் பணப் பரிமாற்றத்தை தொடக்க காலத்திலேயே பின்பற்றிய மாநிலம் தமிழ்நாடு ஆகும். இருப்பினும், பயனாளிகளுக்கான பணம் வழங்குதல் வங்கி பரிமாற்றங்களுக்கு பிறகு போதுமான வங்கியாளர்களின் வங்கி கட்டமைப்பு இல்லாததினால், ஊரக பகுதிகளின் வங்கி கணக்கில் பொதுமக்கள் தங்களுடைய பணத்தினை எடுப்பதில் இடர்பாட்டினை எதிர்கொள்கின்றனர். மேலும், உணவு, உரம் மற்றும் எரிபொருள் ஆகியவற்றிற்கான மானியத்தினை ரொக்கமாக வழங்குவதை நாங்கள் விரும்பவில்லை. இத்தகைய நேர்வுகளில், பலன்களின் அளவை காட்டிலும் நேரடியாக பொருட்கள் கிடைப்பது ஒரு சவாலாகும்.
- ✶ இந்திய அரசின் 'பாரத் நெட்' திட்டத்தின் கீழ் அனைத்து ஊராட்சிகளையும் சேர்க்கும் பொருட்டு, தமிழக அரசு இந்திய அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. இவ்வளைதள அமைப்பை தொடங்குவதற்கான பணி தொடங்கப்பட்டுள்ளது.
- ✶ எண்மய முறையில் பணம் செலுத்துவது தொடர்பாக, மாநிலத்தில் சுமார் 10,000 இ–சேவை மையங்களில் POS இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. பயனீட்டாளர்கள் விவரங்களுடன் ஆதார் அட்டையை இணைப்பதனால் AEPS முறையை நன்றாக செயல்படுத்த உதவுகிறது. இ–சேவை மையங்களில், இணையம் வாயிலாக 140க்கும் மேற்பட்ட சேவைகளை தமிழக அரசு வழங்கி வருகிறது. மேலும் 2 மாதங்களுக்குள், கூடுதலாக 300 சேவைகள் வழங்க வகை செய்யப்படும். கடந்த மூன்று ஆண்டுகளாக அரசு இ–சேவை

மையங்கள் மூலம் இணையம் வாயிலாக 3 கோடிக்கும் மேலான பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* நித்தி ஆயோக் அமைப்பை ஏற்படுத்தியபோது, மாநிலங்களின் தீவிர பங்களிப்பு, கூட்டாண்மை அதிகார செயல்பாட்டிற்கு வகைசெய்யும் பொருட்டு, நிறுவனத்தின் அதிகாரத்தில் வெவ்வேறு நிலையில் மாநிலங்களின் கருத்துக்களை கருத்தில் கொண்டு, முறையான அமைப்பு முறையை ஏற்படுத்த வேண்டுமென தமிழ்நாடு அரசு வலியுறுத்தியிருந்தது. நித்தி ஆயோக் இப்பணியினை திறமையாக செய்து வருகிறது. தயாரிக்கப்பட்டு எங்கள் முன் வைக்கப்பட்ட துணை தொகுப்பு அறிக்கைகள் மற்றும் ஏனைய அறிக்கைளின் மாநில அரசுகளின் கருத்துகள் முறையாக இடம் பெற்றுள்ளன. மத்திய அமைச்சகங்கள் உருவாக்கும் திட்டம் மற்றும் கொள்கைகளில் மாநில அரசுகளின் கருத்துக்களை பிரதிபலிக்கும் அளவிற்கு நித்தி ஆயோக்கிற்கு போதுமான அதிகாரம் வழங்கப்படுவது அவசியமாகிறது. மாநில அரசுகளுடன் நித்தி ஆயோக் குழு நடத்துகின்ற அனைத்து கலந்துரையாடல்களிலும், மத்திய அமைச்சகங்களின் முனைப்பான பங்கேற்றால், அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

* தேசிய வளர்ச்சி மையத்தைப் போன்று நித்தி ஆயோக்கின் ஆளுமைக்குழு கூட்டங்களும் சம்பிரதாய நடவடிக்கைகளாக மாறவில்லை என்பதை உறுதி செய்வதில் நாம் கவனமுடன் இருக்க வேண்டும். பெயருக்காக கூட்டப்பட்டு, கருத்துக்கள் பெறப்பட்டு, ஆனால் நடவடிக்கைகள் எடுக்கப்படாத கூட்டமாக இல்லாமல், அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்து கலந்துரையாடுவதற்கும், விவாதிப்பதற்கும், புதிய கொள்கைகள், திட்டங்களை கொண்டு வருவதற்கும் மாநிலங்களை அழைப்பதற்கான ஒரு மன்றமாக இது இருக்க வேண்டும். முதலமைச்சர்களின்

கருத்துக்கள் கேட்கப்பட்டு உரிய முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.

✶ தமிழ்நாட்டில், பேரறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் மற்றும் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையின் கீழ், நாட்டின் வளர்ச்சி, மாநிலங்களின் நிதி தன்னாட்சி ஆகியவற்றில் மாநிலங்களுக்கு அதிக பங்களிப்பு இருக்க வேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளோம். வலிமையான மாநிலங்கள் மூலம் தான் வலிமையான நாடு உருவாகும் என்பதே எங்களது ஆழ்ந்த நம்பிக்கையாகும். ஆதலால், இந்தியாவின் ஆளுகை அமைப்பு முறை இன்னும் பற்பல கூட்டாட்சி சிறப்புகளை வெளிப்படுத்த வேண்டும்.

✶ இந்த பெருமை வாய்ந்த குழுக் கூட்டத்தில், தமிழ்நாடு அரசின் கருத்துக்களை நான் முன்வைத்துள்ளேன். எங்கள் கருத்துக்களுக்கு உரிய மதிப்பளித்து, நாட்டின் வளர்ச்சி நடவடிக்கைகளில், மாநிலங்களும் தங்களது முழு பங்களிப்பை நல்க வழிவகை செய்து, நாம் அனைவரும் ஒற்றுமையுடன் இணைந்து, நமது நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல இந்த முயற்சி உதவும் என நான் நம்புகிறேன்.

நன்றி, வணக்கம்.

◈◈◈

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
05.05.2017 அன்று மதுரையில் அரசு திட்டங்களைத்
துவக்கி வைத்து ஆற்றிய உரை

# மதுரை மண்டலத்திற்குட்பட்ட ஆறு மாவட்டங்களில் ரூ.1,004.13 கோடி மதிப்பீட்டில் 6,874 திட்டப்பணிகள் நிறைவு!



**மா**ண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, இருபெரும் தலைவர்களுடைய திருநாமத்தின் பெயரிலே இரண்டு பாலங்கள் மதுரை மாநகர் பகுதியிலே திறக்கின்ற நிகழ்ச்சி மற்றும் பல்வேறு பணிகள் முடிவுற்ற நிகழ்ச்சி,

இந்த இனிய நிகழ்ச்சியிலே வரவேற்புரை நிகழ்த்திய தலைமைச் செயலாளர் அவர்களே,

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற

மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்களே,

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு.S.P. வேலுமணி அவர்களே,

இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. செல்லூர் ராஜு அவர்களே,

மற்றும் இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரபாலாஜி அவர்களே,

இங்கே சிறப்பான உரை நிகழ்த்திய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்களே,

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜு அவர்களே,

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
திருமதி. ராஜலட்சுமி அவர்களே,

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திரு.பாஸ்கர் அவர்களே,

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு.மணிகண்டன் அவர்களே,

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் S.ராமச்சந்திரன் அவர்களே,

மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் திரு.V.V.ராஜன்செல்லப்பா அவர்களே,

மற்றும் இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

அரசு செயலாளர்களே,

காவல்துறை அதிகாரிகளே,

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

முன்னாள் உள்ளாட்சி அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகளே, மாவட்ட நிர்வாகிகளே,

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே,

பாசத்திற்குரிய பெரியோர்களே! வணக்கத்திற்குரிய தாய்மார்களே!

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே,

அனைவருக்கும் எனது பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

நமது நாட்டின் பண்டைய நகரங்களில் ஒன்றான மதுரையில், அன்பே வடிவங்களாக இங்கே கூடியிருக்கின்ற உங்களையெல்லாம் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இருபடை வீடுகள் மதுரைக்கு சொந்தமானது. ஒன்று திருப்பரங்குன்றம், மற்றொன்று பழமுதிர்ச்சோலை. குன்றும்–சோலையும் சூழ்ந்து இயற்கை எழில் கொஞ்சும் மாவட்டமாகவும், அறிவார்ந்த அறிஞர் பெருமக்களையும், கலை வித்தகர்களையும், வீரம் செறிந்த வேந்தர்களையும், ஒருங்கே பெற்ற மதுரைக்கு வருவதென்றால் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு மிகவும் பிடிக்கும். மதுரையிலே நடைபெறுகிற கூட்டங்களில் மனநிறைவோடு கலந்து கொள்வார்கள். முகம் மலர பேசுவார்கள். மதுரை மாநகரம் மட்டுமல்ல, மதுரை மாவட்டத்திற்கான பல்நோக்கு திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் தருவார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு நடைபெறும் இந்த அரசும், அதே நிலையில்தான் மதுரைக்கு அதிக முக்கியத்துவம் தருகின்றது.

மதுரை, கூடல், மல்லிகை நகர், தூங்கா நகரம் என்று பல சிறப்புப் பெயர்களைப் பெற்ற ஒரு தனிப்பெரும் நகரம்



மதுரையாகும். பரஞ்சோதி முனிவரால் இயற்றப்பட்ட திருவிளையாடல் புராணம் உட்பட பல இலக்கியங்களில் மதுரை மாநகரின் வடிவமைப்பு மற்றும் அழகு பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இந்த மாநகரின் பழமையையும், பெருமையையும் அறிந்த அறிஞர்கள் மதுரைக்கு வருகை தந்திருக்கிறார்கள். குறிப்பாக மூன்றாம் நூற்றாண்டில் மதுரைக்கு வருகை தந்த மேகஸ்தனீஸ், கௌடில்யர் போன்ற அறிஞர்கள் தங்கள் பயணக்கட்டுரைகளில் மதுரையைப்பற்றி மிக தெளிவாக விவரித்துள்ளார்கள். புராணங்களாலும், இதிகாசங்களாலும், இன்னும் பல இலக்கியங்களாலும், வரலாறுகளாலும், புகழப்படும் மதுரைக்கு வருவதென்றாலே எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. காரணம், மதுரை மாநகரம் உழைப்பவர்களுக்கும், உண்மையானவர்களுக்கும், உயரத் துடிப்பவர்களுக்கும் புத்துணர்வு அளிக்கக்கூடிய நகரம் மதுரை மாநகரம்.

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த ஊர் இந்த மதுரை. தமிழை பக்தி இலக்கியத்துடன் வளர்த்த பூமி இந்த பூமி. அதனால் தான் தொலைநோக்கு பார்வையுடன் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், உலகத் தமிழ்ச் சங்கத்தை மதுரையிலே நிறுவினார்கள். “யார் போற்றினாலும், தூற்றினாலும், என் கடன் பணி செய்து கிடப்பதே. தமிழ்நாட்டின் வளர்ச்சி, தமிழக மக்களின் வளர்ச்சி தான் என்னுடைய வளர்ச்சி என்ற முறையில் நான் தொடர்ந்து பணியாற்றுவேன்” என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கூறினார்கள். ஆனால், தமிழின் பெயரைச் சொல்லி வளர்ந்தவர்களெல்லாம் தமிழுக்காக எதையும்

செய்யவில்லையென்பதற்கு மதுரை உலகத் தமிழ்ச்சங்கத்தை தங்கள் ஆட்சிக் காலங்களில் புறந்தள்ளியதை கொண்டே நாம் தெரிந்து கொள்ளலாம். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தான் தமிழையும் தமிழர்களையும் இரண்டு கண்களாக நினைத்து, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் உருவாக்கப்பட்ட உலகத் தமிழ்ச்சங்கத்திற்கு புத்துயிர் கொடுத்து ரூ.37.25 கோடி மதிப்பீட்டில் 14.5 ஏக்கர் பரப்பளவில் பெருந்திட்ட வளாகத்தை கட்டி, மதுரைக்கும், தமிழுக்கும் மேலும் சிறப்பு சேர்த்தார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் தமிழ்ப் பற்றையும், அவர்களின் வழியில் வந்த மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் தமிழ்த்தொண்டையும் நாம் நினைத்துப் பார்த்து, உண்மையான தமிழின தலைவர் யார் என்பது தெள்ளத் தெளிவாகிறது.

கடந்த 08.03.2017 அன்று மதுரை மண்டலத்திற்கான அரசுத் திட்டங்களை துவக்கி வைக்கும் அரிய வாய்ப்பினை நான் பெற்றேன். மதுரை மாவட்டத்தில், புரட்சித்தலைவர் காலனி திட்டப்பகுதியில் 20 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் 276 குடிசை மாற்று வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புகள், 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம் உட்பட 91 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவிலான 1,641 பணிகள் உட்பட மதுரை மண்டலத்திற்கு உட்பட்ட மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர் ஆகிய 6 மாவட்டங்களில், பல துறைகளின் சார்பில் 1,004 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6,874 திட்டப்பணிகள் நிறைவு செய்யப்பட்டு, துவக்கி வைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, இந்த குறுகிய காலத்திலேயே மதுரை மாவட்டத்தில், மேலும் பல நிறைவு பெற்ற திட்டங்களை தொடங்கி வைப்பதற்காக வந்திருப்பது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி அளிக்கிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் “மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் பல்வேறு உள்கட்டமைப்புகளில் சாலை உள்கட்டமைப்பு மிக முக்கியப் பங்கு வகிக்கிறது என்றும் ஒரு மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கும் மனித வள மேம்பாட்டிற்கும் சாலைக் கட்டமைப்பின் வளர்ச்சி அடிப்படையாக உள்ளது என்றும் ஒரு மாநிலத்தில் உள்ள ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பினைக் கொண்டே அம்மாநிலத்தின் வளர்ச்சியைக் கணிக்க இயலும் என்ற மாபெரும் கருத்தினை விளக்கிக் கூறினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதை, செய்து காட்டுவதில் வல்லவர் என்பதால்தான், சாலை மற்றும் மேம்பாலத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்தார்கள்.

நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர்வழங்கல் துறை சார்பில் மதுரை மாநகராட்சி, ஆரப்பாளையம் முதல் அருள்தாஸ்புரம் வரை உயர்மட்ட பாலம் மற்றும் திருமலையார் பாடித்துறையில் இருந்து செல்லூர் வரை மற்றுமொரு மேம்பாலம் ஆக இரண்டு மேம்பாலங்கள் 30 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவு செய்யப்பட்டு திறந்து வைக்கப்படுகிறது.

மற்றும் பல்வேறு துறையின் சார்பில் நிறைவேற்றப்பட்ட 53 கோடியே 33 இலட்சத்து 92 ஆயிரம் மதிப்பீட்டிலான திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணப்படி நடக்கின்ற இந்த அரசு மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறது. மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் விருப்பப்படி ஏழை, எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை 1 கோடியே 6 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாய்க்கு வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மதுரை மாநகரத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு எடுத்துள்ள முக்கிய

நடவடிக்கைகளை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக, பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து ஆனைக்கால் வரை உயர்மட்டப்பாலம் கட்டுதல். இப்பணிக்கு, 38 கோடி செலவில் நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெறுகிறது. இரண்டு காலவாசல் சந்திப்பில் 192 கோடி செலவில் உயர்மட்ட மேம்பாலம், இப்போது வடிவமைப்பு இறுதி செய்யப்பட்டுள்ளது. மூன்றாவது, தேவர் சிலை அருகில் கோரிப்பாளையம் சந்திப்பில் மேம்பாலம், இப்பணிக்கு 165 கோடி செலவில் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சிந்தாமணி சாலை மேம்பால பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது. மதுரை–தொண்டி சாலை பாண்டிக்கோயில் அருகே மேம்பாலம், இறுதி செய்யப்பட்டு மதிப்பீட்டுத் தொகை ஒப்பளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மதுரை சுற்றுச்சாலை சுமார் 214 கோடி செலவில் நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு பணி தொடங்கப்படவுள்ளது. இதேபோன்று, மதுரை மாநகரில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை தெரிவிக்கின்ற இந்த நல்லவேளையில் மேலும் ஒரு தகவலை உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் நெடுஞ்சாலைத்துறை மூலமாக கடந்த 5 ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் 2,338 சிறு மற்றும் உயர்மட்டப் பாலங்கள் கட்டி சரித்திரம் படைத்த ஆட்சி அம்மாவுடைய ஆட்சி என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆண்கள் ஆதிக்கம் நிறைந்த அரசியல் களத்தில் தனியொரு பெண்மணியாக புரட்சித்தலைவி அம்மா அவர்கள் போராடி போராடிப் பெற்ற வெற்றிகள்தான் இன்று தமிழக மக்களுக்கு நலத்திட்டங்களாக கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

மதுரை மக்களின் நெஞ்சங்களில் அருள்மிகு மீனாட்சி எப்படி குடிகொண்டிருக்கிறாளோ, அப்படியேதான் புரட்சித்தலைவி அம்மா அவர்களும் மதுரை மக்களால் நேசிக்கப்படுகிறார். அந்த நேசிப்பில் சிறிதும் குறைவு இல்லாமல் அம்மா வழியில் வந்த இந்த அரசு ஆட்சி நடத்தும், என்று இந்த நேரத்தில் உறுதி கூறிக் கொள்கிறேன்.

எந்த ஒரு செயலையும் வெற்றிகரமாக செய்து முடிக்க வேண்டும் என்றால் அந்த செயலில் ஈடுபடுகிறவர்களுக்கு ஒருமித்த கருத்துடன் கூடிய ஒற்றுமை அவசியம். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசை வெற்றிகரமாக கொண்டு செல்ல அனைவருடைய ஒத்துழைப்பு அவசியம். ஒத்துழைப்பு என்றதும் எனக்கு ஒரு சிறுகதை நினைவுக்கு வருகிறது.

கூட்டம் கூட்டமாக வந்து இரை தேடும் புறாக்களை வேடன் ஒருவன் பிடிக்கத் திட்டமிட்டான். ஒரு நாள் அவற்றில் ஒரு சில புறாக்களை மட்டுமாவது பிடித்துவிட வேண்டுமென்ற எண்ணத்தில் வலை விரித்தான். அவன் விரித்த வலையில் ஒரு சில புறாக்கள் மட்டும் மாட்டிக் கொண்டன. வேடன் அந்த புறாக்களையும் பிடிக்க விரைந்து வந்து கொண்டிருந்தான். இதை பார்த்துக் கொண்டிருந்த மற்ற புறாக்கள், வலையில் சிக்கிய புறாக்களையும் காப்பாற்ற முனைந்து, தாங்களும் அந்த வலைக்குள் சென்று, அனைத்து புறாக்களும் ஒன்றிணைந்து வலையையே தூக்கிக் கொண்டு பறந்து சென்றன. வேடன் ஏமாந்தான். புறாக்களின் ஒற்றுமையைக் கண்டு வியந்தான். இந்தக் கதையில் வரும் புறாக்களைப் போல், நாம் ஒற்றுமையாக இருந்து, மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு தொடர்ந்து வெற்றியைக் கொடுத்த தமிழக மக்களின் நலனை பேணிக் காத்து, அவர்களுக்கு விசுவாசமாக நற்பணிகள் ஆற்றிட வேண்டும் என அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நான் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் சீரிய வழிகாட்டுதலின்படி, திறம்பட அமைச்சர் பணியில் பணியாற்றினேன். அவர்கள் வழிகாட்டுதலின்படியே இன்றைக்கு முதலமைச்சர் பணியில் அமர்ந்து துரிதமாகவும், திறம்படவும் மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றுகின்றேன். பல்வேறு மாவட்ட அரசு நிகழ்ச்சிகளுக்கு நேரில் வந்து கலந்து கொள்கிறேன். காரணம், மாண்புமிகு அம்மா அவர்களின் விருப்பமான, தமிழக மக்களின் நலனை பேணிக்காப்பது. என்னிடம் வரும் கோப்புகளுக்கு உடனுக்குடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது. அதனால், அரசு இயந்திரம் முழுமூச்சில் செயல்படுகிறது. பல முக்கிய தேர்வுகளில் துறைச் செயலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஆலோசித்து தமிழ்நாடு வளர்ச்சிக்குத் தீர்வு காணப்படுகிறது.

தமிழ்நாடு அரசின் மூலமாக பல்வேறு மணல் குவாரிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த குவாரிகள் எல்லாம் இனிமேல் அரசே முழுமையாக எடுத்து செயல்படுத்தும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ரோடு காண்ட்ராக்ட் அதாவது மணலை லாரியில் நிரப்புவது, அதைப்போல ஸ்டாக்யார்டு மணலை சேமித்து வைப்பது, இரண்டையும் இனிமேல் அரசினுடைய மேற்பார்வையில் எடுத்து செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பை இங்கே இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இதன்மூலம் மணல் விலை கட்டுப்படுத்தப்படும். அதைப்போல பொதுமக்களும் கட்டுமான தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களும் அரசுக்கு முழு ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

அதுமட்டுமல்ல மணல் இருந்தால் தான் நிலத்தடி நீர் உயரும். ஆகவே, பொதுமக்கள் இனி தாங்கள் கட்டுகின்ற கட்டடங்களுக்கு எம்சேண்ட் பயன்படுத்தவேண்டுமென்றும், கட்டுமானத் தொழில் ஈடுபட்டிருக்கின்றவர்களும் படிப்படியாக

எம்சேண்ட்–க்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், 2, 3 ஆண்டுகளில் முழுமையாக மணல் நிறுத்தப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய தமிழகத்திலே நிலத்தடி நீர் உயர்த்தப்படவேண்டும். மழை அளவு குறைவாக உள்ளதால், மணல் இருந்தால் தான் அந்த நீரை சேமிக்க முடியும் என்பதை தெரிவித்துக் கொண்டு, மிகச்சிறப்பான எழுச்சியான இருபெரும் தலைவர்வர்களுடைய பெயர், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய பெயர், பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர் அவர்களுடைய பெயர் இரண்டு பாலங்களுக்கு சூட்டப்பட்டு இன்றைக்கு திறக்கப்பட்டதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன் என்பதைச் சொல்லி இந்த இனிய விழாவை ஏற்படுத்திய அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**திரு.எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
14.05.2017 அன்று திருமங்கலம் மெட்ரோ இரயில் நிலையத்தில் நடைபெற்ற விழாவில், திருமங்கலம் முதல் நேரு பூங்கா வரையிலான சென்னை மெட்ரோ இரயில் பச்சை வழித்தடம் சுரங்கப்பாதையில் பயணிகள் சேவையைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை

## சென்னை மாநகரம், உலகத்தரம் வாய்ந்த பன்னாட்டு சுற்றுலா பயணிகளை கவர்ந்து ஈர்க்கும் வகையில் ஒரு நவீன நகரமாகத் திகழும்!



**மா**ண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த இனிய விழாவில் பங்கேற்க வருகை புரிந்துள்ள மாண்புமிகு மத்திய நகர்ப்புற மேம்பாடு, வீட்டு வசதி, நகர்ப்புற

வறுமை ஒழிப்பு மற்றும் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் மதிப்பிற்கும் மரியாதைக்குரிய திரு.வெங்கையா நாயுடு அவர்களே,

மாண்புமிகு மத்திய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் திரு.பொன்.ராதாகிருஷ்ணன் அவர்களே,

மாண்புமிகு தமிழ்நாடு அரசின் மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி. ஜெயக்குமார் அவர்களே,

மாண்புமிகு தமிழ்நாடு அரசின் தொழில் துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்களே,

இந்த இனிய விழாவிலே வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கிற

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,

பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே,

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே சிறப்பிக்க வருகை தந்துள்ள பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய டாக்டர் திருமதி தமிழிசை சௌந்தரராஜன் அவர்களே,

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் அவர்களே,

Secretary to Government of India, Ministry of Urban Development, Thiru Rajiv Gauba, IAS, அவர்களே,

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களே,

மத்திய அரசின் உயர் அதிகாரிகளே,

Mr.Kenko Sone, Minister in Japan Embassy at New Delhi,

Mr.Seiji Baba, Consul General of Japan in Chennai,

Mr.Takema Sakamoto, Chief Representative, JICA at New Delhi.

வரவேற்புரை ஆற்றிய திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, முதன்மைச் செயலாளர் திரு. ச.கிருஷ்ணன் அவர்களே,

நன்றியுரை ஆற்ற உள்ள, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு.பங்கஜ் குமார் பன்சல் அவர்களே,

அரசு அலுவலர்களே,

வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே,

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசின் மீதும் தமிழக மக்களின் மீதும் அதிக அக்கறையும் ஈடுபாடும் கொண்ட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பாசத்திற்குரிய மத்திய நகர்ப்புற மேம்பாடு, வீட்டு வசதி, நகர்ப்புற வறுமை ஒழிப்பு மற்றும் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.வெங்கையா நாயுடு அவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் இடைவிடாத முயற்சி காரணமாக மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்திற்கு டிஜிட்டல் உரிமம் வழங்கியது. இந்த டிஜிட்டல் உரிமத்தை தமிழ்நாடு அரசு பெறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்த மாண்புமிகு மத்திய நகர்ப்புற மேம்பாடு, வீட்டுவசதி, நகர்ப்புற வறுமை ஒழிப்பு மற்றும் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர்



திரு.வெங்கையா நாயுடு அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் கோயம்பேடு முதல் நேரு பூங்கா வரையிலான முதல் சுரங்க வழித்தடத்தில் உள்ள 7 சுரங்கப்பாதை மெட்ரோ ரயில் நிலையங்களைத் திறந்து வைத்து அவ்வழித்தடத்தில் பயணிகள் சேவையை மாண்புமிகு மத்திய நகர்ப்புற மேம்பாடு, வீட்டு வசதி, நகர்ப்புற வறுமை ஒழிப்பு மற்றும் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.வெங்கையா நாயுடு அவர்களுடன் இணைந்து, இன்று நான் துவக்கி வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

சென்னை பெருநகரப் பகுதியில் பெருகிவரும் மக்கட்தொகை மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை ஆகியவற்றால், போக்குவரத்து நெரிசல் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதற்கு ஒரு தீர்வாக சென்னை மெட்ரோ ரயில் திட்டம் மத்திய மாநில அரசுகளின் உதவியுடனும் மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை கடனுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கான சாத்தியக்கூறு ஆய்வு **2003**ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசால் மேற்கொள்ளப்பட்டு, அந்த ஆய்வின் அடிப்படையில் வண்ணாரப்பேட்டை முதல் சென்னை

விமான நிலையம் வரையிலான 23 கிலோ மீட்டர் தூர வழித் தடம் மற்றும் சென்ட்ரல் இரயில் நிலையம் முதல் பரங்கிமலை வரையிலான 22 கிலோ மீட்டர் தூர வழித் தடம் என இரு வழித் தடங்கள் தெரிந்தெடுக்கப்பட்டன. இந்த நடவடிக்கையின் மூலம் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தான் வித்திட்டார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 29.06.2015 அன்று கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரையிலான 10.15 கி.மீ. உயர்த்தப்பட்ட வழித்தடத்தில் சென்னை மெட்ரோ இரயிலின் பயணிகள் சேவையை துவக்கி வைத்ததோடு, சென்னை மெட்ரோ இரயிலின் கோயம்பேடு பணிமனை மற்றும் கோயம்பேடு, சென்னை புறநகர்ப் பேருந்து நிலையம் (CMBT), அரும்பாக்கம், வடபழனி, அசோக்நகர், ஈக்காட்டுத்தாங்கல் மற்றும் ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையங்களையும் திறந்து வைத்தார்கள்.

மேலும், வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் – விம்கோ நகர் வரையிலான சென்னை மெட்ரோ இரயிலின் முதல் கட்ட நீட்டிப்புத் திட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 23.07.2016 அன்று அடிக்கல் நாட்டினார்கள். 3,770 கோடி ரூபாய் செலவு மதிப்பீட்டில் 9.05 கி.மீ. தூரம் நீட்டிப்பதற்கான இத்திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதலைப் பெறுவதில் முக்கிய பங்காற்றியவர் மாண்புமிகு மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.வெங்கையா நாயுடு என்று, இத்திட்டத்தை அடிக்கல் நாட்டி துவக்கிவைத்த போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்கள். மேலும் இத்திட்டத்திற்கு 93 கோடி ரூபாய் மூலதன பங்களிப்பை பெற பேருதவியாக இருந்த மாண்புமிகு மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர், மரியாதைக்குரிய திரு.வெங்கையா நாயுடு அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மெட்ரோ ரெயில் சேவையை மேலும் விரிவுபடுத்திட, 21.09.2016 அன்று சென்னை விமான நிலையம் முதல் சின்னமலை வரையிலான 8.6 கி.மீ. நீளத்திலான இரண்டாவது உயர்த்தப்பட்ட மெட்ரோ இரயில் பகுதியிலும், ஆலந்தூர் முதல் பரங்கிமலை வரையில் 1.2 கி.மீ. நீளத்திலான பகுதியிலும், பயணிகள் சேவையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துவக்கி வைத்ததோடு, சென்னை விமான நிலையம், மீனம்பாக்கம், நங்கநல்லூர் சாலை, கிண்டி, சின்னமலை மற்றும் பரங்கிமலை மெட்ரோ இரயில் நிலையங்களையும் திறந்து வைத்தார்கள். மக்கள் சேவையே மகேசன் சேவையாகக் கருதி பயணிகள் சேவையை மாண்புமிகு அம்மா அவர்கள் அன்று துவக்கி வைத்தார்கள்.

14,600 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் முதல் கட்டத்திற்கு, 2006ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு மே மாதம் வரை அப்போதைய தி.மு.க. ஆட்சியில் 1,143 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டது. 2011ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை 13,787 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில்தான் செலவிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு தேவையான நிதியை ஒவ்வொரு ஆண்டும் முழுமையாக ஒதுக்கி, திட்டப் பணிகள் குறித்த காலத்தில் முடிவுறத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

2011ஆம் ஆண்டு வரையிலான அப்போதைய தி.மு.க. ஆட்சியில் சென்னை மெட்ரோ ரயில் கட்டுமானப் பணிகளில் 3 சதவீதமே முடிவடைந்திருந்தது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா தலைமையிலான அரசு 2011ஆம் ஆண்டு மே மாதம் பொறுப்பெற்ற பின்னர், பணிகளை விரைந்து செயல்படுத்தியதன் காரணமாக உயர்த்தப்பட்ட வழித் தடங்கள், மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் பணிமனையைப் பொறுத்தவரை அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

சுரங்க வழித்தடத்தின் முதல் பகுதியான 7.4 கி.மீ. தூரம் உள்ள கோயம்பேடு முதல் நேரு பூங்கா வரையிலான பயணிகள் சேவை இன்று துவக்கி வைக்கப்படுகிறது.

விரைவான, வசதியான, நவீன போக்குவரத்து திட்டத்தினை வழங்குவதே சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் நோக்கமாகும் என்பதால் குளிர்சாதன வசதி, தானியங்கி ரயில் பாதுகாப்பு, தானியங்கி ரயில் இயக்கம், சிறப்பு இருக்கை வசதி, மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு வசதிகள், பயணிகளுக்கு நிறுத்தம் குறித்த தகவல், அவசரகால வெளியேறும் வசதி, பயணிகளின் பாதுகாப்பிற்காக கண்காணிப்பு கேமராக்கள் உள்ளிட்ட சிறப்பம்சங்களுடன் ரயில் நிலையங்களும் ரயில் பெட்டிகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

மெட்ரோ ரயில் முதற்கட்டத்தில், மீதமுள்ள சுரங்க வழித்தடமான நேரு பூங்கா முதல் சென்னை சென்ட்ரல் வழித்தடம் மற்றும் சுரங்கப்பாதை ரயில் நிலையங்களின் கட்டுமானப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. மொத்தம் தோண்டப்பட வேண்டிய 36.4 கி.மீ. சுரங்கப்பாதையில் 34.3 கி.மீ. சுரங்கப்பாதைப் பணிகள் முடிந்துவிட்டன. இவ்வழித்தடம் இந்த ஆண்டின் இறுதிக்குள்ளும், எஞ்சியுள்ள சின்னமலை முதல் வண்ணாரப்பேட்டை வரையிலான சுரங்க வழித்தடம் 2018ஆம் ஆண்டு மத்தியிலும் முடிக்கப்பட்டு, மெட்ரோ ரயில் சேவை துவக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் முதல் கட்டத்தில், 54 கி.மீ. நீளத்திலான மெட்ரோ ரயில் வழித்தடங்கள் திட்டமிடப்பட்டு, தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு சென்னை நகரின் விரிவாக்கத்தை கருத்தில் கொண்டு, மெட்ரோ ரயில் சேவையை மக்களின் பயன்பாட்டிற்காக மேலும் விரிவுப்படுத்திட இரண்டாம் கட்டமாக, மூன்று மெட்ரோ ரயில் வழித்தடங்களைச் செயல்படுத்த முடிவு

செய்து, வரைவு சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான நிர்வாக ஒப்புதல் வழங்கியிருந்தது. அதனடிப்படையில் விரிவான திட்ட அறிக்கையை திருவாளர்கள் ரைட்ஸ் நிறுவனம் அரசிற்கு தயாரித்து அளித்துள்ளது. அவ்வறிக்கையில் 107.55 கி.மீ. நீளத்திலான மூன்று வழித்தடங்கள் – அதாவது மாதவரம் முதல் சிறுசேரி வரையில் ஒரு வழித்தடமும், சென்னை புறநகர் பேருந்து நிலையம் முதல் கலங்கரை விளக்கம் வரை ஒரு வழித்தடமும் மற்றும் மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை ஒரு வழித்தடமும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இவ்விரிவான திட்ட அறிக்கையை ஏற்றுக் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, அவ்வழித்தடங்களை 85,047 கோடி ரூபாய் செலவு மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கு கொள்கை அளவிலான ஒப்புதலை வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவி, மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் கடனுதவி பெறவும், மத்திய நகர்ப்புற அமைச்சகத்திற்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்டுள்ளது. இதற்கிடையில் இத்திட்டம் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் 2016–2017ஆம் ஆண்டுக்கான சுழல் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த விரிவாக்க திட்டத்திற்கு விரைவில் மத்திய அரசின் ஒப்புதல் வழங்க வேண்டும் என இத்தருணத்தில் மாண்புமிகு மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

2011 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அப்போதைய தி.மு.க ஆட்சியின் போது மத்திய அரசு, மாநில அரசு மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கிடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதில் பல ஷரத்துகள் மாநில அரசின் நலன்களுக்கு எதிராக இருப்பதாலும், திட்ட செயலாக்க காலத்திற்குப் பின்னரும் தொடர்ந்து பாதிப்பு ஏற்படுத்தும்

என்பதாலும் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் அளித்த கோரிக்கை மனுக்கள் வாயிலாக கேட்டுக்கொண்டார். இது பற்றி விரிவான விவரங்களை மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு நான் அனுப்பியிருந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளேன். இது குறித்து மாநில அரசு பாதிக்கப்படாத வகையில் இந்த ஒப்பந்தத்தை மாற்றி அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென மத்திய அரசை நான் இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வழித்தடங்கள் தற்போது பயன்பாட்டிலுள்ள புறநகர் ரயில், வெளியூர் பேருந்து, மாநகரப் பேருந்து மற்றும் மெட்ரோ ரயில் நிலையங்களுடன் ஒருங்கிணைக்கும் வகையில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் சென்னை பெருநகரப் பகுதியில் பொதுப் போக்குவரத்தின் பங்கு கணிசமான அளவு உயரும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டங்களால் சென்னை மாநகரம் உலகத்தரம் வாய்ந்த பன்னாட்டு சுற்றுலா பயணிகளை கவர்ந்து ஈர்க்கும் வகையில் ஒரு நவீன நகரமாக திகழும்.

இந்த திட்டம் முழுமையாக நிறைவேற அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும், உழைப்பாளர் நண்பர்களுக்கும், இந்த இனிய விழாவிற்கு சிறப்பாக ஏற்பாடு செய்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும், மனதார நன்றி கூறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

◈◈◈

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
19.05.2017 அன்று 121 ஆவது உதகை மலர்க்காட்சி
தொடக்க விழாவில் ஆற்றிய உரை.

## சுற்றுலாவுக்கு உகந்த, அமைதியான, பாதுகாப்பான இடமாக உதகை திகழ்கிறது!



**121**ஆவது உதகை மலர்க் கண்காட்சி துவக்க விழா நிகழ்ச்சியிலே கலந்து கொண்டதிலே நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். முதலிலே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஒரே வாரிசு, உலகம் போற்றிய உன்னத தலைவி மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்று இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு நடைபெறும் இவ்விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமைப்படுகின்றேன்.

இந்த இனிய விழாவிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூார் கே.ராஜு அவர்களே,

இங்கே, சிறப்பான, அற்புதமான பல கருத்துக்களை இங்கே எடுத்துரைத்து அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களே,

காலத்தினுடைய நேரம் கருதி சுருக்கமாகச் சொன்னாலும், சிறப்பான கருத்தை எடுத்துரைத்து அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்களே,

இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு, சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற வேளாண்மைத்துறை அரசு முதன்மை செயலாளர் அவர்களே,

மாநிலங்களவை உறுப்பினர், திரு.கே.ஆர்.அர்ஜுனன் அவர்களே,

நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய, திரு. கோபாலகிருஷ்ணன் அவர்களே,

மாநிலங்களவை உறுப்பினர், திரு.ஏ.கே.செல்வராஜ் அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.ராமு அவர்களே,

உதகை சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.கணேஷ் அவர்களே,

மற்றும் இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற சட்டப்பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய திரு.கனகராஜ் அவர்களே,

மரியாதைக்குரிய சகோதரி கஸ்தூரி வாசு அவர்களே,

மரியாதைக்குரிய சகோதரர் ஈஸ்வரன் அவர்களே,

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் இணைய தலைவர் முன்னாள் அமைச்சர் திரு.அ.மில்லர் அவர்களே,

தோட்டக்கலை துறை இயக்குநர் அவர்களே,

நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் பொ.சங்கர் அவர்களே,

அரசு அலுவலர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே,

வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே,

புரட்சித்தலைவி அம்மா அவர்களின்

ரத்தத்தின் ரத்தமான அருமை உடன்பிறப்புகளே,

உங்கள் அனைவருக்கும் முதற்கண்

எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

உதகமண்டலம், உலக அளவில் தலைசிறந்த சுற்றுலா மையம். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1995ஆம் ஆண்டு நூற்றாண்டு மலர்க்கண்காட்சியினை பிரம்மாண்டமாக நடத்தியதால் பெருமை பெற்ற நகரத்தில் இன்று நடைபெறும் 121வது மலர் கண்காட்சியினைத் துவக்கி வைப்பதில் பெருமை அடைகிறேன்.

இயற்கை எழில் கொஞ்சும் உதகை மாண்புமிகு அம்மா அவர்களுக்கு பிடித்தமான இடம். மலைகளின் கம்பீரத்தையும், வளைந்தோடும் ஆறுகளின் அழகையும், மணக்கின்ற பூக்களின் வாசத்தோடும், சிற்றோடைகளையும் காணும் போது நமது களைப்பு மறைகிறது. கவலைகள் பறந்தோடுகிறது.

மனம் மகிழ்ச்சியில் திளைக்கிறது என மாண்புமிகு அம்மா அவர்கள் உதகையில் பேசினார்கள்.

அதே மகிழ்ச்சியை இங்கு வந்துள்ள அனைவருமே பெற்றுள்ளீர்கள் என்று நம்புகிறேன்.



தமிழ்நாட்டில் உயரமான இடமான உதகையில் வாழும் மக்கள் அனைவரும் உயர்ந்த எண்ணங்களையே கொண்டுள்ளீர்கள் என்பதை நினைத்து பெருமை அடைகிறேன்.

சுற்றுலாவுக்கு உகந்த, அமைதியான, பாதுகாப்பான இடமாக உதகை திகழ்கிறது. ஆண்டுதோறும் நடைபெறும் இந்த மலர்க்கண்காட்சியை 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் பார்த்து மகிழ்கின்றனர்.

நீலகிரி மலையை மலைகளின் அரசி என்று கூறுவர் ஆனால் இந்த அரசிக்கு யாருமே மகுடம் சூட்டவில்லை ஆனால், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தான் பல்வேறு வளர்ச்சித்திட்டங்களின் மூலம் இந்த மலையரசிக்கு மகுடம் சூட்டி பெருமைப்படுத்தினார்.



ஸ்ரீராமனின் பாதம் பட்டதால் அகலிகை உயிர் பெற்றார் குறிஞ்சியின் உச்சிமுகடாக விளங்கும் நீலகிரிமலையில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பாதம் பட்ட பிறகுதான் நீலகிரி மலை வளர்ச்சியையும், மலர்ச்சியையும் பெற்றது.

குறிப்பாக, ஆசிய துணைக்கண்டத்திலேயே எங்குமில்லாத அற்புதமான **4000** ரகங்களைக் கொண்ட ரோஜா தோட்டத்தை இம்மாவட்டத்திற்கு வழங்கியவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அதோடு மட்டுமல்லாமல்

- ❖ பைக்காரா இறுதி நிலை புனல் நீர் மின் திட்டம் உருவாக்கம்.
- ❖ **8** கோடியே **22** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டுப்பணிகள்.

❖ 27 கோடி ரூபாய் செலவில் உதகை நகரில் அலங்கார விளக்கு, பாதாள சாக்கடை, கழிவறை போன்ற அடிப்படை வசதிகள்.

❖ தேயிலை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த 5 கோடி ரூபாயில் நஞ்சநாடு தேயிலை தொழிற்சாலை.

❖ 5 கோடியே 40 இலட்சம் ரூபாயில் அரசு தேயிலை தொழிற்சாலைகளை நவீனமயமாக்கப்பட்டுள்ளது.

❖ 15 கோடி ரூபாயில் சிறுமுகை தேயிலை குழுமத்திற்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

❖ உற்பத்தியை அதிகரித்து, விவசாயிகள் பொருளாதார முன்னேற்றம் அடைய தும்மன்ட்டியில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணை உயர்ரக கார்னேசன் தாய்செடிகளை இறக்குமதி செய்து மானிய விலையில் வழங்க ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய் நிதி உதவி.

❖ பொலிவிழந்த ஊட்டி ஏரி 6 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவில் மேம்பாடு செய்யப்பட்டது.

❖ அதே போல, 80 இலட்சம் செலவில் தொட்டபெட்டாவில் தேயிலை பூங்கா அமைப்பு.

❖ உலகிலேயே முதன்முறையாக கணினி மயமாக்கப்பட்ட “டீ சர்வ்” என்ற ஒரு தனி ஏல மையம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் நினைவு கூர விரும்புகிறேன்.

❖ எப்போதெல்லாம் தேயிலை விலை குறைகிறதோ, அப்போதெல்லாம் கிலோவிற்கு 2 ரூபாய் மானியம் வழங்கி தேயிலைத் தோட்ட தொழிலுக்கு ஊக்கம் கொடுத்தவர் நம் புரட்சித்தலைவி அம்மா.

❖ உலக பிரசித்திப் பெற்ற இந்த தாவரவியல் பூங்காவை மேம்படுத்த 8 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ 27 கோடி ரூபாய் செலவில் அரசு துறைகள் ஒரே இடத்தில் செயல்பட மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூடுதல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

❖ 6 கோடியே 3 இலட்சம் செலவில் அலுவலக குடியிருப்புகள் அமைத்துக் கொடுத்தது அம்மாவின் அரசு.

❖ 15 கோடி ரூபாய் செலவில், தோடர், இருளர், குறும்பர், கோத்தர், பனியர் மற்றும் காட்டுநாயக்கர் என ஆறு பழங்குடியினத்தவர்களை பெருமைப்படுத்த பழங்குடியினர் பண்பாட்டு மையம் அமைத்துக் கொடுத்ததும் நம் அம்மா அவர்களே.

இந்த மலர்க் கண்காட்சியின் சிறப்பம்சமே பலவகையான மலர்கள் 15,000 தொட்டிகளில் ஒரே இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்களின் மனதை கவரும் வகையில் பல்வேறு வடிவங்களில் அமைக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பலவகையான உருவ அமைப்புகள் சுற்றுலா பயணிகளை கவர்ந்து இழுக்கின்றன.

இந்த மலர்க்கண்காட்சியின் சிறப்பம்சமாக 25 அடி உயரத்தில், 26 அடி நீளத்தில் மலர்களைக் கொண்டு மகாபலிபுரம் கடற்கரை கோவிலின் உருவமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள நுழைவு வாயில் இம்மலர்க்கண்காட்சிக்கு மேலும் சிறப்பு சேர்க்கிறது. பல வண்ணங்களை கொண்ட மலர்கள், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிய வகை மலர்கள், நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் கொய் மலர்களில் ஒன்றான




லில்லியம் மலர்களின் தொகுப்புகளின் காட்சிகள் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் உள்ளது.

மலர்க்கண்காட்சியை ஊக்குவிக்க பல போட்டிகள் நடத்தப்பட்டு சிறந்த தோட்டங்கள் மற்றும் பூங்காக்களுக்கு பரிசுகள் வழங்கப்பட உள்ளது. சுமார் 150 முதல் 200 போட்டியாளர்கள் வரை இப்போட்டிகளில் பங்கேற்றுள்ளனர். வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகள் இம்மலர்க் கண்காட்சியின் நிறைவு நாளில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் வழங்கப்பட உள்ளது.

மேலும், இந்தப் பரிசுகள் தோட்ட ஆர்வலர்களையும், பொதுமக்களையும் ஊக்கப்படுத்துவதாக அமைகிறது. இம்மலர் கண்காட்சிக்கு வரும் அனைத்து சுற்றுலா பயணிகளும், பொதுமக்களும் தோட்டம் அமைத்தல் பற்றிய விழிப்புணர்வை அடைவதோடு பல அரிய வகை பூக்களையும் காண ஏதுவாக உள்ளது.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் உதகையில் எத்தனை வண்ணங்களில் மலர்கள் பூக்கின்றனவோ, அத்தனை



வண்ணங்கள் அளவிற்கு விதவிதமான திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் மக்களுக்கு தந்துள்ளார்கள்.

இக்கண்காட்சியை நல்ல முறையில் ஏற்பாடு செய்த மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் பொ. சங்கர் மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

“பொதுமக்களுக்கு என்னென்ன வழிகளில் எல்லாம் நன்மை செய்ய இயலுமோ அந்த வழிகளைப் பற்றியே நான் எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்”, என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கூறுவார்கள். அந்த வழியில் இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

“கடவுள் நம் பக்கம் இருக்கிறாரா என்பதை விட கடவுளின் பக்கம் நாம் இருக்கிறோமா என்பதுதான் எப்போதும் என்னுடைய சிந்தனையாக இருக்கிறது” என்று ஆப்ரகாம் லிங்கன் கூறுவார்.

எந்த அரசு மக்கள் பக்கம் இருக்கிறதோ, அந்த அரசின் பக்கம் மக்களும் இருப்பார்கள், கடவுளும் இருப்பார். எனவே, அம்மாவின் அரசு மக்கள் பலத்தையும் கடவுளின் கருணையையும் பெற்ற சிறந்த அரசாகத் திகழ்கிறது.

ஒரு சிறு கதையோடு என் உரையை நிறைவு செய்கின்றேன்.

ஒரு பக்தன் காட்டிலே கடும் தவம் புரிந்தான். கையில் கதாயுதத்தோடு அவன் கண்முன்னே கடவுள் திடீரென்று தோன்றி, "பக்தா! உனக்கு என்ன வேண்டும்? கேள்!" என்றார்.

"கடவுளே! என் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கின்ற எதிரிகளை உங்கள் கதாயுதத்தால் தாக்கி வீழ்த்தி அழிக்க வேண்டும்", என்று பக்தன் வேண்டினான். கடவுளும் அவ்வாறே வரம் கொடுத்தார். சற்று நேரம் கழித்து கதாயுதம் மட்டும் காற்றில் பறந்து வந்து வரம் கேட்ட பக்தனின் மார்பைத் தாக்கியது. அதிர்ச்சியடைந்த பக்தன், குறிதவறி வந்து வரம் கேட்ட என்னையே இந்த கதாயுதம் தாக்குகிறதோ என்ற அச்சத்தில் திரும்பவும் தவம் மேற்கொண்டான். இறைவன் காட்சியளித்தார்.

"பக்தனே! நீ கேட்டபடிதான் நான் கதாயுதத்தை வீசினேன். மற்றவர்களை அழித்து நீ முன்னேற நினைக்கும் உன் மனம்தான் உனக்குப்பகை என்பதால்தான் என் கதாயுதம் உன் எண்ணத்தை அழிக்க முற்பட்டது. இப்போது உன் தீய எண்ணத்தை விட்டொழித்தாயா?", என்று கேட்டது. தர்மத்தைப் பற்றிய பேசுகிறவர்கள் அதர்மத்தைச் செய்தால், மக்கள் கதாயுதம் வடிவத்தில் வந்து பாடம் கற்பிப்பார்கள்.நன்றியோடு நடந்துகொள்வதே ஒரு தர்மம்தான்..

இந்த அரசு மாண்புமிகு அம்மா வழியில் செயல்படும் அரசு. அம்மா அவர்களின் எண்ணங்களை நிறைவேற்றும் அரசு மக்கள் நலத்திட்டங்களை அம்மாவின் வழியில் செயல்படுத்தி வரும் அரசு மக்களின் நலனுக்காகவே செயல்படும் அரசு இது உங்கள் அரசு உங்கள் நலன் பேணும் அரசு எனச் சொல்லி "மக்கள் என் பக்கம் இருக்கிறார்கள் நான் மக்கள் பக்கம் இருக்கிறேன்" என்ற புரட்சித்தலைவி அம்மாவின் பொன்மொழிக்கேற்ப இந்த அரசு

மக்களின் சேவகனாகப் பணியாற்றும் என்பதை தெரிவித்து, ஊட்டி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கோபாலகிருஷ்ணன் அவர்களும், மாநிலங்களவை உறுப்பினர் திரு.கே.ஆர்.அர்ஜுனன் அவர்களும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், உதகை பேருந்து நிலையத்தை நவீனப்படுத்தித் தரவேண்டுமென கோரிக்கை வைத்தார்கள். இந்தக் கோரிக்கை கனிவோடு பரிசீலிக்கப்பட்டு, உதகை பேருந்து நிலையத்தை மேம்படுத்தி நவீனப்படுத்த ரூபாய் 2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்ட மகளிர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 145 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூபாய் 5.76 கோடி கடன் உதவியை வழங்கினேன்.

நன்றி, வணக்கம்.

◈ ◈ ◈

**“மக்களால் இந்த அரசு**

**மக்களுக்காகவே இந்த அரசு”**

மாண்புமிகு புரட்சித்தலைவி

**அம்மா** அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின்
எழுச்சிமிகு உரைகள் 16.02.2017 - 19.05.2017